



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:110 | 05-11-2025 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

05.11.2025 ஐப்பசி 19
புதன் கிழமை

சூரிய உதயம் 6.05

திதி:
இன்று இரவு 7.27 வரை
பௌர்ணமி பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று காலை 10.14 வரை
அசுவினி பின்பு பரணி.

யோகம் :
இன்று பிற்பகல் 12.47 வரை
சித்தி பின்பு வ்யாதீபாதம்.

கரணம் :
இன்று காலை 8.35 வரை
பத்திரை பின்பு இரவு 7.27
வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.04 வரை
சித்த யோகம் பின்பு காலை
10.14 வரை யோகம் சரியில்லை
பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 10.14 வரை
உத்திரம் பின்பு அஸ்தம்.

நல்ல நேரம்
காலை 9.15 – 10.15.
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.
எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
காலை 10.30 – 12.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பீகார் தேர்தல்: முதல்கட்டமாக 121 தொகுதிகளில் பிரசாரம் நிறைவு

## நாளை வாக்குப்பதிவு

பாட்னா,நவ.5:

பிஹாரில் முதல்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிவடைந்தது. இதன் காரணமாக தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

243 தொகுதிகளைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நவம்பர் 6 மற்றும் 11-ம் தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் நவம்பர் 6-ல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 18 மாவட்டங்களில் உள்ள 121 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நேற்று மாலை 5 மணியுடன் பிரச்சாரம் முடிவடைகிறது. இந்தச் சூழலில், வாக்காளர்களை கவரும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா நேற்று போஜ்பூர் மற்றும் கயாவில் தேர்தல் பிரச்சாரங்களில் உரையாற்றுகிறார். பாதுகாப்பு



அமைச்சர் ராஜ்நாத் சிங் வைஷாலி, பாட்னா, சஹர்சா மற்றும் முங்கர் மாவட்டங்களில் நடக்கும் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுவார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தர்பங்கா, கிழக்கு சம்பாரண் மற்றும் மேற்கு சம்பாரண் மாவட்டங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி நேற்று (நவம்பர் 4) பிஹாரில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெண் தொண்டர்களுடன் கலந்துரையாடுகிறார்.

பிரதமர் மோடியின் எக்ஸ் பதிவில், "பிஹாரில் பெண்கள் சக்தி சட்டப்பேரவை தேர்தல்களில் பாஜக - தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்வதற்காக அசாதாரண ஆற்றலுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வருகிறது.

தேர்தல் பிரச்சாரத்தில் பெண்களின் பங்கேற்பு பிஹாரில் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்துகிறது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான நேற்று மகா கூட்டணியின் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் கயா மற்றும் ஔரங்காபாத்தில் பிரச்சாரம் செய்வார்கள். மகாகட்பந்தனின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி பிரசாத் யாதவ், சமஸ்திபூர், பெகுசராய், சஹர்சா, தர்பங்கா, முசாபர்பூர் மற்றும் வைஷாலி மாவட்டங்களில் உள்ள பல்வேறு தொகுதிகளில் 17 தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுகிறார். அதேபோல மகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கயாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

## பொங்கல் பண்டிகைதோறும் மகளிர்க்கு ரூ.30,000 நிதியுதவி: தேஜஸ்வி யாதவ் வாக்குறுதி

பொங்கல்பண்டிகைதோறும் மகளிர்க்கு ரூ.30,000 நிதியுதவி வழங்கப்படும் என்று மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஏற்கெனவே பெண்களுக்காக அறிவித்த திட்டங்களை தாய்மார்களும் சகோதரிகளும் அதிக அளவில் வரவேற்றுள்ளனர். வரும் ஜனவரி 14-ம் தேதி மகர சங்கராந்தி பண்டிகை வர இருக்கிறது. இது மக்களுக்கு ஒரு புதிய ஆண்டு. பெண்களுக்காக நாங்கள் அறிவித்த திட்டத்தின் கீழ் மகர சங்கராந்தியின்போது பெண்களின் வங்கிக் கணக்குகளில் தலா ரூ.30,000 வரவு வைக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் மகர சங்கராந்தியை முன்னிட்டு இந்த நிதியுதவி வழங்கப்படும். அந்த வகையில் இந்த திட்டத்தின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் நமது பெண்கள் ரூ.1.5 லட்சம் நிதி உதவி பெறுவார்கள். பணவீக்கம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிதியுதவி அவர்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

பிஹாரை கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கம். இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை முன்னேற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் அமைந்த உடன், விவசாய பாசனத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். நெல் மற்றும் கோதுமைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் கூடுதலாக முறையே ரூ.300 மற்றும் ரூ. 400 வழங்கப்படும். அரசு ஊழியர்கள், காவல்துறையினர், சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் 70 கிலோ மீட்டர் சுற்றளவில் மட்டுமே பணியிட மாற்றம் செய்யப்படுவார்கள்.

பிஹார் முழுவதும் நாங்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறோம். முதல்கட்டத் தேர்தல் பிரச்சாரத்துக்கான கடைசி நாள் இது. மக்கள் மாற்றத்துக்கான மனநிலையில் இருக்கிறார்கள். இந்த முறை பிஹாரில் 20 ஆண்டுகளாக இருக்கும் ஆட்சியை மக்கள் அகற்றுவார்கள்." என தெரிவித்தார்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி தொடங்கியது

சென்னை, நவ.5:

தமிழகம் முழுவதும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தொடங்கின. காலை 10 மணி முதல், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீடு, வீடாகச் சென்று படிவங்களை வழங்கி வருகிறார்கள்.

சென்னை, வேலூர், கோவை, ஈரோடு, திருச்சி, மதுரை போன்ற தொழில் நகரங்களில், பெரும்பாலானவர்கள் வேலைக்குச் சென்றுவிடுவதால், வீடுகள் பூட்டியிருப்பதாலும், ஏராளமானோர் முகவரி மாற்றப்பட்டிருப்பதாலும் உரியவர்களிடம் படிவங்கள் கொடுப்பதில் சிக்கலை சந்திப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு வாக்காளரின் முகவரிக்குச் சென்று அவர் அங்கு இல்லாவிட்டால், அவர்களுக்கு எவ்வாறு அந்த படிவத்தை வழங்குவது என்பதிலும், ஒரு முகவரியில் இருப்பவர்கள் வீடு மாறிவந்து அங்கே வசித்து வந்தால், அவர்களது வாக்காளர் அட்டை முகவரி வேறு இடத்தில் இருந்தால் அவர்களுக்கு எவ்வாறு படிவம் வழங்குவது என்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும், முகவரி மாறியவர்களுக்கு, வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாது என்றால், கிட்டத்தட்ட பாதிக்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் இருக்காது என்பதுதான் பொருள். ஒருவேளை, இறுதி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாவிட்டாலோ, சேர்க்கப்பட்டு ஏதேனும் குளறுபடிகள் இருந்தாலோ அதனை எவ்வாறு சரி செய்வது என்பதில் மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

மீண்டும், அலுவலர்கள் வீட்டுக்கு வரும்போது, பூர்த்தி செய்த ஆவணங்களைக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியிருப்பின், மீண்டும் அலுவலர்கள் வீட்டுக்கு வரும்போது, வீட்டில் ஆள் இல்லாமல், ஆவணங்களைக் கொடுக்க முடியாமல் போகும் அபாயம் இருக்கிறது. முகவரி மாறிய வாக்காளர்களின் வீடுகளில் புதிதாக வாக்காளர் பெயர் சேர்ப்பதற்கான வழிமுறைகளிலும் தற்போது மிகப்பெரிய சிக்கல் நிலவுகிறது என்று மக்கள் குழப்பம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழகம், புதுச்சேரி உள்பட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் வாக்காளா் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆா்) பணியை தோ்தல் ஆணையம் இன்று தொடங்கியது.

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்கம் ஆகிய 4 மாநிலங்களில் அடுத்த ஆண்டு பேரவைத் தோ்தல் நடைபெறும் நிலையில், அவசர அவசரமாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்ள அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், இன்று காலை பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. வாக்காளா் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து தோ்தல் துறை கூறியதாவது: தமிழகத்தில் வாக்காளா் கணக்கெடுப்புப் பணி செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது.

அந்தப் பட்டியலில் பெயா் இருப்பவா்களின் வீடுகளுக்கு அலுவலா்கள் சென்று, அவா்களின் விவரத்தைக் கேட்டு வாக்காளா் கணக்கெடுப்புப் படிவத்தை வழங்குவாா்கள். அந்த வீட்டில் 18 வயது நிரம்பியவா்கள் இருந்தால் அதற்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் உறுதிமொழிப் படிவத்தை வழங்குவாா்கள். அவற்றை உடனடியாகப் பூா்த்தி செய்து தர வேண்டியது அவசியம் இல்லை.

அடுத்த முறை வாக்குச்சாவடி அலுவலா்கள் வரும்போது ஆவணங்களுடன் அவற்றைச் சமா்ப்பித்தால் போதும். இதற்காக வாக்குச்சாவடி அலுவலா்கள் ஒரு வீட்டுக்கு மூன்று முறை வருவா். 2002 மற்றும் 2005-ஆம் ஆண்டு வாக்காளா் பட்டியலில் பெயா் இல்லாதவா்கள் தங்களது பெற்றோா், தாத்தா, பாட்டி பெயா்கள் இருந்தால் அதைத் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய ஆவணங்களைக் காட்டி டிசம்பா் 9-ஆம் தேதி வெளியாகும் வரைவு வாக்காளா் பட்டியலில் இடம்பெறலாம். முகவரி மாற்றம் எதுவும் இருந்தால் வரைவு வாக்காளா் பட்டியலில் பெயா் இடம்பெறாது. முகவரி மாறியவா்களும், 18 வயது நிரம்பிய புதிய வாக்காளா்களும் அதற்கான ஆவணங்களை டிச. 7-ஆம் தேதி முதல் ஜன. 3-ஆம் தேதிக்குள் சமா்ப்பித்து 2026, பிப்ரவரி 7-ஆம் தேதி வெளியாகும் இறுதி வாக்காளா் பட்டியலில் தங்கள் பெயரை இடம்பெறச் செய்யலாம் என்று தோ்தல் துறை அதிகாரிகள் தெரிவித்தனா்.

## சத்தீஸ்கரில் 2 ரயில்கள் மோதி விபத்து: 5 பேர் பலி

பிலாஸ்பூர், நவ.5:

சத்தீஸ்கரின் பிலாஸ்பூர் பகுதியில் இருந்து கோர்பாவுக்கு பயணிகள் ரயில் சென்றுகொண்டிருந்தபோது, அதே தண்டவாளத்தில் சரக்கு ரயில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால் சரக்கு ரயிலின் கடைசிப் பெட்டியின் மீது பயணிகள் ரயிலின் முதல் பெட்டி மோதி விபத்துக்குள்ளானது.

இது குறித்து பிலாஸ்பூர் ஆட்சியர் கூறியதாவது, இதுவரை விபத்து நடந்த இடத்திலிருந்து 5 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. ரயில்வே மற்றும் பிலாஸ்பூர் மாவட்ட நிர்வாகமும் விபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. சிலர் ரயில் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். விபத்தில் காயமடைந்த பயணிகள் சுற்றியுள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு ரூ. 10 லட்சமும், படுகாயமடைந்தவர்களுக்கு ரூ. 5 லட்சமும், லேசான காயமடைந்தவர்களுக்கு ரூ. 1 லட்சமும் நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐப்பசி மாத பவுர்ணமியையொட்டி அன்னாபிஷேக அலங்காரத்தில் அண்ணாமலையார்



திருவண்ணாமலை, நவ.5:

திருவண்ணாமலையில் ஐப்பசி மாத பவுர்ணமியையொட்டி அண்ணாமலையாருக்கு நேற்று மாலை அன்னாபிஷேகம் நடைபெற்றது.

அக்னி தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் நடைபெறும் உற்சவங்கள் மற்றும் விழாக்களில் பிரசித்தி பெற்ற ஒன்று அன்னாபிஷேகம். ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் பவுர்ணமி நாளில் அஸ்வினி நட்சத்திரத்தின்போது அண்ணாமலையாருக்கு அன்னத்தால் அபிஷேகம் செய்வது வழக்கம். அதன்படி ஐப்பசி மாத பவுர்ணமி இன்றிரவு 9.45 மணிக்கு தொடங்கி நாளை இரவு 7.27 மணிக்கு நிறைவடைகிறது. இந்த நேரத்தில் கிரிவலம் செல்லலாம் என கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அன்னாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

இதையொட்டி மாலை 3 மணி முதல் 6 மணி வரை கோயில் நடை அடைக்கப்பட்டது. சுவாமிக்கு அன்னத்தாலும், உண்ணாமுலையம்மனுக்கு காய்கறிகள் மற்றும் பழங்களாலும் அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டு 6 மணிக்கு பிறகு பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். சுவாமிக்கு அன்னம் சாத்தும்போது பக்தர்கள் தரிசனம் செய்வது மரபு கிடையாது என்பதால் 3 மணி நேரம் தரிசனம் ரத்து செய்யப்படும்.

அன்னாபிஷேகத்தில் சுவாமியை தரிசிக்க பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால் நேற்றும், இன்றும் முன்னுரிமை தரிசனங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் நீண்ட நேரம் பக்தர்கள் வரிசையில் காத்திருப்பதை தவிர்க்க ராஜ கோபுரம் வழியாக ஒற்றை வழி வரிசை நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது தரிசனம் மட்டும் அனுமதிக்கப்படும். பவுர்ணமி என்பதால் கட்டண தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய கோயிலில் குவிந்தனர். இவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமியை தரிசனம் செய்து வருகின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களிலும் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வந்து அண்ணாமலையாரை தரிசனம் செய்வார்கள் என்பதால் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிவறை, சிறப்பு பஸ் போன்ற அடிப்படை வசதிகளை மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது.








## திருக்குறள் குறள்-430

**அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்**



அறிவுடையவர் (வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர், அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

## சிந்திக்க ஒரு நொடி



உறவுகளிடம் பேச வைப்பதும்
பணம்தான் உறவுகளிடம்
பேசவிடாமல் விலக்கி
வைப்பதும்
பணம் தான்
உறவுகளை
தீர்மானிப்பதும் பணம்
தான்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## காட்பாடி சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர்உதயநிதி




வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர்உதயநிதி பேசினார். உடன் எம்பிக்கள் ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த் உள்ளனர்,

## மணி விழா காணும் தருமபுரம் ஆதீனம்



மணி விழா காணும் தருமபுரம் ஆதீன கர்த்தரை முஸ்லிம் ஜமாஅத்தார்கள். கவுரவித்தனர்.

## கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம்

**ராணிப்பேட்டை,நவ.5:** ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டப்பேரவைத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நேற்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை கூட்டத்தை நடத்தினார்.

இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி, அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி மற்றும் மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரபு கஜேந்திரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.




## அரசு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி வழங்கினார்



வேலூர் மாவட்டத்தில் ரூ. 11.80 கோடி மதிப்பீட்டிலான 31 முடிவுற்ற திட்டப்பணிகளை துணை முதலமைச்சர் உதயநிதி திறந்து வைத்து, 49,021 பயனாளிகளுக்கு 414.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## நெல்லையப்பர் கோயிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா கொடியேற்றம்



திருநெல்வேலி காந்திமதி அம்பாள் உடனுறை நெல்லையப்பர் கோயிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

## சீர்காழி அருகே திருச்சிற்றம்பலம் ஶ்ரீசீதளா மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

**சீர்காழி , நவ , 05:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா அரசூர் வட்டம் திருச்சிற்றம்பலம் கிராமம் ஶ்ரீ சித்தி விநாயகர், ஶ்ரீ சீதளா என்னும் மகா மாரியம்மன் ஆலய கும்பாபிஷேகப் பெரு விழா நடைப்பெற்றது.

திருச்சிற்றம்பலத்தில் அன்னை பராசக்தியின் அம்சமாய் விளங்கும் அருள்மிகு ஶ்ரீசீதளா எனும் மகாமாரியம்மன் கோயில் கொண்டு எழுந்தருளி அன்பர்களுக்கு வேண்டும் விரங்களை விரைந்து வழங்கி வரும் மாரியம்மனின் இவ்வழகிய திருக்கோயிலில், 37 ஆண்டுகளுக்குப் பிறகு, திருப்பணிகள்செய்விக்கப்பெற்று. சுதைகள் செப்பனிடப் பெற்று, வண்ணம் தீட்டப்பெற்றுப் புதுப்பொலிவோடு திரயோதசி திதி உத்திரட்டாதி நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் தனுர் லக்னத்தில் தருமை ஆதீனம் 27-வது குருமகா சன்னிதானம் ஶ்ரீலஶ்ரீகயிலை மாசிலாமணிதேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் அருளாசியுடன் மற்றும் வைத்தீஸ்வரன்கோவில் ஶ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம் ஶ்ரீ மத் திருநாவுக்கரசு தம்பிரான் ஸ்வாமிகள் அவர்களின் ஆசியுடன் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது .

விழா ஏற்பாடுகளை அறங்காவலர் வி.ராமலிங்கம் பிள்ளை மற்றும் குல தெய்வகாரர்கள், ஊர் கிராமவாசிகள் செய்தார்கள். 4ம் தேதி செவ்வாய்கிழமை முதல் 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது.



## வாக்குச்சாவடிநிலை அலுவல்ர்களுக்கான பயிற்சி வகுப்புகள்



**விழுப்புரம், நவ.5:** விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடிநிலை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள் செஞ்சி, மயிலம், திண்டிவனம், வானூர்,திருக்கோவிலூர் ஆகிய 5 தொகுதிகளில் நேற்று நவம்பர் 3 நடைபெற்ற நிலையில் பணிகளை வாக்குச்சாவடி முகவர்கள் திறம்பட மேற்கொள்ள வேண்டும் என விழுப்புரம் மாவட்ட ஆட்சியராகவும் தேர்தல் நடத்தும் அலுவலராகவும் உள்ள ஷேக் அப்துல் ரகுமான் தெரிவித்தார்

## வீடு வீடாக சென்று மீன்வள கணக்கெடுப்பு



தூத்துக்குடி இனிகோ நகர் கடற்கரை கிராமத்தில் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய பணியாளர்கள் வீடு வீடாக சென்று மீன்வள கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டனர்.

## பக்தர்களுக்கான போதிய அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் ஆய்வு



திருவண்ணாமலையில் ஐப்பசி மாத பவுர்ணமியை யொட்டி பக்தர்களுக்கான போதிய அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் ஆய்வு மேற்கொண்டார்.

## 50 பயனாளிகளுக்கு மின்னணு நல வாரிய அட்டை



செங்கல்பட்டில் நேற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 50 பயனாளிகளுக்கு மின்னணு நல வாரிய அட்டைகளை அமைச்சர் தா. மோ. அன்பரசன் வழங்கினார். கலெக்டர் சினேகா, செங்கல்பட்டு எம்.எல்.ஏ வரலட்சுமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சுந்தர் உடன் உள்ளனர்.

## மூன்றாம் கால யாக சாலை பூஜை



**விழுப்புரம்,நவ.5:** விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் அடுத்த ஓதியத்தூர் மாரியம்மன் கோவிலில் நேற்று நவம்பர் 3 காலை 6 மணிக்கு மூன்றாம் கால யாக சாலை பூஜை நடந்த நிலையில் ,காலை 10 மணிக்கு கடம் புறப்பாடாகி சுந்தர விநாயகர் அங்காளபரமேஸ்வரி மீனாட்சி சுந்தரேஸ்வரர் உள்ளிட்ட கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஓதியத்தூர் கீழ்வாலை, மேல்வாலை, கண்டாச்சிபுரம் பகுதியில் இருந்து திரளான அளவில் பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்.

## வாக்குச்சாவடி முகவர்களுக்கான எஸ்ஐஆர் பயிற்சி



சேலத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்களுக்கான எஸ்ஐஆர் பயிற்சி கூட்டத்தில் கலெக்டர் பிருந்தாதேவி ஆலோசனை வழங்கினார்.



## உதயநிதி கோப்பை கிரிக்கெட் போட்டி அமைச்சர் கீதா ஜீவன் துவக்கி வைத்தார்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக மாநகர இளைஞரணி சார்பில் உதயநிதி கோப்பை கிரிக்கெட் போட்டியை அமைச்சர் கீதா ஜீவன் துவக்கி வைத்தார்.

## ஓய்வின்றி கட்சி பணியாற்றி வரும் மாவட்ட நிர்வாகிகளுக்கு பரிசு



கோவை மாநகர மாவட்டத்தில் ஓய்வின்றி கட்சி பணியாற்றி வரும் திமுக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட நிர்வாகிகளுக்கு திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் மீனா ஜெயகுமார் தேநீர் விருந்து அளித்து, பரிசு வழங்கி பாராட்டினார்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் கோயிலில் தங்கப் புதையல் கிடைத்தது அறிந்து ஆய்வுப் பணி

**திருவண்ணாமலை, நவ.5:** திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை ஒன்றியம் கோவிலூர் ஊராட்சியில் உள்ள ஆதி சிவன் கோயிலில் நேற்றைய தினம் புதிய கோயில் கட்டுவதற்காக பள்ளம் தோண்டும் பொழுது கிடைக்கப்பெற்ற புதையல் கிடைத்த இடத்தில் நேற்று நேரில் சென்று கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு.பெ.சு.தி. சரவணன் அவர்களுடன், ஜவ்வாது மலை வட்டாட்சியர் P. துரை அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் த. செந்தில் குமார் அவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் க.ஆனந்தன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் மேலும் புதையலையும் ஆய்வு மேற்கொண்டார்கள்.



இ பேப்பர் செய்தியாளர்
தமிழ்நாடு நிர்மலா ஶ்ரீதர் திருவண்ணாமலை

## தவெக தலைவர் விஜய் பிரசார வாகனத்தை ஆய்வு செய்ய சிபிஐ அதிகாரிகள் திட்டம்



**சென்னை, நவ.5:**

கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி அன்று மேற்கொண்ட பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான வழக்கை சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள். சம்பவம் நடைபெற்ற கரூர் வேலுச்சாமிபுரம் பகுதி சி.பி.ஐ. அதிகாரிகளின் விசாரணை வளையத்தில் வைக்கப்பட்டு உள்ளது.

கரூரில் சி.பி.ஐ. அதிகாரிகள் முகாமிட்டு விசாரணை நடத்தி வரும் வேளையில் சி.பி.ஐ. அதிகாரிகளின் ஒரு குழு சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் விஜய் பிரசார வாகனத்தை விரைவில் ஆய்வு செய்து, அதில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை கைப்பற்ற திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்த வழக்கில் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், இணை செயலாளர் நிர்மல்குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் ஆகியோர் பெயர்களை சி.பி.ஐ. அதிகாரிகள் சேர்த்துள்ளனர். விஜய்யின் பிரசார வாகன ஆய்வின்போது, த.வெ.க. அலுவலகத்தில் வைத்து புஸ்சி ஆனந்த், நிர்மல்குமாரிடம் விசாரணை நடத்துவதற்கும் சி.பி.ஐ. அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## மாரியம்மன் கோவிலுக்கு சீர்வரிசை எடுத்து வந்த இஸ்லாமியர்கள் - நெகிழ வைத்த மதநல்லிணக்கம்



**நாமக்கல், நவ.5:**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டை அடுத்த கொக்கராயன்பேட்டையில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீசுயம்பு மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் கோவில் நிர்வாகம் சார்பில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊர் பொதுமக்கள் முளைப்பாரி எடுத்து ஊர்வலமாக வந்தனர்.

இதனைத் தொடர்ந்து கோவில் விழாக் குழுவினர் காலங்காலமாக தொன்று தொட்டு நடைபெற்று வரும் பாரம்பரிய முறைப்படி, மேளதாளங்கள் முழங்க கோவில் அருகில் உள்ள அல் முகமதியா ஜாமியா மஸ்ஜித் பள்ளிவாசலுக்குச் சென்று, அங்கிருந்த ஜமான் பெரியவர்களிடம் கும்பாபிஷேக விழாவிற்கு அழைப்பு விடுத்தனர்.

இதையடுத்து பள்ளிவாசல் முத்தவல்லி ஜலீல் தலைமையில் சுமார் 50-க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள், அன்னதானத்திற்கான ரொக்கப்பணம் ரூ.1 லட்சம், சந்தனம், மாலை, பழங்கள் உள்ளிட்ட 9 வகையான சீர்வரிசைப் பொருட்களை ஊர்வலமாக எடுத்து வந்து கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். அந்த சீர்வரிசைப் பொருட்களை கோவில் நிர்வாகத்தினர் பெற்றுக் கொண்டு, அம்மனுக்கு சிறப்பு பூஜை செய்தனர். மதநல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழும் இந்த நிகழ்வு காண்போரை நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

## மாதவரம் மண்டலத்தில் ரூ.1.49 கோடி மதிப்பிலான புதிய விளையாட்டு மைதானம் - மேயர் திறந்து வைத்தார்



**சென்னை. நவ.5:**

மேயர் பிரியா, மாதவரம் மண்டலம், வார்டு-28க்குட்பட்ட கொல்கத்தாஷாப் தெருவில் மூலதன நிதியின் கீழ், ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, கால்பந்து வீரர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

35,241 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டு மைதானத்தில் கால்பந்து, கைப்பந்து, பூப்பந்து, கபடி மற்றும் குழந்தைகள் விளையாட்டு மைதானங்கள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், கண்காணிப்பு கேமரா ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் முத்துமாரியம்மன் கோவில் தெரு, உடையார் தோட்டம், பாண்டியன் தெரு, திருவள்ளுவர் தெரு ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்கள் பயனடைவார்கள்.

இதனைத் தொடர்ந்து மேயர் , எம்.ஜி.ஆர். நகரில் உள்ள ரெட்டேரியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர், மதகு பராமரிப்புப் பணி, ஏரியிலிருந்து வெளியேறும் நீர் தடையின்றி செல்வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்புகள் குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஏரியின் உபரிநீர் வெளியேறும் கால்வாய் பகுதிகளில் கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-23க்குட்பட்ட மாதவரம் ரெட்ஹில்ஸ் பிரதான சாலையில் புழல் உபரிநீர் செல்லும் கால்வாயில் இணைக்கப்பட்டுள்ள வி.எஸ். மணி நகரிலிருந்து எம்.ஆர்.எச். சாலை வரை புதிதாக கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கட்டமைப்புகளையும், மோட்டார் மூலம் மழைநீர் வெளியேற்றப்படுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வுசெய்து, வடகிழக்குப் பருவமழையை ஏதிர்கொள்வதற்கு அனைத்து நிலையிலும் தயார்நிலையில் இருந்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ரூத் 2.0 திட்ட நிதியில் ரூ.4.73 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொழில் நுட்ப முறையில் கரைகளைப்பலப்படுத்துதல், தடுப்புச் சுவர் கட்டுதல், ஏரி வரத்துக் கால்வாய், ஏரி வடிகால் ஆகிய புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். இப்பணிகள் அனைத்தும் நிறைவுற்ற பின் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபாதை அமைத்தல், குழந்தைகள் விளையாட்டுத் திடல் ஏற்படுத்துதல், பூங்கா ஏற்படுத்துதல், ஏரியில் படகு சவாரி ஏற்படுத்துதல், பசுமை வெளி அமைத்தல் உள்ளிட்ட கட்டமைப்புகளை ஏற்படுத்தி மணலி ஏரியினை சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

## ஆண்டுக்கு ரூ.3 கோடி வசூலாகியும் உதவியின்றி ஆவண எழுத்தர்கள் தவிப்பு

**சென்னை, நவ.5:**

பத்திரப்பதிவு செய்வோரிடம் இருந்து, ஆண்டுக்கு, 3 கோடி ரூபாய்க்கு மேல் ஆவண எழுத்தர் நல நிதி வசூலானாலும், அதை பயன்படுத்தி, நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணிகள் இன்னும் துவங்கவில்லை என, புகார் கூறப்படுகிறது.

தமிழகத்தில், 587 சார் - பதிவாளர் அலுவலகங்களில், ஆண்டுக்கு, 30 முதல், 35 லட்சம் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. பத்திரங்களை தயாரித்து கொடுக்க, ஆவண எழுத்தர்கள் உள்ளனர்.

தேர்வு இல்லை தற்போதைய நிலவரப்படி, மாநில உரிமம் பெற்றவர்கள், 2,512; மாவட்ட உரிமம் பெற்றவர்கள், 1,828; உப மாவட்ட உரிமம் பெற்றவர்கள், 273 என மொத்தம், 4,613 பேர் ஆவண எழுத்தர்களாக செயல்படுகின்றனர்.

புதிய உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடத்தப்படும் என்று அரசு தெரிவித்தது; இதுவரை தேர்வு நடத்தப்படவில்லை. இதனால், புதிதாக யாரும் உரிமம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆவண எழுத்தர்கள் நலனை பாதுகாக்கும் வகையில், ஆவண எழுத்தர்கள் நல நிதியம் ஏற்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. இதன்படி, 2021ல் ஆவண எழுத்தர் நல நிதியம் ஏற்படுத்தப்பட்டது.

இதற்கான நிதி ஆதாரம் கிடைக்க, சார் - பதிவாளர் அலுவலகத்தில் தாக்கலாகும் ஒவ்வொரு பத்திரத்துக்கும், 10 ரூபாய் வீதம் ஆவண எழுத்தர் நல நிதி வசூலிக்கப்படும் என, அறிவிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில், ஆண்டுக்கு, 3 கோடி ரூபாய் வசூலாகி உள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால், இந்த நிதியை பயன்படுத்தி, ஆவண எழுத்தர்களுக்கு என்ன உதவிகள் வழங்கப்பட்டன என்ற கேள்வி எழுந்துஉள்ளது.

இதுகுறித்து, ஆவண எழுத்தர்கள் கூறியதாவது:

ஆவண எழுத்தர் நல நிதியை பயன்படுத்த, பதிவுத்துறை தலைவர் தலைமையில், 2022ல் குழு அமைக்கப்பட்டது. தற்போதைய நிலவரப்படி, ஆவண எழுத்தர் நிதியத்தில், 3,072 பேர் உறுப்பினர்களாக இணைந்துஉள்ளனர்.

ரூ.10 கோடி உறுப்பினர்களாக இணைய ஒவ்வொருவரிடம், 1,000 ரூபாய் வசூலிக்கப்படும். அத்துடன், பத்திரப்பதிவில் வசூலிக்கும் நிதியையும் சேர்த்து, 10 கோடி ரூபாய்க்கு மேல் உள்ளதாக கூறப்படுகிறது.

இதில் நல நிதியை பயன்படுத்தி, ஆவண எழுத்தர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், இன்னமும் அதற்கான குழு கூட்டம் நடத்தப்படவில்லை. இதனால், ஆண்டுக்கு 3 கோடி வசூலாகியும் நலத்திட்ட உதவிகள் கிடைக்காத நிலை உள்ளது.

## மண்ணச்சநல்லூர் பூமிநாதர் கோவிலில் கும்பாபிஷேகம்- திரளான பக்தர்கள் தரிசனம்

**திருச்சி, நவ.5:**

விமான கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

திருச்சி அருகே உள்ள மண்ணச்சநல்லூர் நகரத்தில் உள்ளது பூமிநாதர் திருக்கோவில். இந்த திருத்தலத்தின் முழுமையான பெயர், “அறம் வளர்த்த நாயகி (தர்மசம்வர்த்தினி) உடனுறை பூமிநாத சுவாமி” ஆலயம். பூமி சம்பந்தமான 16 வகையான தோஷங்களை நிவர்த்தி செய்யும் பரிகாரத் தலமாகத் திகழ்கிறது. திருச்சி மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 21 கி.மீ. தொலைவில் இக்கோவில் அமைந்துள்ளது.

பிரசித்தி பெற்ற இக்கோவில் பழுதடைந்து இருந்ததால்



அதை பழமை மாறாமல் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து பாலாலயம் நடத்தப்பட்டு ராஜகோபுரம், விநாயகர், தர்மசம்வர்த்தினி உடனுறை ஸ்ரீபூமிநாதசுவாமி மற்றும் அனைத்து பரிவார தெய்வங்களின் விமான கோபுரங்கள் அழகுற அமைக்கப்பட்டது.

திருப்பணிகள் நிறைவடைந்ததையடுத்து கும்பாபிஷேக விழா தொடங்கியது. இதையொட்டி கடந்த 30-ந்தேதி அனுக்ஞை, மற்றும் விக்னேஸ்வர பூஜை நடைபெற்றது.

31-ந்தேதி அங்குரார்பணம், ரக்ஷாபந்தனம் நடைபெற்றது.

1-ந்தேதி கொள்ளிடம் ஆற்றில் இருந்து ஏராளமான பக்தர்கள் புனித நீர் எடுத்து வந்தனர்.

தொடர்ந்து கஜபூஜை, அசுவபூஜை, கோபூஜை, அக்னி சம்கிரகணம், தீபாராதனை மற்றும் பரிவார தெய்வங்களுக்கு கலாகர்ஷனம் நடைபெற்றது. மாலையில் முதல் காலபூஜை நடைபெற்றது. தொடர்ந்து நேற்று இரண்டாம் காலயாக சாலை பூஜையும், மாலையில் மூன்றாம் கால யாகபூஜை நடைபெற்றது.

இன்று காலை 6 மணிக்கு மேல் நான்காம் கால யாக பூஜையும், தொடர்ந்து கஜபூஜை, அசுவபூஜை, கோபூஜை, நாடிசந்தனம் உள்ளிட்டவை நடைபெற்றன.

தொடர்ந்து மகா பூர்ணாஹுதியும், 9.30 மணிக்கு மேல் கடம் புறப்பாடும் நடைபெற்றது.

தொடர்ந்து ஆலயத்தில் உள்ள அனைத்து விமானங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படடது.

விமான கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### கால்சியம் என்றாலே பால் மட்டும்தானா?

தற்போது பெண்கள், குழந்தைகள், ஆண்கள், பெரியவர்கள் என வித்தியாசம் இன்றி அனைவருக்கும் தேவைப்படும் ஒரே விஷயம் எலும்புகளுக்கு வலு சேர்க்கும் கால்சியம்தான்.

கால்சியம் என்றதுமே நமது நினைவுக்கு வரும் ஒரே பொருள் பால் தான். பாலில் அதிக அளவு கால்சியம் இருக்கிறது என்று நம்மிடையே வலியுறுத்தப்பட்டு தற்போது பாலில் மட்டுமே கால்சியம் இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கிறோம்.

சரி, பாலில் கால்சியம் இல்லையா? என்றால் நிச்சயம் உண்டு. ஆனால், சிலருக்கு பால் அலர்ஜி ஏற்படுவது உண்டு. சரி, பாலுக்கு பதிலாக கால்சியம் அதிகம் உள்ள உணவுகளாக நம் வீட்டில் உள்ள இந்த 6 பொருள்களை மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். அவை உங்களுக்காக ..

1. ராகி:

100 கி ராகியில் 344 மி.கி கால்சியம் இருக்கிறது. நீரிழிவு இருப்பவர்களுக்கும் மற்றும் வளரும் குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் என ராகியை அனைவரும் எடுத்துக் கொள்ளலாம். தோசை, கஞ்சி, களி என எவ்வகையிலும் ராகியை வாரம் இருமுறையாவது சேர்த்துக் கொள்வது நல்லது. உடல் பலம், மூட்டு வலி நீக்கம் போன்றவற்றிற்கு ராகி ஏற்ற உணவாக உள்ளது.

2. கொள்ளு:

100 கி கொள்ளில் 287 மி.கி கால்சியம் இருக்கிறது. இந்த கொள்ளு எலும்புகளை வலுவாக்குவதுடன் நமது உடலில் சேரும் கொழுப்புகளை கரைத்து உடல் வடிவை சீராக்கும். செரிமானத்துக்கு ஏற்றதாகவும் உள்ளது. மழைக்காலங்களில் உடல் கதகதப்பை பெறவும்; மூட்டுகள் முறையாக இயங்கவும் உதவுகிறது. ரசம், சுண்டல் பொடி என கொள்ளை நமது உணவுகளில் சேர்த்துக் கொள்வது மிக நல்லது.

3. கருவேப்பிலை:

நாம் தூக்கிப்போடும் அதே கருவேப்பிலையில் அதிக அளவு உள்ளது கால்சியம். 100 கி கருவேப்பிலையில் 830 மி.கி கால்சியம் இருப்பதாக சொல்கிறார்கள். இவ்வளவு அதிகம் இருக்கும் இந்த கருவேப்பிலையை நாம் இனி தூக்கி போடுவோமா?

முடி வளர்ச்சி, நரம்பு வலிமை, முகப்பொலிவு, ஆற்றல், ஆரோக்கியம் என பல விதங்களில் கருவேப்பிலை உடல் நலனை பாதுகாக்கிறது. மோருடன் கறிவேப்பிலையை பொடி செய்து சாப்பிட்டால் மலச்சிக்கலுக்கு தீர்வாகிறது என்கின்றனர். கருவேப்பிலையை பொடி துவையல் என செய்து அன்றாடம் நமது உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

3. முருங்கைக்கீரை:

சாதாரணமான முருங்கைக்கீரையில் கால்சியம் அதிக அளவில் இருக்கிறது. 100 கி முருங்கைக்கீரையில் 400 மி.கி கால்சியம் இருக்கிறது. முக்கியமாக வளரும் குழந்தைகளுக்கும் மெனோபாஸ் நிலையில் இருக்கும் பெண்களுக்கும் இரும்பு சத்து உள்ள இந்த முருங்கைக்கீரை மிகவும் நன்மை செய்கிறது. வாரம் இருமுறை நம் உணவில் முருங்கைக்கீரை சேர்க்கும்போது கால் வலி, மூட்டு வீக்கம், உடல் பலம், ஆற்றல் போன்றவை குணமாகும். முருங்கைக்கீரை பொரியல், சூப் போன்றவை செய்து சாப்பிடலாம் .

5. கருப்பு எள்ளு:

100 கி கருப்பு எள்ளில் 975 மி.கி கால்சியம் உள்ளது. நீர்க்கட்டிகள், ஒழுங்கற்ற மாதவிடாய் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு கருப்பு எள்ளு ஒரு மிகச்சிறந்த தீர்வு ஆகிறது. எலும்பு முறிவு பிரச்சனைக்கு கருப்பு எள்ளு நிவாரணம் அளிக்கிறது. வாரம் ஒரு முறையேனும் பொடி அல்லது உருண்டையாக சேர்த்துக் கொள்ள வேண்டும். இதைப் போலவே வெள்ளை எள்ளிலும் கால்சியம் உள்ளது. ஒரு ஸ்பூன் வெள்ளை எள்ளில் அரை டம்ளர் பாலை விட அதிக கால்சியம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

6. பாதாம்:

தினமும் இரவு படுக்கும்போது நான்கிலிருந்து ஐந்து பாதாம் பருப்புகளை ஊற வைத்து காலையில் எழுந்ததும் சாப்பிடும் போது நிறைந்த ஞாபக சக்தி, எலும்பு பலம், இயற்கையாகவே நமக்கு கிடைக்கிறது.

# மதுப்பழக்கமும், போதை கலாசாரமும் கொடூர குற்றங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றன - வைகோ



**சென்னை, நவ.5:**
கோவை மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் அதிர்ச்சியையும், துயரத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது என வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

"கோவையில் உள்ள கலைக் கல்லூரியில் முதுகலை முதலாம் ஆண்டு பயின்று வரும் மதுரையைச் சேர்ந்த மாணவி நேற்று இரவு கோவை விமான நிலையம் பின்புறம் உள்ள பிருந்தாவன் நகரில் தனது ஆண் நண்பருடன் காரில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த மூன்று வாலிபர்கள் காரில் இருந்த இளைஞரை தாக்கிவிட்டு மாணவியை தூக்கிச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

ரத்தக் காயங்களுடன் உயிருக்குப் போராடிய இளைஞர் மயக்கம் தெளிந்து விடியற்காலை 3 மணிக்கு காவல்துறையின் அவசர உதவி எண் 100-க்கு அழைத்து தகவல் தெரிவித்திருக்கிறார். அதன் பின்னர் அங்கு விரைந்த காவல்துறையினர் அந்த இளைஞரை மீட்டு, கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி இருக்கின்றனர்.

காவல்துறையினர் தொடர்ந்து தேடியபோது அந்த மாணவி அங்கிருந்த முட்புதரில் அலங்கோலமாக உயிருக்குப் போராடிய நிலையில் துடித்ததைப் பார்த்துள்ளனர். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். கோவையில் கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு இருப்பது கடும் அதிர்ச்சியையும் தாங்கொணாத் துயரத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. காவல்துறையினர் தனிப்படை மூலம் குற்றவாளிகளை தேடி வருகின்றனர் என்ற தகவல் வந்துள்ளது. உடனடியாக அவர்களை கண்டுபிடித்து தக்க சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுப்பழக்கமும், போதை கலாசாரமும் இத்தகைய கொடூர குற்றங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றன. இதில் இருந்து தமிழ்நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் சமூகத்தின் மீது அக்கறை கொண்ட அனைவருக்கும் இருக்கிறது என்பதை கோவையில் நடந்துள்ள கொடூர நிகழ்வு உணர்த்துகிறது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






## அந்நியச் செலாவணி கையிருப்பு 69,536 கோடி டாலராகச் சரிவு!



**புதுடெல்லி, நவ.5:**
இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு அக்டோபர் 24-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 69,536 கோடி டாலராகச் சரிந்துள்ளது.

இது குறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது: நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த மாதம் 24-ஆம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 692.5 கோடி டாலர் குறைந்து 69,536 கோடி டாலராக உள்ளது. அக்டோபர் 17-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய வாரத்தில் அது 449.6 கோடி டாலர் உயர்ந்து 70,228 கோடி டாலராக இருந்தது.

அக்டோபர் 24-ஆம் தேதியுடன் நிறைவடைந்த மதிப்பீட்டு வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான வெளிநாட்டு நாணய சொத்துகள் 386.2 கோடி டாலர் குறைந்து 56,654.8 கோடி டாலராக உள்ளது. டாலர் அல்லாத யூரோ, பவுண்டு, யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் மதிப்பு ஏற்ற, இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகளாகும்.

மதிப்பீட்டு வாரத்தில் இந்தியாவின் தங்கம் கையிருப்பு 301 கோடி டாலர் குறைந்து 10,553.6 கோடி டாலராக உள்ளது. சிறப்பு வரைவு உரிமைகள் (எஸ்டிஆர்) 5.8 கோடி டாலர் குறைந்து 1,866.4 கோடி டாலராக உள்ளது. சர்வதேச நிதியத்தில் இந்தியாவின் கையிருப்பு மதிப்பீட்டு வாரத்தில் 60 லட்சம் டாலர் உயர்ந்து 460.8 கோடி டாலராக உள்ளது என்று ரிசர்வ் வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

# 5 எக்ஸ்பிரஸ் ரெயில்களில் தற்காலிக பெட்டிகள் இணைப்பு; தெற்கு ரெயில்வே அறிவிப்பு




**சென்னை, நவ.5:**
தாம்பரம்-செங்கோட்டை உள்பட 5 எக்ஸ்பிரஸ் ரெயில்களில் தற்காலிக பெட்டிகள் இணைத்து இயக்கப்பட உள்ளன என தெற்கு ரெயில்வே சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பயணிகளின் வசதிக்காக தாம்பரம்-செங்கோட்டை, தாம்பரம்-நாகர்கோவில், சென்டிரல்-திருவனந்தபுரம், சென்டிரல்-ஆழப்புலா, கோவை-ராமேசுவரம் ஆகிய ரெயில்களில் தற்காலிகமாக கூடுதல் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

*அதன்படி, தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை செல்லும் சிலம்பு எக்ஸ்பிரஸ் ரெயிலில் (வண்டி எண்.20681) ஏப்ரல் 29-ந்தேதி வரையிலும், செங்கோட்டையில் இருந்து தாம்பரம் வரும் சிலம்பு எக்ஸ்பிரஸ் ரெயிலில் (20682) ஏப்ரல் 30-ந்தேதி வரையிலும் 2-ம் வகுப்பு ஏ.சி. பெட்டி 1, 3-வது வகுப்பு ஏ.சி. பெட்டி 2, படுக்கை வசதி கொண்ட பெட்டி 3, 2-வது வகுப்பு பொதுபெட்டி 1 தற்காலிகமாக இணைக்கப்படுகிறது. கடந்த 1-ந்தேதி முதல் தாம்பரத்தில் இருந்தும், நேற்று முதல் செங்கோட்டையில் இருந்தும் கூடுதல் பெட்டி இணைத்து இயக்கப்பட்டு வருகிறது.

* தாம்பரத்தில் இருந்து நாகர்கோவில் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (22657), ஏப்ரல் 29-ந்தேதி வரையிலும், நாகர்கோவிலில் இருந்து தாம்பரம் வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (22658) ஏப்ரல் 30-ந்தேதி வரையிலும் 2-ம் வகுப்பு ஏ.சி. பெட்டி 1, 3-வது வகுப்பு ஏ.சி. பெட்டி 2, படுக்கை வசதி கொண்ட பெட்டி 3, 2-வது வகுப்பு பொதுபெட்டி 1 தற்காலிகமாக இணைக்கப்படுகிறது. கடந்த 1-ந்தேதி முதல் தாம்பரத்தில் இருந்தும், நேற்று முதல் நாகர்கோவிலில் இருந்தும் கூடுதல் பெட்டி இணைத்து இயக்கப்பட்டு வருகிறது.

*சென்னை சென்டிரலில் இருந்து ஆலப்புழா செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (22639), ஏப்ரல் 27-ந்தேதி வரையிலும், ஆலப்புழாவில் இருந்து சென்னை சென்டிரல் வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (22640) ஏப்ரல் 28-ந்தேதி வரையிலும் 2-ம் வகுப்பு ஏ.சி.பெட்டி 1 தற்காலிகமாக இணைக்கப்படுகிறது. கடந்த 1-ந்தேதி முதல் பெட்டி இணைத்து இயக்கப்பட்டு வருகிறது. * சென்னை சென்டிரலில் இருந்து திருவனந்தபுரம் சென்டிரல் செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (12695) இன்று (திங்கட்கிழமை) முதல் ஏப்ரல் 29-ந்தேதி வரையிலும், திருவனந்தபுரம் சென்டிரலில் இருந்து சென்னை சென்டிரல் வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (12696) நாளை (செவ்வாய்கிழமை) முதல் ஏப்ரல் 30-ந்தேதி வரையிலும், 2-ம் வகுப்பு ஏ.சி.பெட்டி 1 தற்காலிகமாக இணைத்து இயக்கப்பட உள்ளது.

* கோவையில் இருந்து ராமேசுவரம் வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (16618) வருகிற 4-ந்தேதி முதல் ஏப்ரல் 28-ந்தேதி வரையிலும், ராமேசுவரத்தில் இருந்து கோவை வரும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் (16617), வருகிற 5-ந்தேதி முதல் ஏப்ரல் 29-ந்தேதி வரையிலும் படுக்கை வசதி பெட்டி 1 இணைத்து இயக்கப்பட உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தூத்துக்குடியில் இருந்து வந்தே பாரத் ரயில்: உப்பு ஏற்றுமதியாளர்கள் சங்கம் கோரிக்கை



**தூத்துக்குடி, நவ.5:**
தூத்துக்குடியில் இருந்து வந்தே பாரத் ரயிலை சென்னைக்கு தினசரி இயக்க வேண்டும் என்று தன்பாடு உப்பு ஏற்றுமதியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தெற்கு ரயில்வே கோட்ட மேலாளருக்கு சங்கத்தின் சார்பில் அனுப்பியுள்ள மனுவில், "தென் மாவட்டத்தின் தொழில் நகரமான தூத்துக்குடி வர்த்தகத்திற்கு மிகவும் புகழ்பெற்ற நகரமாகும். தூத்துக்குடியில் துறைமுகம், அனல்மின் நிலையம், கார் உற்பத்தி தொழிற்சாலை, உரத்தொழிற்சாலை போன்ற பல்வேறு தொழிற்சாலைகள், மற்றும் ஏராளமான வர்த்தக நிறுவனங்கள், உப்பு ஏற்றுமதி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனால் தூத்துக்குடியில் இருந்து அதிக அளவில் வர்த்தக நோக்கத்துடன் பெருமளவு தொழில் முனைவோர்கள் சென்னை சென்று வருகின்றனர்.

மேலும் தூத்துக்குடியில் இருந்து சென்னை செல்லும் முத்துநகர் எக்ஸ்பிரஸ் ரயிலில் முன்பதிவில் காத்திருப்போர் பட்டியல் அதிகமாக உள்ளதால் சென்னைக்கு தினசரி வந்தே பாரத் ரயில் இயக்க வேண்டும். லோக்மான்ய திலக் -மதுரை வாராந்திர ரயிலை தூத்துக்குடி வரை நீட்டிக்க வேண்டும். தூத்துக்குடியிலிருந்து சென்னை வழியாக ஹைதராபாத்துக்கு இரவு நேர இரயில் இயக்கப்பட வேண்டும். இதன் மூலம் மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஆந்திரா பயணிகள் தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு வந்து செல்ல வசதியாக இருக்கும். தூத்துக்குடியில் இருந்து மதுரைக்கு உள்ளூர் (லோகல்) ரயில்கள் இயக்க வேண்டும். திருவனந்தபுரத்தில் இருந்து நாகர்கோவில், திருநெல்வேலி வழியாக ரயில்களை தினமும் இணைப்பு ரயிலகள் முலம் தூத்துக்குடிக்கு இயக்கப்பட வேண்டும். இதன் மூலம் கேரள மாநிலத்தில் உள்ள பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் மிகவும் பயன் உள்ளதாக அமையும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரவு போதை விருந்தில் பங்கேற்ற இளம்பெண்கள் உள்பட 115 பேர் கைது

**பெங்களூரு, நவ.5:**
பெங்களூரு கக்கலிபுரா பகுதியிலுள்ள ஒரு ரெசார்ட் முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் கஞ்சா, சில ஊசிகள் சிக்கியுள்ளன என்று போலீஸ் சூப்பிரண்டு சீனிவாஸ் கவுடா தெரிவித்தார்.

பெங்களூரு தெற்கு (ராமநகர்) மாவட்டம் கக்கலிபுரா போலீஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சுகாஷ் கவுடா என்பவருக்கு சொந்தமான ரெசார்ட் உள்ளது. அங்கு இரவு போதை விருந்து (ரேவ் பார்ட்டி) நடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் நேற்று அதிகாலை அந்த ரெசார்ட்டில் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

அப்போது ரெசார்ட்டில் இரவு போதை விருந்து நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் இளம்பெண்கள் உள்பட 100-க்கும் மேற்பட்டோர் இந்த போதை விருந்தில் பங்கேற்று இருந்தார்கள். அவர்கள் மது குடித்துவிட்டு போதையில் இருந்தது தெரியவந்தது. மேலும் சிலர் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. அதைத்தொடர்ந்து ரெசார்ட்டில் இருந்த 115 பேரை போலீசார் கைது செய்தார்கள்.

அவர்களில் 35 பேர் இளம்பெண்கள் என்பதும், 3 பேர் சிறுவரகள் என்பதும் தெரியவந்தது. இந்த 115 பேரும் பெங்களூருவை சேர்ந்தவர்கள் ஆவார்கள். பெங்களூருவில் இருந்து கக்கலிபுராவில் உள்ள ரெசார்ட்டுக்கு வந்து நேற்று முன்தினம் இரவில் இருந்து நேற்று அதிகாலை வரை போதை விருந்து நடத்தியது தெரியவந்துள்ளது. இதையடுத்து, கைதான 115 பேருக்கும் ராமநகரில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது.

இதுகுறித்து போலீஸ் சூப்பிரண்டு சீனிவாஸ் கவுடா நிருபர்களிடம் கூறுகையில், "கக்கலிபுராவில் உள்ள ரெசார்ட்டில் இரவு போதை விருந்தில் இளம்பெண்கள் உள்பட 115 பேர் சிக்கினார்கள். அவர்கள் மது குடித்திருப்பது தெரியவந்துள்ளது. போதைப்பொருட்கள் பயன்படுத்தினார்களா? என்பது மருத்துவ பரிசோதனையின்போது தான் தெரியவரும். ரெசார்ட் முழுவதும் நடத்தப்பட்ட சோதனையின்போது கஞ்சா, சில ஊசிகள் சிக்கியுள்ளன. என்றாலும், விருந்தில் பங்கேற்றவர்கள் போதைப்பொருட்கள் பயன்படுத்தினார்களா? என்பது பற்றியும் விசாரணை மேற்கொண்டு வருகிறோம்" என்றார்.

## கேரளாவில் இருந்து ரெக்சின் கழிவுகளை கொட்ட வந்தவருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

**கம்பம், நவ.5:**
கேரளாவில் இருந்து தேனி மாவட்டம், கம்பமெட்டு வனப்பகுதியில் ரெக்சின் கழிவுகளை கொட்ட வந்த காரை சோதனையிட்டு வனத்துறை அதிகாரிகள் உரிமையாளருக்கு ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து, எச்சரித்து அனுப்பினர்.

கேரள மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் இருந்து மருத்துவக் கழிவுகளை தமிழ்நாட்டின் பகுதிக்குள் கொண்டு வந்து சிலர் தொடர்ந்து கொட்டி வந்தனர். இதுதொடர்பாக உயர் நீதிமன்றம் தலையிட்டு உத்தரவுகள் பிறப்பித்த பிறகே மருத்துவக் கழிவுகள் கொட்டுவது குறைந்தது. இருப்பினும் இடுக்கி மாவட்டத்தில் உள்ள கட்டப்பனை, தொடுபுழா, மூவாற்றப்புழா, வண்டிப் பெரியாறு, நெடுங்கண்டம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினந்தோறும் குப்பைகளை வாகனங்களில் கொண்டு வந்து கம்பமெட்டு அடிவார காடுகளில் கொட்டிச் செல்கின்றனர். அண்மையில் விவசாயிகள் அளித்த புகாரில் மாசு கட்டுப்பாடு அதிகாரிகள் இப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். அதன் பிறகும் குப்பை கொட்டுவது தொடருகிறது.

ரூ.10 ஆயிரம் அபராதம்: நேற்று முன்தினம் கட்டப்பனை 'ஸ்ரீராம் ரெக்சின் ஒர்க்ஸ்' என்ற கடையில் சேகரமான ரெக்சின் கழிவுகளை காரின் டிக்கியில் வைத்து உரிமையாளர் சோலை ராஜா (வயது 38) கம்பமெட்டு வனப்பகுதிக்கு கொண்டு வந்தார். சோதனை சாவடியில் வனத்துறையினர் சோதனையிட்ட போது கழிவுகளை கொண்டு வந்தது தெரிந்தது. சோலைராஜாவிற்கு வனத் துறையினர் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து எச்சரித்து அனுப்பி வைத்தனர்.

கழிவுகளை கொண்டு வருவோருக்கு அபராதம் விதிப்பதுடன், அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க கலெக்டர் உத்தரவிட வேண்டும் அப்போது தான் கழிவுகள் கொட்டுவதை முழுமையாக தடுக்க முடியும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியு உள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்தம்: அச்சம் கொள்ள தேவையில்லை; சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம்

**சென்னை, நவ.5:**
சென்னை தியாகராய நகர், தாம்பரம் தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் இடம்பெறுள்ள இறந்தவர்கள், புலம் பெயர்ந்தவர்கள், தகுதியற்றவர்கள் மற்றும் இரட்டை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என அளித்த விண்ணப்பத்தை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரி, தி.நகர் முன்னாள் எம்.எல்.ஏ. சத்திய நாரணயன், மற்றும் தாம்பரம் தொகுதியை சேர்ந்த அ.தி.மு.க. வழக்கறிஞர் விநாயகம் ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி ஸ்ரீவத்சவா, மற்றும் அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான நிரஞ்சன் ராஜகோபால், ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வாக்களார் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் நடைப்பெறும். ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும் வாக்களார் சிறப்பு திருத்தப்பணிகள் பெறும்.

தற்போது தமிழகம் உள்பட 12 மாநிலங்களில் சிறப்பு திருத்த தீவிர பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அக்டோபர் 27-ந்தேதி தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில், சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. இப்பணிகள் முழுமையான வாக்காளர் பட்டியலை மாற்றியமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு வாக்களாருக்கும் படிவங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்த படிவங்களை சரி பார்த்து டிசம்பர் மாதம் 9-ந்தேதி சிறப்பு தீவிர ஒருத்த பணிகள் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். 1950 ஆண்டுக்கு பிறகு 10 முறை சிறப்பு தீவிர திருத்த பணிகள் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2005-ம் ஆண்டிற்கு பின் 20 ஆண்டுகளுக்கு பின் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ள தேவையில்லை. இப்பணிகள் எதிர்ப் பார்த்ததை விட சிறப்பாக மேற்கொள்ளப்படும் என உறுதி அளிக்கிறேன்" என்று கூறினார். இதுபோல கரூர் சட்ட மன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று உள்ள இறந்தவர்களின் பெயர்களை நீக்க கோரி முன்னாள் அமைச்சர் எம். ஆர்.விஜயபாஸ்கர் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தேர்தல் ஆணைய தரப்பு வக்கீல் சுட்டிக்காட்டினார். இந்த வாதங்களை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் இது இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் வருகிற 13-ந்தேதி விசாரணைக்கு பட்டியலிட உத்தரவிட்டனர்.

# மாணிக்கம் !



கொஞ்சநாட்களாக மாணிக்கத்துக்கு கடுமையான வயிற்று வலி கண்டது. எது சாப்பிட்டாலும் உடனே வாந்தி வரும்போல் உணர்வு ! அதனால் எதுவும் சாப்பிட பிடிக்கவில்லை .

மாணிக்கத்தின் மனைவி சுந்தரி கவலையுற்றாள். புருஷனுக்கு ஏதாவது ஒன்று ஆகிப்போனால் இரண்டு பெட்டைப் பிள்ளைகளின் கதி... நினைக்கும்பொழுதேபகீரென் றது ! பெண்களை பள்ளிக்கு அனுப்பியவள் கணவனை டாக்டரிடம் கூட்டிச் சென்று காண்பித்தாள்.

மாணிக்கத்தை நன்கு பரிசோதனை செய்த டாக்டர் , " குடிப்பழக்கம் உண்டா," எனக் கேட்க அதற்கு " ஆறு மாசமா பழக்கம் சார் !" என்றான் மாணிக்கம்.

" இதோபார்ப்பா ! உன் குடல் கெட்டுக்கிடக்கு. இனியும் நீ தொடர் ந்து குடிச்சேன்னா உன் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது. உடனே குடியை நிறுத்து !"

சுந்தரி அதிர்ச்சியுற்றாள். " டாக்டர் ! என் புருஷன் குணமாவாரா ..?" கண்ணீர் மல்க கேட்டாள்.

" நான் எழுதித்தர மாத்திரை மருந்து களை வேளை தவறாமல் சாப்பிடச் சொல்லு. கொழுப்புச் சத்து உள்ள ஆகாரங்கள் வேண்டாம். வெண் ணெய் எடுத்த நீர்மோர் நிறைய குடிக்கலாம். காரம்சாப்பிடக்கூடாது. ஒருமாசத்துக்கு மாத்திரை மருந்து எழுதித் தரேன். டியூரேஷன் முடிஞ்ச தும் வந்தால் போதும். அநேகமா சரியாகிடும். போய் வாங்க !"

டாக்டரிடம் விடைபெற்று கிளம்பி னார்கள் சுந்தரியும் மாணிக்கமும். வாசலில் இருந்த பார்மஸியில் மருந்து மாத்திரைகள், ஸிரப் பாட்டில் வாங்கிக் கொண்டாள் சுந்தரி.

" மச்சான்..பார்த்தியா ! உன்னோட குடிப்பழக்கம் எந்த நிலைமையில கொண்டு வந்து விட்டிருக்கு !"

" ஆமா..அவனவன் வருஷக்கணக்கா குடிக்குறாங்க. அவன்களுக்கு ஒண் ணும் ஆகல்ல. ஆறுமாசமாதான் நான் குடிக்குறேன்..சே! எனக்குப் போய் கேடு வந்திடுச்சே !" புலம்பினான் மாணிக்கம்.

" மச்சான் ! அவங்களப் பத்தி ஏன் கவலப்படுறே..உனக்கு வந்திருக்கும் குடல் நோய் ஆரம்பத்திலேயே கவனிச்சதால சுலபமா குணமாக்க முடியும். அதை நெனச்சி சந்தோஷ ப்படு !"

ஆறுமாதகால குடிப்பழக்கம்தான். ஆனாலும் மாணிக்கத்துக்கு சட்டெ ன்று விட்டு விட கஷ்டமாக இருந்தது. ஏதோ டி அடிகஷ்ன் ஸென்டர் என்று சொல்வார்களே ! அதில் அட்மிட் ஆகும் மொடாமுழுங்கிகள் கூட குடி க்க கொஞ்சம் கொஞ்சமாக லிக்கர் கொடுப்பார்கள். கடைசியில்தான் மொத்தமாக குடிப்பழக்கத்தை நிறுத்துவார்கள். ஆனால் டாக்டர் குடியையே தொடக்கூடாதுன்னு சொல்லிவிட்டாரே ! மாணிக்கம் அங்கலாய்த்தான்.

மாணிக்கத்தை கண்ணில் விளக்கெ ண்ணெய் விட்டுக்கொண்டு கவனி த்தாள் சுந்தரி. அவன் நார்மலாக இருந்தது நிம்மதியைத் தந்தது.

சாப்பிடும் முன்னால் மாணிக்க த்துக்கு மாத்திரை தந்தாள். அரை மணி அவகாசம் கழித்து இடியாப்பம் தந்தாள். சாப்பிடஆவலாக இருந்தது. வாந்தியின் வாசனையே இல்லை. ரசித்து சாப்பிட்டான்மாணிக்கம். கடந்த சில நாட்களாக அனுபவித்து வேதனை தீர்ந்ததில் மகிழ்ச்சிஏற்ப ட்டது. அதன் பிறகு சிரப் சாப்பிட்டான் கொஞ்சநேரம் கழித்து மற்றொரு மாத் திரை உட்கொண்டான்.

அன்று இரவு அறைக்குள் எட்டிப் பார்த்த சுந்தரி அதிர்ச்சியடைந்தாள். மாணிக்கம் தரையில் உட்கார்ந் திருந்தான். பக்கத்தில் விஸ்கி பாட்டில். கிளாஸில் ஊற்றிகொஞ்சம் கொஞ்சமாக அருந்தினான்.

" மச்சான்...என்ன இது ?காலையிலதா ன டாக்டர் படிச்சுப் படிச்சு சொன்னாரு நீ குடியைத் தொடக்கூடாதுன்னு. இப்போ குடிச்சிக்கிட்டிருக்கியே ! குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு ங்குறத நிரூபிச்சிட்டியே !அய்யோ நான் என்ன செய்வேன்..." புலம்பி சுக்குரலெடுத்து அழுதாள்.

மாணிக்கத்துக்கு சிரிப்பு வந்தது. " அடியே ! இது விஸ்கியோ பிராந்தி யோ இல்ல.அக்குவாகார்டு வாட்டர். குடிச்சுப்பாரு " என்று சுந்தரி வாயில் கிளாஸை வைக்க பருகியது ஆர்டி னரி தண்ணீர்தான் என்பது புரிந்தது.

" எதுக்கு மச்சான் விஸ்கி பாட்டில்ல தண்ணிய ஊத்திக் குடிக்குறே ?" என்று தன் கண்களை முந்தானை யால் துடைத்துக்கொண்டாள்.

" அடிப்புள்ளே ! குடியை திடீர்னு விடக் கஷ்டமாயிருந்தது. அதான் இந்த ஐடியா! தண்ணீய விஸ்கி பாட்டில்ல ஊத்திக் குடிக்கறபோது சாஷ்சாத் விஸ்கியே என் தொண்டையில இறங்கறமாதிரி திருப்தி ! எப்படி என் ஐடியா ?"

புருஷனை முறைத்த சுந்தரி , " ஆக இன்னமும் உன்னோட மனசுல குடி ஆசை இருந்துக்கிட்டே இருக்கு ! நீ எப்பதான் உன் மனசுலேர்ந்துவிட்டொ ழிக்கப்போறயோ !" புலம்பியபடி அங்கிருந்து அகன்றாள் !



-வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்,
போரூர், சென்னை 600 116

# யார் அந்த அபி?



வீட்டின் வாசலின், நிலவொளியில், ராஜாவின் தோளில் ரோஜா சாய்ந்திருந்தாள். அவர்கள் இல்லறம் பூண்டு மூன்று ஆண்டுகள் ஓடியிருக்க, "நமக்கு ஒரு குழந்தை இல்லையே மாமா," என்று ரோஜாவின் கண்களில் கண்ணீரின் திரையிட்டது. ராஜா அவளது கன்னங்களைத் துடைத்து, "அன்பு ஒன்றே நம் சொத்து. கடவுள் கைவிட மாட்டார்," என்று மௌனமாய் ஆறுதல் சொன்னான். நவீன சிகிச்சைக்கு வழியில்லாத ஏழ்மை. ஆனால், நம்பிக்கையில் அவர்கள் பணக்காரர்கள்.

சில மாதங்கள் கடந்தன. ஒருநாள், ராஜாவின் நம்பிக்கைக்குப் பரிசாக, ரோஜா கருவுற்றாள். அவர்களின் குடிசை வீடு தேவதையின் வருகைக்காகக் காத்திருந்தது. ஒரு நள்ளிரவு, ரோஜா திடீரென, "ஐயோ!" என்று அலறி, வயிற்று வலியால் துடித்தாள். ராஜா அவசரமாக அவளைப் பழைய மிதிவண்டியில் (சைக்கிள்) ஏற்றி, அருகில் உள்ள அரசு மருத்துவ மனைக்குப் பறந்தான். அங்கு இருந்த இரவு நேர செவிலியர் அபி, "இது சாதாரண வலிதான், கவலை வேண்டாம்," என்று அனுப்பி வைத்தார்.

மறுநாள் காலை, ரோஜாவின் பாதங்கள் வீங்கியிருந்ததைக் கவனித்த ராஜா, "உனக்கு என்னம்மா ஆசை?" என்று கனிவுடன் கேட்டான். அப்போது அவள் கண்கள் மின்ன, "எனக்கு மணக்க மணக்க கருவாட்டுக் குழம்புதான் வேணும், மாமா!" என்றாள். ராஜா கடைக்குப் பறந்து, கருவாடு வாங்கி வந்து, குழம்பு சமைத்தான். கருவாட்டுக் குழம்பின் வாசனையில் அவசரப்பட்ட ரோஜாவுக்கு, சாத உருண்டையில் ஒரு துண்டு கருவாட்டை வைத்து, தாயின் பரிவுடன் ஊட்டிவிட்டான். அவள், ராஜாவின் அந்த அன்பான கவனிப்பில் திளைத்திருந்தாள்.

சந்தோஷமாய் சில மாதங்கள் கடந்தன , ராஜா வேலைக்குச் சென்றிருந்த மாலை நேரம். ரோஜாவுக்கு மீண்டும் வலி வந்தது. இந்த முறை வலி மிகத் தீவிரமாக இருந்தது. திடீரென, வெப்பமான நீர் அவள் மேலாடையில் வெளியேறத் தொடங்கியது. "இது சாதாரணமாகச் சிறுநீர் கசிவுதான்," என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லி, வேலைப்பளுவில் இருக்கும் ராஜாவைக் கூப்பிடத் தயங்கினாள்.

ராஜா இரவு வீடு திரும்பியதும், ரோஜாவின் களைப்பையும், உடலில் இருந்த ஈரப் படலத்தையும் உணர்ந்தான். "என்னம்மா, முகமே மாறி இருக்கு?" என்று பதற்றத்துடன் கேட்டான். அவள், "ஒன்றுமில்லை, வலிக்குது" என்று மட்டுமே கூற முடிந்தது. விபரீதத்தை உணர்ந்த ராஜா, ஒரு வினாடியும் தாமதிக்காமல் 108-ஐ அழைத்தான். ஆம்புலன்ஸ் வந்தது அதிலிருந்து டிரைவர் இறங்கி வந்து பார்த்தார், "இவ்வளவு நீர் வெளியேறியிருக்கு! ஏன் இந்த அலட்சியம்?" என்று கோபமாகக் கத்திவிட்டு, விரைவாக மருத்துவமனைக்குக் கிளம்பினார்.

மருத்துவமனையில் செவிலியர் அபி, ரோஜாவை அவசரப் பிரிவுக்கு அழைத்துச் சென்றார். மருத்துவர் பரிசோதித்தபோது, "நீர் அளவு மிகவும் குறைவாகிவிட்டது! குழந்தைக்கு மூச்சுத் திணறல்! தாயும் சேயும் ஆபத்தில்! பெரிய மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும்!" என்று சத்தம் போட்டார்.

அபி வெளியே வந்து, கதறி அழுத ராஜாவிடம், "இரண்டு உயிரும் ஆபத்தில் இருக்கு. காப்பாற்றுவது கடினம்," என்றார். ராஜா அவர் காலில் விழுந்து, "தயவுசெய்து... என் ரோஜாவை மட்டுமாவது காப்பாற்றிக் கொடுங்கள்! அவள் என் ராணி!" என்று அழுதான். அபியின் மனதில் ஒரு தீர்க்கமான எண்ணம் ஓடியது. அவர் மருத்துவரிடம் திரும்பிச் சென்று, "சார், அவர்களை வழியில் அனுப்பினால் ஆபத்துதான். நான் என் சொந்தப் பொறுப்பில் முயற்சிக்கிறேன். இந்த ஏழைகளுக்கு நாம் செய்யும் உதவிதான் உண்மையான மனிதாபிமானம்" என்று நெஞ்சுரத்துடன் வாதாடினார். மருத்துவர் தயங்கினாலும், அபியின் நம்பிக்கைக்கு இணங்க ஒப்புக்கொண்டார்.

அபி வெளியே வந்து, சில காகிதங்களைக் காட்டி, "நம்பிக்கையோடு கையெழுத்துப் போடுங்கள். கடவுளை வேண்டிக்கொள்ளுங்கள். எல்லாம் நல்லதே நடக்கும்," என்று கூறிவிட்டு, நம்பிக்கையை விதைத்தார். இரண்டு மணி நேரம் ஓடியது. ராஜா பதட்டத்தால் அங்கும் இங்கும் நடந்தான். மனதிற்குள், தான் தெய்வமாக மதிக்கும் பெற்றோரை நினைத்து வேண்டினான். அப்போது, செவிலியர் அபி வெளியே வந்தார். ராஜா துடித்துப்போய், "சொல்லுங்கள்! என் மனைவி எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டான். அபி புன்னகையுடன், "ஐயா... உங்களுக்கு மகாலட்சுமி பிறந்திருக்கிறாள்" என்றார். ராஜா பதற்றத்துடன், "இருக்கட்டும்! என் லட்சுமி (ரோஜா) எப்படி இருக்கிறாள்?" என்று மீண்டும் கேட்டான்.

அபி கண்களில் நீர் தளும்ப, "இருவருமே சுகம் " என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார். ராஜா ஆனந்தத்தில் ஆழ்ந்தான். சிறிது நேரத்தில், அபி குழந்தையைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்து, "ஐயா, உங்கள் இளவரசி!" என்று நீட்டினார். ராஜா குழந்தையைப் பெற்று, நெற்றியில் முத்தமிட்டு, காதில் ஏதோ முணுமுணுத்தான் பிறகு ரோஜாவைப் பார்க்கச் சென்றான். அவள் முகம் களைத்திருந்தாலும், அதில் நிறைமாதத் தாயின் ஆனந்தம் இருந்தது.

சில மாதங்கள் கழித்து, மகளுக்குத் தடுப்பூசி போடுவதற்காக ரோஜா மருத்துவமனைக்கு வந்தாள். அப்போது அங்கிருந்த அபியை சந்தித்தாள், "அக்கா! எப்படி இருக்கீங்க?" என்று கேட்டாள் ரோஜா. நலம் என்றார் அபி, "குழந்தைக்கு என்ன பெயர் வைத்தீர்கள்?" என்று கேட்டார்.

ரோஜா மெல்லிய குரலில், "அவளுக்கு உயிர் கொடுத்த தெய்வத்தின் பெயர்... அவள் பெயர் 'அபி'" என்றாள். அவ்வளவுதான்! அபியின் கண்களில் நீர் வெள்ளமாய் வழிந்தது. அவர் குழந்தையை அணைத்துக்கொண்டார். "அக்கா... ஏன் அழுகிறீர்கள்?" என்று ரோஜா கேட்டாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அபி சிரிப்புடன் சொன்னார்: "இல்ல ரோஜா... என் பெயர் அபி இல்லை. என் உண்மையான பெயர் 'செல்வி'. எனக்கு 3 வயது இருக்கும் மர்மமான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்த என்னை போராடி காப்பாற்றினார்... அவர் பெயர் தான் 'அபி'. அவர் எனக்குப் புது வாழ்வு கொடுத்தார். அந்தப் பெயரைத்தான் நீ உன் மகளுக்கு வைச்சிருக்க. இந்தக் கருணைதான் என்னைக் காப்பாற்றியது; இப்போதும் உன் மகளைக் காப்பாற்றியுள்ளது. என் கண்ணீருக்கு அதுதான் காரணம்!"

ரோஜாவுக்குப் புரிந்துவிட்டது. மனிதநேயம் என்பது ஒரு சங்கிலித் தொடர். செல்வி என்ற செவிலியர், தன் நன்றியைக் கருணையால் தொடர்வதை உணர்ந்து, ரோஜாவும், தன் மகளை அணைத்தபடி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.



-டாக்டர் ப.பாண்டியராஜன்
மதுராந்தகம்




# ஊர்மிளையின் ஊமைமனம்

இரண்டாம் பாகம் 2



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## சீதையின் பேதைமை



ராமன் கூறிய பின் சீதையும் லக்குவனனும் அங்கு வருகிறார்கள். சீதையிடம் அமைச்சர் சுமந்தரன் “செய்தி உண்டோ அரண்மனைக்கு?” என்று கேட்க, அவளும் கூறுவாள் “அரசருக்கு, அத்தையர்க்கு என்னுடைய வணக்கம் முன் இயம்பி!” என்ற போது ஊர்மிளா அவள் அருகில் வந்து “இதனை எங்கு கற்றாய்?” அன்னையர் என்று அழைக்கப்பட வேண்டியவர் தானே உன்னால் அத்தையர் என்று அழைக்கப்பட்டவர். ஏன் இவ்வாறு கூறினாய்?” என்று கேட்க நினைத்து வாயைத் திறப்பதற்குள், அவள் கூறிய சொற்கள் சிறு குழந்தைத்தனம் நிரம்பப் பெற்ற குமரியின் மனம்போல் இருப்பதை எண்ணி வியந்தாள் ஊர்மிளா.

“யானுடை பொன்னிறப் பூவையும் கிளியையும் போற்றுக!” என்று என்னை நினைக்கின்ற எந்தன் தங்கையிடம் சொல்லுவாய்!” என்றாள்.

ஊர்மிளையின் வியப்பிற்கு எல்லையே இல்லை. இவள் இன்று நடந்த நிகழ்ச்சியில் மனம் பேதலித்தது போல், நான் மட்டும் இருக்க தங்கையிடம் என்கிறாள்.

“பூவையும் கிளியையும் காப்பாற்றுக!” என்கிறாள். இதன் பொருள் விளங்க வில்லை அவளுக்கு. அயோத்தியில் வேறு யாரும் சொந்தமில்லை என்கிறாளோ? அன்னையரை அத்தையர் என்கிறாள். தந்தையை அரசன் என்கிறாள். சீதையின் மனதை அறிய அங்கு யாரும் இல்லையோ என்று தோன்றியது. இச்சொற்களைக் கேட்டு இராமன், இலக்குவன் யாரும் ஏதும் பதில் சொல்லாமல் இருப்பது அதைவிட வியப்பாக இருந்தது. அவ்வளவு பேதைமைத் தன்மை அல்லவா விளங்குகிறது, அவள் சொல்லிய வார்த்தைகளில்.

குழந்தைத் தன்மையுடையாள் போல அல்லவா இருந்திருக்கிறாள் என்று நினைத்தாள் ஊர்மிளா.

சீதை வனம் புகுந்தால், நேரக்கூடிய துன்பத்திற்குக் கவலை வராது, தான் வளர்த்த கிளியையும் பூவையும் பற்றிக் கவலைப்படுகிறாளே என்று மனம் இரங்கி, மனதில் குமைந்து வாய்விட்டுப் பொருமினார் அமைச்சர் சுமந்திரன்.

சீதையிடம் விடை பெற்று லக்குவனனிடம் வந்தார் சுமந்தரன்.

சீதையின் மனதின் தன்மையை அறிந்த ஊர்மிளை, தன் அன்பர் என்ன செய்தி சொல்லி அனுப்பப் போகிறார் என்று ஆவலுடன் அவன் திருமுகத்தைப் பார்த்து இருக்க, இலக்குவனனோ “அரசவையில் உறுதி செய்ததை அந்தப்புரத்தில் மாற்றி உரை செய்து அளித்த மெய்யான அரசன் தசரதன் அவரை அரசன் என்று சொல்லுதல் தகுதியுடையது ஆகுமோ!” என வெறுப்புற்றுக் கூறினான்.

“ஏன் ராமனுடன் அவரும் கானகம் வந்திருக்கக் கூடாது?” என்றான். ”பரத சக்கரவர்த்தி ராஜ்யத்தைக் கொண்டு ஆளுகின்ற அரசன் ஆகிறான். அவன் என்னுடன் பிறந்தாலும் பிறந்தவனும் அல்லன். அவனுடன் கூடிய சத்ருகனனுக்கு நான் அண்ணனும் இல்லை. என்னுடன் பிறந்த வலிமை இன்னும் என்னுடன் தான் இருக்கிறது என்று சொல்லுக!” என்றான்.

ராமன் லக்குவனனை அடக்க, சுமந்தரன் புறப்பட்டார்.

ஊர்மிளையின் மனம் வெதும்பியது. உறவுகளால் ஏற்பட்ட துன்பத்திற்கு உறவைக் கொல்வது எங்ஙனம் நியாயம்? அப்படியானால் இவருக்கும் எனக்கும் உள்ள உறவில் எது கண்டு என்னை மறக்கிறார்?

மேலும் தன்னுடைய நாடகம் சரியாகத்தான் பலித்து இருக்கிறது. இலக்குவனின் மனதில் இத்தனை உறவுகளின் வெறுப்பில் என்னையும் பற்றிய நினைவுகள் வெறுப்பில் கூட வரவில்லையே! இதனை என்னவென்று நினைப்பது!

அன்பு எதையும் சாதிக்கும். மிக்க வலிமையுடைய அன்பைக் காட்டிலும் வலிமையுடைய ஒன்று உள்ளது எனின், அது சீதை ராமனிடம் வைத்துள்ள அளப்பரிய காதலே ஆகும். ஆம்! சீதை ராமனைக் கண்டபின் தன்னை மறந்தாள்; தன் உறவை மறந்தாள்; சுற்றம் மறந்தாள்.

இலக்குவன் சொன்னது போல் ராமன் இருக்கும் இடத்தில் சீதையும் இலக்குவனனும் தான் இருப்பார்கள். இதைத் தவிர எந்த உறவையும் அறியாள் போலும் அல்லவா செய்தி சொல்கிறாள்.

“சீதையக்கா! என் நினைவு உனக்கு வந்திருக்குமே யானால் எத்தனை சந்தோஷமாக, நாம் வனத்தில் சுற்றித் திரிந்து இருப்போம். ஆனால், உன் மனதில் எந்த நினைவும் இல்லாத போது, என் கனவு கூட வீணென்றே கருதுகிறது என் உணர்வு.

“அக்கா! மிதிலையிலிருந்த சீதைக்கும், இப்போது இருக்கும் சீதைக்கும் எத்தனை வேறுபாடு! இராமனைத் தவிர உலகமே இல்லை என்பது போல் செம்புலப் பெயல் நீர் போலத் தன்னை அவனுடன் கலந்து கொண்டாளே!

“நீயும் நானும் தந்தை ஜனகர் வளர்ப்பில் தானே வளர்ந்தோம்! இருந்த போதும் அளப்பரிய காதல் என்னிடம் இல்லாது போனதற்கு அன்பை விட என்னிடம் அறிவு அதிகமாக உள்ளதோ! பெண்களின் மனம் தான் ஒருவருக்கொருவர் வேறுபடுவது ஆச்சரியமாக உள்ளது. எனினும் இதோ மன்னர் தசரதனின் புகழுக்கும் ஒரு பெண், அவளே அவரது கூற்றத்திற்கும் ஆவாள் என்று மன்னன் நினைத்திருப்பாரா?”

இருந்த போதும், தன் நினைவு இலக்குவனுக்கு வெறுப்பில் கூட வரவில்லை என்பது தனக்குக் கிடைத்த வெற்றியாகத் தான் பார்த்தாள் ஊர்மிளை. ஆனாலும் சில வெற்றிகள் கொண்டாடப் படுவதில்லை. அதில் இதுவும் ஒன்று.

வனம் நோக்கி சென்றபின் மன்னனின் நிலை என்னவாகும்? இதனைச் சுமந்தன் மன்னரிடத்தில் எவ்வாறு சொல்லுவான்? இனி நடக்கப் போவது என்ன? பரதன் அரசாள ஒத்துக் கொள்வானா? இப்பொழுது பரதனுக்குச் செய்தி அனுப்புவார்களா? நம் தந்தையும் சகோதரிகளும் கூட வருவார்களா? அவர்களை எல்லாம் நாம் பார்க்கும் மனநிலையில் இருக்கிறோமா? நம்மையும் அழைத்துப் போகிறேன் என்று தந்தை சொன்னால் நாம் எவ்வாறு அதனை மறுத்துக் கூறுவது? எந்த உறவுமே இல்லாத போதும், அன்னையின் நிலையைக் கருத்தில் கொண்டு, நாம் இங்கேயே இருந்து விட வேண்டும் என்ற நம் திடமான முடிவை அவர்கள் மனம் புண்படாதபடிக் கூறவேண்டும்!” என்று நினைத்து நினைத்து உறங்குவதும் விழிப்பதுமாக, அந்த இரவைக் கழித்தாள் ஊர்மிளா.

ஓடும் தேரின் சப்தம் கேட்டவள், அமைச்சர் சுமந்தரன் வந்துவிட்டார் என்று நினைத்துத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள முனைந்தாள்.

தொடரும்...

# ஜவஹர்லால் நேரு..!!

ரோஜாவின் ராஜா...!!

★இந்தியா சுதந்திரம் பெறுவதற்காக பாடுபட்டவர்கள் பலர் உள்ளனர்.

★விடுதலை போராட்டம் என்றவுடனேயே நம் மனதில் சிலரின் முகங்கள் வந்துபோகும்.

★அந்த வகையில் இவரின் முகம் அனைவருக்கும் பரிட்சையமானதே...!!

★இந்திய சுதந்திர போராட்டத்தின் முன்னணி தலைவர்களில் ஒருவர்...

★அணி சேரா இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவராகவும், சுதந்திரப்போராட்ட வீரராகவும் திகழ்ந்தவர்.

★'நவீன இந்தியாவின் சிற்பி" என்று அழைக்கப்படுபவர்...!!

★குழந்தைகளின் மீது இவரும், இவரின் மீது குழந்தைகளும் அளவு கடந்த அன்பு வைத்திருந்தனர்.

★சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக இந்தியாவை வழிநடத்தியவர் இவரே...!!

★ரோஜா மலர் என்றவுடன் நம் நினைவுகளில் வரும் முதல் நபர் இவர்தான்...!!

★குழந்தைகளின் வளர்ச்சிதான் தேசத்தின் உண்மையான வளர்ச்சி என திடமாக நம்பியவர்...!!

★இவர் பிறந்த தினமான நவம்பர் 14ம் தேதி இந்தியாவில் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது...!!

ஜவஹர்லால் நேரு...!!

★ஜவஹர்லால் நேரு மறைந்துவிட்ட போதும், காலம் காலமாக அவரது அன்பு, குழந்தைகள் மத்தியில் இன்றும் நிலைத்து நிற்கிறது.

ஜவஹர்லால் நேரு இளமை பருவம் :

★ஜவஹர்லால் நேரு அவர்கள் 1889ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அலகாபாத்தில் பிறந்தார். இவருடைய தந்தை செல்வந்தரும், வழக்கறிஞருமான மோதிலால் நேரு ஆவார். இவருடைய தாயார் சுவரூப ராணி அம்மையார் ஆவார். இத்தம்பதியினருக்கு நேரு மூன்றாவது குழந்தையாக பிறந்தார்.

★ஆரம்பக் காலத்தில் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு வழக்கறிஞர் ஆதலால் அப்போது இருந்த ராஜாக்கள், ஜமீன்தார்கள், பெரும் பணக்காரர்களின் வழக்குகளுக்கு இவர் வாதாடியதால் பின்னாளில் பெரும் செல்வந்தராக வளர்ந்து நின்றார். எனவே, மோதிலால் தனது இருப்பிடத்தைப் பணக்காரர்கள் வசிக்கும் பகுதிக்கு மாற்றிக்கொண்டார்.

★ஜவஹர்லால் நேரு பிறக்கும்போது மாளிகை போன்ற வீட்டில் செல்வ செழிப்புகளுடன், பெரிய அந்தஸ்துடன் இருந்துள்ளது. ஜவஹர்லால் நேருவுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள்,

★ஒருவர் விஜயலட்சுமி பண்டிட்

★மற்றொருவர் கிருஷ்ணா நேரு ஹூதீசிங் ஆவார்.

★இவர்கள் மூவரும் சிறுவயதிலிருந்தே ஆங்கில நாகரிகத்துடன் வளர்க்கப்பட்டவர்கள்.

பெயர் அர்த்தம் :

★உருதுவில் ஜவஹர்_-இ லால் என்றால் 'சிகப்பு நகை" என்று பொருள், இச்சொல்லிலிருந்து 'ஜவஹர்லால்" என்ற பெயர் உருவானது.


ஆரம்ப வாழ்க்கை மற்றும் கல்வி :

★ஜவஹர்லால் நேருவிற்கு இந்தி மொழி, சமஸ்கிருதம் மற்றும் இந்தியக் கலைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன.

★மோதிலால் நேரு, இந்தியக் குடிமக்கள் சேவைக்குத் தன் மகன் தகுதி பெற வேண்டும் என்று விரும்பினார். அதற்காக ஜவஹர்லால் நேருவை இங்கிலாந்தில் உள்ள ஹார்ரோவிற்கு அனுப்பினார்.

★அங்கு அவருக்கு பள்ளிப் பாடத்திட்டம் கடுமையாக இருப்பதாகவும், தங்குமிடம் வீட்டிலிருந்து வெகுதொலைவு இருப்பதாகவும் உணர்ந்தார். இருப்பினும் ஜவஹர்லால் நேரு பள்ளிப்படிப்பை முடித்ததும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகளை 1907ல் எழுதி, டிரினிட்டி கல்லூரிக்கு சென்று இயற்கை அறிவியல் படித்தார்.

★ஹார்ரோ கல்லூரி, கேம்ப்ரிட்ஜ் ஆகியவற்றில் படிக்கும்போது அவரின் கலகலப்பான குணத்திற்காக நேருவை 'ஜோ" நேரு என்று அழைப்பார்கள் ஐரோப்பிய நண்பர்கள்.



★நேரு டிரினிட்டி கல்லூரியில் இயற்கை அறிவியல் மாணவராக இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகியவற்றை படிக்க வேண்டியிருந்தது. கணிதம் அவருக்கு உகந்த பாடமில்லை என்பதால் டிரினிட்டி கல்லூரியில் தாவரவியலை தன்னுடைய விருப்பப்பாடமாக தேர்வு செய்து படித்தார்.

★1910ஆம் ஆண்டு இயற்கை அறிவியலில் ஹானர்ஸ் பட்டம் பெற்றார். கேம்ப்ரிட்ஜ் மற்றும் டிரினிட்டி கல்லூரியில் படிப்பை முடித்த அவர், இன்னர் டெம்பிலில் சட்டம் பயில பதிவு செய்துகொண்டார். அதன்பின் சட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்த நேரு தனது சட்டப் பணியை தொடங்க 1912ல் இந்தியா திரும்பினார்.

நேருவின் திருமண வாழ்க்கை :

★நேரு அவர்கள், 1916ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் தேதி கமலா கவுல் என்ற பிராமணப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பிறகு, கமலா நேருவும் சுதந்திர இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

★திருமணமான அடுத்த ஆண்டில் இந்திரா பிரியதர்ஷினி என்ற மகள் பிறந்தாள். (பின்னாளில் ஃபெரோஸ் காந்தியை திருமணம் செய்து கொண்ட அவர், 'இந்திரா காந்தி" என என்றழைக்கப்பட்டார்).

★இருபது ஆண்டுகாலம் நேருவுடன் வாழ்ந்த கமலா நேரு, 1936ல் புற்றுநோயால் இறந்தார். கமலா நேருவின் இறப்பிற்கு பிறகு, கடைசிவரை தனியாகவே வாழ்ந்தார் நேரு.

அரசியல் வாழ்க்கை :

★மாணவராக இருந்த காலத்திலிருந்தே அயல்நாட்டின் பிடியில் இருந்து பாதிக்கப்பட்டு விடுதலைக்காக போராடுகின்ற தேசங்களின் மீது அவர் ஆர்வம் காட்டி வந்தார். பின் இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் அவர் ஈர்க்கப்பட்டு அதில் இணைந்து போராடினார்.

★வழக்கறிஞர் தேர்வில் வெற்றி பெற்று பணியாற்றிக்கொண்டு இருக்கின்றபோதே நேருவிற்கு இந்திய அரசியலின் மீது ஆர்வம் ஏற்பட்டது.

★அதன்பின் காங்கிரஸ் இயக்கத்தில் காந்தியின் தலைமையின் கீழ் செயல்பட்டார். 1913ஆம் ஆண்டு காந்தியடிகளின் பொது உரிமை போராட்டத்திற்கு (ஊனடை சப்பாவள ஊயஅpயபைn) நிதி வசூலித்துக் கொடுத்தார்.

சுதந்திர போராட்டத்தில் ஜவஹர்லால் நேரு :

★ஜவஹர்லால் நேரு 1916ல் மகாத்மா காந்தியை முதன்முதலில் சந்தித்தார். முதல் சந்திப்பின்போதே அவர் மகாத்மா காந்தியால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். இது காந்தி-நேரு இருவருக்குமான இணைப்பிரியா தோழமையின் தொடக்கமாக அமைந்தது.

★1917ஆம் ஆண்டு அன்னி பெசன்ட் அம்மையார் துவங்கிய தன்னாட்சி இயக்கத்தின் செயலாளர் ஆனார்.

★'தி இன்டிபென்டன்ட்" இதழை தன்னுடைய தந்தை மோதிலால் நேருவுடன் இணைந்து 1919ல் ஆரம்பித்தார்.

★நேஷனல் ஹெரால்டு என்ற பத்திரிக்கையை 1938ஆம் ஆண்டு நேரு துவங்கி நடத்தினார்.

★1919ல் நடந்த 'ஜாலியன் வாலாபாக் படுகொலை சம்பவம்" நேருவை சுதந்திர போராட்டத்தில் ஈடுபட வழிவகுத்தது எனலாம். இந்தியாவின் அம்ரித்சர் நகரில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் ஆயுதம் ஏதுமின்றி கூட்டத்தில் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பாராமல் ஆங்கில அரசு ரெஜினால்ட் டையர் என்ற ராணுவ அதிகாரியின் தலைமையில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது.

★அப்பாவி மக்களின் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் வெள்ளையர் ஆட்சியின் மீது நேருவுக்கு வெறுப்புணர்வை அதிகரித்தது மட்டுமல்லாமல் காங்கிரஸ் கட்சியில் அவரை ஈடுபடுத்திக் கொள்ளவும் காரணமாக அமைந்தது.

★காந்தியின் கொள்கைகளின் மீது அதிக ஈடுபாடுகொண்ட நேருவும், அவருடைய குடும்பமும் விலையுயர்ந்த மேற்கு ஆடைகள் உடுத்துவதை தவிர்த்து கதர் ஆடையை உடுத்தினர்.

★தந்தையை விடுதலைப் போரில் ஈடுபடுத்திய பெருமை நேருவை சேரும். 'மோதிலால் நேரு இந்திய விடுதலைப் போரில் ஈடுபடக்காரணம் அவர் மகன் மீதான அன்பே. நேருவின் மீதான அன்பே தேசப் போராட்டத்தில் அவரை ஈடுபடுத்தியிருக்கிறது" என்றார் காந்தியடிகள்.

★காந்தியின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராக மாறிய நேரு, 1920ல் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்ததற்காக 1921ல் முதன் முதலாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சில மாதங்கள் கழித்து விடுதலை செய்யப்பட்ட அவர், 1924-ல் அலகாபாத் நகராட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★இரண்டு ஆண்டுகள் தலைமை நிர்வாகியாக சிறப்பாக பணியாற்றிய அவர், 1926ல் தனது பணியை ராஜினாமா செய்தார். பின்னர் 1926 முதல் 1928 வரை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக பணியாற்றினார்.

★நேருவின் தந்தையார் மற்றும் சி.ஆர். தாஸ் தொடங்கிய 'சுயராஜ்ய கட்சி"-யில் நேரு சேராமல், காந்தியுடனே பணியாற்றினார். நேரு, சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடன் இணைந்து பிற விடுதலை பெற்ற நாடுகளுடன் நல்லுறவை பேண விரும்பினார்.

நேருவின் மறைவு :

★நேருவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் முதலாவது தேசிய ஆய்வுக்கூடமாகிய தேசிய இயற்பியல் ஆய்வுக்கூடமும், அதை தொடர்ந்து மேலும் 17 தேசிய ஆய்வுக்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டன. 1948ஆம் ஆண்டு ஹோமி ஜஹாங்கீர் பாபா தலைமையில் இந்திய அணுசக்தி ஆணையம் நிறுவப்பட்டது.

★சீனா உடனான போரில் இந்தியா தோல்வி அடைந்ததை அடுத்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நேருவின் மீது முதன்முதலாக நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்தன. ஆனால், தீர்மானம் தோல்வி அடைந்தது.

★சீனாவைப்பற்றி அவரின் 'உலக வரலாற்றுத்துளிகள் (புடிஅளநள ழக றுழசடன ர்ளைவழசல)" நூலில் நூற்றுக்கும் மேற்பட்ட குறிப்புகள் காணப்படுகின்றன. அந்த தேசம் திடீர் தாக்குதல் தொடுத்து எல்லை சிக்கலை தீர்க்க பார்த்தது பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இதனால் ஐந்து மாதங்களில் மூன்று முறை பக்கவாதத்துக்கு உள்ளாகி இறுதி நாட்களை நோக்கி நகர்ந்தார்.

இறுதி காலம் :

★1964ஆம் ஆண்டு காஷ்மீரிலிருந்து திரும்பிய நேரு பக்க வாதத்தாலும், மாரடைப்பாலும் அவதிப்பட்டார். அவர் 1964, மே 27ஆம் தேதி அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அவருடைய உடல், யமுனை நதிக்கரையில் உள்ள சாந்திவனத்தில் தகனம் செய்யப்பட்டது. இவரின் மறைவிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

**A s Govinda rajan**
KODAMBAKKAM, CHENNAI

# தினம் ஒரு தலைவர்கள் வ.த.சுப்ரமணிய பிள்ளை வரலாறு

**வ.த.சுப்ரமணிய பிள்ளை (டிசம்பர் 11,1846- ஏப்ரல் 17,1909 ) வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை. தமிழறிஞர். திருப்புகழ் பாடல்களை தேடிக் கண்டடைந்து தொகுத்து வெளியிட்டார். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.**

வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை செங்கல்பட்டில் டிசம்பர் 11,1846-ல் தணிகாசலம் பிள்ளை-இலட்சுமி அம்மாளுக்கு பிறந்தார். திருத்தணிகை முருகன் இவர்களது குலதெய்வம். தணிகாசலம் பிள்ளை தனி ஆசிரியர் மூலம் வீட்டிலேயே சுப்ரமணிய பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி அளித்தார். தமிழும் தெலுங்கும் பயின்ற சுப்ரமணிய பிள்ளை 1857-ல் செங்கல்பட்டு மிஷன் ஸ்கூலில் சேர்ந்து உயர்நிலைக் கல்வியை முடித்து அங்கேயே சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் பள்ளி ஆய்வுக்காக வந்த வில்லியம் மில்லர் இவருடைய அறிவுத்திறன் கண்டு சென்னைக்கு வந்து மாகிண்டோஷ் ஸ்காலர்ஷிப் தேர்வு எழுதி வென்றால் தகுந்த வேலை கிடைக்கும் என்றார். அவ்வாறே சென்னை சென்று தேர்வெழுதி வென்றார். மில்லர் வாக்களித்தபடி இவருக்கு மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் தொகை கிடைத்தது. தொடர்ந்து U.C.S. தேர்வு எழுதி வென்றார். எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சுப்ரமணிய பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மில்லரின் பரிந்துரையின் பேரில், ஸ்காட்லாண்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியப்பணியில் சேர்ந்தார். 1868-ல் வள்ளியம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. பின்னர் ஆசிரியர் பணியில் இருந்து விலகி மில்லரின் நண்பர் ஹாட்ஸன் துரையின் பரிந்துரையின் பேரில் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். தலைமை எழுத்தராக பதவி உயர்வு பெற்று பின்னர் முன்சீஃப் தேர்வெழுதி வென்று 1882-ல் கடலூருக்கு மாவட்ட முன்சீஃப் ஆக நியமிக்கப்பட்டார். சோளிங்கர், விழுப்புரம் உள்ளிட்ட சில இடங்களில் பணியாற்றிய பின்னர் நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்றார்.

நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்ற பின்னர், மே 31, 1888-ல் அவர் எழுதிய குறிப்பில் "பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக் கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாமக்கல்லில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்பு கும்பகோணம் சென்றார். கும்பகோணம் பற்றி தனது நாட்குறிப்பில் "கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன்படுகிறது" என்று எழுதியிருக்கின்றார். பின்னர் திருத்துறைப்பூண்டியில் சில ஆண்டுகாலம் வசித்தார். மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் முன்சீஃபாகப் பணியாற்றிய பிள்ளை, 1901-ல் பணி ஓய்வு பெற்றார்.

வ.த.சுப்ரமணிய பிள்ளையின் மகன் புகழ்பெற்ற தமிழறிஞரான வ.சு. செங்கல்வராய பிள்ளை. சுப்ரமணிய பிள்ளையின் திருப்புகழ் பதிப்புப்பணி செங்கல்வராயபிள்ளையால் முன்னெடுக்கப்பட்டது

முருக வழிபாடு

ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினங்களில் தவறாது முருகன் ஆலயத்திற்குச் செல்வதும், பாடல் பாடுவதும் இவர் வழக்கமாக இருந்தது. தினமும் தவறாமல் 32 முறை 'தணிகையன் துணை' என்று எழுதியபின் தணிகேசன் மீது பாடல் பாடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

மண்ணாசை என்கின்ற
மாயையில் வீழ்ந்து
மதிமயங்கி
எண்ணாது உனை
மறந்தேயிருந்தேன்
இனியாகிலும் என்
அண்ணா உன்றன்
பொன்னடிக் கமலம்
வந்தடையும் வண்ணம்
தண்ணார் அருள்புரியாய்
தணிகாசல சண்முகனே."

என்று திருத்தணிகை முருகன் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சிவபெருமான், உமையம்மை, மகாவிஷ்ணு, விநாயகர், நால்வர் மீதும் இவர் பல்வேறு காலகட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். திருப்புகழில் உள்ள 274 பாடல் பெற்ற தலங்களில் 176 இடங்களுக்குச் சென்று தரிசித்திருக்கிறார்.

திருப்பணிகள்

அறச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை



பல்வேறு மடங்களுக்கும், ஆலயங்களுக்கும் திருப்பணிகள் செய்தார். விளக்குகள் அளிப்பது, பாத்திரங்கள், ஆலயமணிகள், வேல், ஆபரணங்கள் போன்றவற்றைத் தருவது, ஆலயங்களைப் புதுப்பிப்பது, கவனிப்பின்றி இருக்கும் தெய்வச் சிலைகளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்தார். மதுரையில் இருக்கும் பழமுதிர்சோலை ஆலயம் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அதைச் சீர்செய்வதில் முன்னின்றவர் பிள்ளை. சைவப் பணிக்காகவே பிறந்த நகரத்தார்களுக்கு இவர் "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்பதை எழுதி அனுப்பி ஆலயத்தைச் சீர்த்திருத்துமாறு வேண்டிக் கொண்டார். இவர் முயற்சியின் பேரில் நாளடைவில் ஆலயம் சீரமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது.

திருப்புகழ் சுவடிகளுக்காக தொடர்ந்து பயணம் செய்தார். உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்கு கடிதம் எழுதி சுவடிகள் கோரினார். 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. மார்ச் 20, 1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன. மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, அனந்த ராம ஐயர் போன்றவர்களின் உதவியுடன் திருப்புகழ் முதல் பதிப்பை வெளியிட்டார். ஜூன் 5,1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். ஏப்ரல் 9, 1895 அன்று திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார். சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.


வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் ஏப்ரல், 9 1895 அன்று இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். 'கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது'. (ரெங்கையா முருகன்

கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அந்தத் தொகுப்பிற்கு தமிழறிஞர்களிடையே மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்த பாகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையும் பிள்ளைக்கு உண்டாக்கியது. உடனே அந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். ஓய்வுபெற்றபின் தமது இறுதிக் காலம் முழுக்கத் திருப்புகழ் பாடல்களைத் தொகுப்பதிலேயே ஈடுபட்டார். 1902-ல் திருப்புகழ் இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிட்டார். திருப்புகழ் மூன்றாவது பாகத்தைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறுவதற்கு முன் மறைந்தார்.



நடிகை அவந்திகா மிஸ்ரா சேலையிலும் தாராள கவர்ச்சி போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்கள். ரசிகர்களை கவரும் அழகிய ஸ்டில்களை பாருங்க.

# நவீன தொழில்நுட்பத்தில் ‘ஆட்டோகிராஃப்’ : நவ.14-ல் வெளியாகிறது




சேரன், இயக்கி, தயாரித்து, ஹீரோவாக நடித்த சூப்பர் ஹிட் திரைப்படம் ‘ஆட்டோகிராஃப்’. இதில் சினேகா, கோபிகா, மல்லிகா, கனிகா என பலர் நடித்தனர்.

கடந்த 2004-ம் ஆண்டு வெளியான இந்தப் படம் பள்ளி, கல்லூரி, இளமை பருவங்களில் ஒருவர் சந்திக்கும் காதல் அனுபவங்களை மனதுக்கு நெருக்கமாக பேசியது. 100 நாட்களுக்கு மேல் ஓடிய இந்தப் படத்துக்கு மூன்று தேசிய விருதுகளும் கிடைத்தது. ‘ஒவ்வொரு பூக்களுமே’ பாடலை பாடிய சித்ரா, எழுதிய பா.விஜய், இசை அமைப்பாளர் பரத்வாஜ் ஆகியோருக்கு விருது கிடைத்தது.

இந்தப் படம் 21 ஆண்டுகளுக்குப் பிறகு நவீன தொழில்நுட்பத்துக்கு மாற்றப்பட்டு மே 16-ம் தேதி ரீ-ரிலீஸ் ஆக இருப்பதாக இயக்குநர் சேரன் தெரிவித்திருந்தார். இதற்காக ஏ ஐ மூலம் உருவாக்கப்பட்ட ட்ரெய்லரும் வெளியிடப்பட்டது. பல்வேறு காரணங்களால் அப்போது இப் படம் வெளியாகவில்லை. இந்நிலையில் நவ. 14 – ம் தேதி வெளியாக இருக்கிறது. 2 மணி நேரம் 50 நிமிடம் ஓடும் இந்தப்படத்தின் 20 நிமிடக் காட்சிகளை குறைத்துள்ளனர்.

# போலீஸ் ஸ்டேஷன் மெயின் பூத் பர்ஸ்ட் லுக் வெளியானது!



ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ராம்கோபால் வர்மா ஒரு திகில் படத்தை இயக்குகிறார். ‘போலீஸ் ஸ்டேஷன் மெயின் பூத்’ என்று டைட்டில் வைக்கப்பட்டுள்ள இந்த படத்தில் மனோஜ் பாஜ்பாய், ஜெனிலியா தேஷ்முக் ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள். இந்த படத்தில் ரம்யா கிருஷ்ணன் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கேரக்டரில் நடிக்கிறார்.

நேற்று இரவு இயக்குனர் ராம்கோபால் ஒரு புதிய அவதாரத்தில் ஒரு கதாநாயகியின் படத்துடன் ரகசிய குறிப்பை வெளியிட்டு இருந்தார். இது ரசிகர்களிடையே ஆர்வத்தை தூண்டியது. அதோடு அது ரம்யா கிருஷ்ணன் என்று சோசியல் மீடியாவில் கமெண்ட்டும் கொடுத்து வந்தார்கள். ரசிகர்கள் யூகித்தது போலவே இன்று போலீஸ் ஸ்டேஷன் மெயின் பூத் படத்தில் ரம்யா கிருஷ்ணனின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை இணையத்தில் வெளியிட்டுள்ளார் ராம் கோபால் வர்மா. அதில், திகிலான ஒரு மர்ம பின்னணியை வெளிப்படுத்தக்கூடிய அதிரடியான தோற்றத்தில் மேல்நோக்கு பார்வையுடன் காணப்படுகிறார் ரம்யா கிருஷ்ணன்.

# மைசா படப்பிடிப்பு கேரளா காட்டுப் பகுதியில் தொடங்கியது!




ராஷ்மிகா மந்தனா நடித்த ‘தம்மா’ ஹிந்தி படம் தீபாவளிக்கு திரைக்கு வந்த நிலையில், தெலுங்கில் அவர் நடித்துள்ள ‘தி கேர்ள் பிரண்ட்’ படம் வருகிற நவம்பர் 7ம் தேதி திரைக்கு வருகிறது.

இதையடுத்து ‘மைசா’ என்ற படத்தில் கதையின் நாயகியாக நடிக்கிறார் ராஷ்மிகா. இந்திய அளவில் பல மொழிகளில் உருவாகும் இந்த படத்தின் படப்பிடிப்பு இன்று கேரளாவில் உள்ள அதிரப்பள்ளி காட்டுப் பகுதியில் தொடங்கியிருப்பதாக படக்குழு அறிவித்திருக்கிறது.

புதுமுக இயக்குனர் ரவீந்திரன் புல்லே என்பவர் இயக்கும் இந்த படத்தில் பழங்குடி இன பெண்ணாக நடிக்கிறார் ராஷ்மிகா. இப்படத்தின் போஸ்டர் சமீபத்தில் வெளியான போது அதில் ஒரு ஆக்ரோஷமான பழங்குடியின பெண் கெட்டப்பில் அவர் காணப்பட்டார். இப்படத்தில் ராஷ்மிகாவுடன் தாரக் பொன்னப்பாவும் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.



நடிகை கிரித்தி ஷெட்டி ரெட் ஹாட் போட்டோஷூட். உச்சகட்ட கவர்ச்சி உடையில் அழகிய போஸ்.

# பிரபல நடிகை இமயமலை குகையில் எளிய வாழ்க்கை

இந்தியில் சக்திமான் உட்பட 155-க்கும் மேற்பட்ட டி.வி. சீரியல்களில் நடித்து புகழ் பெற்றவர் நூபுர் அலங்கார். இவர் தனது பணத்தை பிஎம்சி வங்கியில் சேமித்து வைத்திருந்தார். முறைகேடுகள் காரணமாக இந்த வங்கி வாரியத்தை ரிசர்வ் வங்கி கடந்த 2019-ம் ஆண்டு கலைத்தது. வாடிக்கையாளர்கள் பணம் எடுக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது அவருக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியது.

மேலும் இவரது குடும்பத்தில் சில சோக சம்பவங்கள் நடைபெற்றன. தாய் மற்றும் சகோதரி அடுத்தடுத்து மரணம் அடைந்தனர். இதனால் உலக வாழக்கையை அவர் வெறுத்தார். குடும்பத்தைவிட்டு ஆன்மீக பாதைக்கு திரும்ப விரும்பினார். குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனுமதியுடன் ஆன்மீக வாழ்க்கைக்கு திரும்பினார். சந்நியாச வாழ்க்கையை தொடங்கி தனது பெயரை பீதாம்பர மா என மாற்றிக் கொண்டார். மும்பையை விட்டு வெளியேறி நாடு முழுவதும் பயணம் செய்தார். சுமார் 3 ஆண்டுகளாக இமயமலை குகை, காடுகள் மற்றும் தொலைதூர ஆசிரமங்களில் அவர் தங்கி தியானம் செய்தார். கடும் பனி, எலி கடி, உடல்நிலை பாதிப்பு போன்ற சிரமங்களையும் அவர் தங்கும் இடங்களில் சந்தித்தார்.

ஆசிரமத்துக்கு வருபவர்கள் அளிக்கும் உடைகளையை அவர் அணிகிறார். தன்னுடன் எப்போதும் 5 செட் உடைகளை மட்டுமே வைத்துக் கொள்கிறார். செலவுக்கு பிறரிடம் யாசகம் பெறுகிறார். அவற்றை கடவுளுக்கும், அவரது குருவுக்கு அளிக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில், “ ஆடம்பரம்மின்றி வாழ்க்கையை அனுபவிக்க விரும்பினேன். இயற்கையுடன் இணைந்து வாழ்வது மன அமைதியையும், தெளிவையும் கொடுக்கிறது. யாசகம் பெறுவது மூலம் கர்வம் ஒழிந்துள்ளது. தண்ணீர் கடலுக்கு திரும்புவதுபோல், தெய்வீகத்துடன் கலப்பதுதான் வாழ்வின் நோக்கம்” என்கிறார்.




# தமன்னா காட்சிகள் நீக்கம் தவிர்க்க முடியாதது: ராஜமவுலி

ராஜமவுலி இயக்கத்தில் வெளிவந்த 'பாகுபலி' படம் இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்தது. இந்திய சினிமாவின் முதல் ஆயிரம் கோடி வசூல் படமானது. இரண்டு பாகமாக படம் வெளிவந்தது. தற்போது இந்த இரண்டு பாகங்களையும் ஒருங்கிணைத்து 'பாகுபலி: தி எபிக்' என்ற பெயரில் வெளிவந்தது.

இதில் தமன்னாவின் காதல் காட்சிகள் உள்பட பல்வேறு காட்சிகள் நீக்கப்பட்டுள்ளன. முதல் பாகத்தில் அதிக முக்கியத்துவம் பெற்ற தமன்னாவின் கேரக்டர், இரண்டாவது பாகத்தில் அட்மாஷ்பியர் ஆர்ட்டிஸ்ட் ரேன்ஞ்சுக்கு குறைக்கப்பட்டது, அப்போது விமர்சிக்கப்பட்டது. தற்போது 'பாகுபலி தி எபிக்' படத்தில் தமன்னாவின் காட்சிகள் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலி கூறியிருப்பதாவது, 'பாகுபலி' படத்தின் ஒவ்வொரு காட்சியும் உணர்ச்சி ரீதியாகவும், கதை ரீதியாகவும் முக்கியமானது. ஆனால், புதிய பதிப்பு முற்றிலும் கதை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று விரும்பினோம். முதலில் எடிட்டிங் செய்தபோது 4 மணி, 10 நிமிடங்கள் இருந்தது. சினிமா மற்றும் மற்ற துறையிலுள்ள பார்வையாளர்களுக்கு சிறப்புக்காட்சி ஏற்பாடு செய்தோம். அவர்கள் சொன்ன கருத்துகளின் அடிப்படையில் அதை 3 மணி, 43 நிமிடங்களாக குறைத்தோம். இதனால் தமன்னா, பிரபாஸ் காதல் காட்சிகளையும், பாடல் காட்சிகளையும் நீக்குவது தவிர்க்க முடியாததாகி விட்டது" என்றார்.




LOCATION - CHENNAI
WE ARE
HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to publish News, Story, Kavidhai, Articles etc in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai, Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
www.mlmperfect.com
9853719337,7436914247


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@whitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA
MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!


WORK FROM
HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

# புதுக் கவிதை பகுதிகள்





## வசீகரியே!

காதலியே!
புருவவில்லில்
நாணேற்றி விழிஅம்புகளால்
நீ தாக்கியதில்
வெறுமையாய் இருந்த
இதயத்தில் வானவில்
நாணேற்றி மன்மத
அம்புகளைத்
தொடுப்பதாய்க்
கனவுகள் திரைச்சீலையாய்
விரிகின்றன!

உன்னைப்பார்த்துக்
கொண்டிருப்பதே
மகிழ்ச்சியின் எல்லை
அருவியைத்தழுவிச்
செல்லும் தென்றலாய்க்
கடந்துச்செல்கிறாய்!

பகலின் தெளிவும்
இரவின் சுகமும் கலந்த
உன் பேச்சில்
நதியின் நளினமும்
நன்செய் நிலத்தின்
பசுமையும் பளிச்சிடுகிறது!

வசந்தத்தின் முத்திரையாய்
உன் பனிமுத்தம்
கிட்டும்வரை மழையில்
நனைந்துசிலுசிலுக்கும்
நீ வளர்த்த ரோஜாவை
கன்னத்தில்
ஒத்திக்கொள்கிறேன்!



**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

அமைதியை
நீ தேடாதே.
அமைதி உன்னைத்
தேடுகிறதா என்று பார்.
தேடும். தேடி
உன்னிடத்தில்
தானே வரும்.
அதுவரை நீ
தடுமாறாமல்
அதற்காகக் காத்திரு.



**கே. பி.**
**ஜனார்த்தனன்**


பிறந்த குழந்தைக்கும் அடுத்துப் பிறக்கப் போகும்
குழந்தைக்கும் இடைவெளி தேவை.
ஒரு வாகனத்திற்கும், பின்னால் சென்று கொண்டிருக்கும்
வாகனத்திற்கும் இடைவெளி தேவை.
ஒரு தொடர்வண்டிக்கும் அதன் பின்னால் செல்ல விருக்கும்
இன்னொரு தொடர் வண்டிக்கும் நேர இடைவெளி தேவை.
ஒருவேளை சாப்பிடுவதற்கும் அடுத்த வேலை
சாப்பிடுவதற்கும் இடைவெளி தேவை.
ஒரு கட்டடத்திற்கும் மறு கட்டடத்திற்கும் இடைவெளி தேவை.
அலைபேசி பார்ப்பதற்கும் திரைப்படம் பார்ப்பதற்கும் கால நேர
இடைவெளி தேவை. நீள் இருக்கையில்
தேர்வு எழுதும் ஒரு மாணவனுக்கும் இன்னொரு
மாணவனுக்கும் இடைவெளி தேவை.
முன்னாள் செல்லும் வாகனத்திற்கும் அதன் பின்னே செல்லும்
வாகனத்திற்கும் இடைவெளி தேவை.
ஓட்டப் பந்தயத்தில் ஓடும் வீரர்களுக்கும் இடைவெளி தேவை.
வரிசையில் நிற்கும் ஒருவருக்கும் மற்றவருக்கும்
இடைவெளி தேவை.
திரையரங்குகளில் முன் வரிசைக்கும் பின் வரிசைக்கும்
இடைவெளி தேவை. கால்பந்தாட்டத்திற்கும், மட்டைப்பந்து
விளையாட்டிற்கும் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு
இடைவெளி தேவை.



வாகனம் நிறுத்தும் இடங்களில் ஒரு
வாகனத்திற்கும், இன்னொரு வாகனத்திற்கும்
இடைவெளி தேவை.
ஆனால் கணவனுக்கும், மனைவிக்கும் அன்பு
கலந்த நெருக்கம் வாழ்நாள் முழுக்கத் தேவை.

**உ.மு.ந.ராசன்கலாமணி**
கோவை.





**1. அப்பா**
தொலைக்கும் வரை
விலை மதிப்பில்லா
அன்பு புரிவதே இல்லை
"அப்பா"

**2. காதல்**
கொத்தும் கோப்ரா
கண்களிலும் கொஞ்சம்
காதல் இருக்கத்தான்
செய்கிறது

**3. உண்மை**
உன்னை மாற்ற
யாராலும் முடியாது
நீயாய் மாறும் வரை
இங்கு எதுவும் மாறாது
தேவதூதர்கள் எல்லாம்
கனவுகளில் மட்டுமே வருவர்
நிஜத்தில் அப்படி யாரும்
ஒரு போதும் வருவதே
இல்லை

**4. (ப/பி)ணம்**
பணம் இல்லையேல்
பகட்டான காதலெல்லாம்
கொல்லைப் புறம் வழியே
திரும்ப சென்று விடும்
பணம் பத்து மட்டுமல்ல
பதினொன்றும் செய்யும்.

**5. தேவதை**
அவள் அழகாக இல்லை
அவ்வளவு அறிவாக இல்லை
கொள்ளை கொள்ளும்
இளமை இல்லை
எல்லையில்லா பேரன்பு
இருந்தது சிறகுகள்
இல்லையென்றாலும்
அம்மா தேவதை தான் !

**நௌஷாத் கான் .லி**



## காதல் பயிர்

என் கவனங்கள்
உன் திசை மாறி
என்னையே மறந்து
உன்னைத் தேடியே
அலைகிறது

இருக்கும் இடத்தை
விட்டு விட்டு நிஜம் இல்லாத
நிழலை தேடுகிறது
என் இதயம்

நீ விதைத்த விதை நெல்
வீணாகாது சொல்லத்
துடிக்கும் என் மனதிடம்
கேட்டுப்பார்

அறுவடை செய்யாமலே
சொல்லிவிடும்
வீணாகாத விளைநிலம்
உன் மீது வைத்த
காதல் விளைச்சலை

என்னை ஏமாற்றி
காதல் பயிரை நீ
கருகவைத்தாலும்
என் கண்ணீரை ஊற்றி
காப்பாற்றுவேன்
எனக்குள் நீ வளர்த்த
காதல் பயிரை

## நிலவே...

எட்டாத உயரத்தில்
எல்லோரும் மனதையும்
எட்டிப் பிடிக்கும்
பால் நிலவே...
குழந்தைகளுக்கு
விளையாட்டு பொம்மையாக
வலம் வரும்
வெண்ணிலவே...
அன்றைய கவிஞர்களின்
காதல் நாயகியே...
இன்றைய கவிஞர்கள்
உன்னை அழைக்கிறார்கள்
என்று மறந்தும் கூட
கீழே வந்து விடாதே
வருங்கால
கவிஞர்களுக்காக
நீ அங்கேயே காத்திரு!

**பாரதிமுத்து**
ஒட்டேரி வேலூர்



## வேலை

என் கவிதைகளில்
எப்படியாவது இடம் பெற்று
விடுவதே உன்
காதலுக்கு வேலையாகப்
போயிற்று!

## வந்தனம்

சிணுங்கினாலும்
முரண்டு பிடித்தாலும்
ஊடலைக் கைப்பற்றினாலும்
சினத்தையே குத்தகைக்கு
எடுத்தாலும்(கூட) நீ
காதலுக்கு வந்தனம்
சொல்லும் அழகு
ஒன்றிற்காகவே உன்னை
உயிராக நேசிக்கிறேன்!

## ஊஞ்சல்

உன் கூந்தலில்
தொங்கும் பூச்சரத்தை
ரசிக்கும் போதெல்லாம்
ஊஞ்சலாடுகிறது என் மனம்!

## சிறகு

இதழ்கள் விரித்து
அழகாய் சிரிக்கிறாய்!
என் இதயம் இறக்கை
கட்டிக் கொள்கிறது!

## திறமை

நீ என்னுடன் இல்லாத
நேரங்களிலும் கூட
என்னைக்கைப்பற்றித்
தக்க வைத்துக் கொள்கிறது
உன் காதல்!

## தடை

தடை செய்யப்பட்ட
போதைப் பொருட்களெல்லாம்
உன் கண்களிலிருக்கிறது!
நீ மட்டும் எப்படி
சட்டத்திலிருந்து
தப்பிக்கிறாய்?!

## நெருக்கம்

விலகி விலகிச் செல்கிறாய்
நீ விலக விலக என்னை
நெருங்குகிறது உன் மனம்!

## விடை

அணைத்து விடை பெற்று
விலகுகிறாய்! இமைக்க
மறக்கத் தொடங்குகிறது
என் விழிகள்!

## பறவை

நீ வரும்போதெல்லாம்
சிறகுகளை விரித்துக்
கொள்கிறது என் கா த ல்!

## உயிர்

நீ ஏமாற்றி விட்டுப்
போனால் என்ன?!
இன்னமும் வாழ்ந்து
கொண்டுதானிருக்கிறது
உன் மீதிருக்கும்
என் கா த ல்!

## பணி

அமைதியாக இருக்க
விடாமல் நம் இருவரையும்
எப்பொழுதும் ஏதாவது
செய்து
கொண்டேயிருக்கிறது
இந்தக் கா த ல்!

## கா த ல்

நம் இருவரில்
யாரைப் பிடித்திருக்கிறது?
என்று கேட்டால் நான்
உன்னைத்தான்
பிடித்திருக்கிறது
என்று
சொல்வேன்
அன்பே!



**முத்து**
**ஆனந்த்**
வேலூர்

# நூல் விமர்சனம்

மு. வ .கருவூலம்
நூல் ஆசிரியர் பேராசிரியர்
இரா .மோகன்
வானதி பதிப்பகம் .
23.தீனதயாளு தெரு
,தியாகராயர் நகர் ,
சென்னை .17 . விலை 80
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி




நூல் ஆசிரியர் மு .வ அவர்களின் மாணவர் முனைவர் மோகன் என்ற நிலை உயர்ந்து , முனைவர் மோகனின் குரு மு .வ. என்ற நிலைக்கு வளர்ந்து விட்டார் .குருவை மிஞ்சிய சீடராக 82 நூல்கள் எழுதி விட்டார் .

விரைவில் சதம் அடித்து விடுவார் .தான் பெற்ற இன்பம் பெறுக இந்த வையகம் ! என்ற நோக்கில் இலக்கிய ஆளுமை மு .வ .என்ற கடலில் முத்து எடுத்து ,முத்து மாலை தந்துள்ளார் .நாள் ஒரு சிந்தனை என்ற விதமாக வருடம் முழுவதற்குமாக 365 சிந்தனைகள் நூலில் உள்ளது . சிறந்த சிந்தனையாளர் ,நேர்மையான அதிகாரி ,முனைவர் வெ.இறையன்பு அவர்களின் சிந்தனையை இது போன்று தொகுத்து வழங்கி உள்ளார். அந்த நூலின் வெற்றியைத் தொடர்ந்து மு .வ .வின் சிந்தனைகளைத் தொகுத்து உள்ளார் . முனைவர் வெ.இறையன்பு அவர்கள், நூல் ஆசிரியர் பேராசிரியர் இரா .மோகன் பற்றி குறிப்பிட்டது முற்றிலும் உண்மை .முனைவர் மோகன் அவர்களின் உயரத்தை விட அவர் எழுதிய நூல்களை அருகில் அடுக்கினால் அவரை விட உயரமாக இருக்கும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தகைசால் பேராசிரியராகப் பணி புரிந்துகொண்டே ,பட்டிமன்றங்களில் நடுவராக முழங்கிக்கொண்டே நூல்களும் எழுதிக் குவித்திட நேரம் எப்படி? கிடைக்கின்றது என்று எண்ணிப் பார்த்து வியந்தேன் . எழுத்து ,பேச்சு இரண்டு துறையிலும் தனி முத்திரை பதித்து வருகின்றார் நூல் ஆசிரியர் பேராசிரியர் இரா .மோகன் . மு .வ .என்பவர் யார் ? என்பதை உணர்த்தும் உன்னத நூல் இது . மு .வ .பற்றி அறிஞர்கள் குறிப்பிட்டது ,மு .வ .அவர்கள் அவரது படைப்புகளில் கருவாக வைத்த நல்ல முத்துக்களை தேர்ந்து எடுத்து நூலாக வழங்கி உள்ளார் .நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் இந்திரா சௌந்தரராஜன் குறிப்பிட்டது போல ,இந்த நூல் படிக்கும் வாசகர்களுக்கு மு .வ .அவர்களுடன் வாழ்ந்த மன நிறைவைத் தருவது உண்மை .சனவரி 1 தொடங்கி டிசம்பர் 31 வரை நாள் ஒன்றுக்கு ஒரு சிந்தனை இருப்பதால் .வாசகர்கள் தாங்கள் பிறந்த தேதியில் என்ன ? சிந்தனை உள்ளது என்று படிப்பது சுக அனுபவம்தான் .நீங்களும் சோதித்துப் பாருங்கள் . ஆசிரியர் தன்னுரையில் குறிப்பிட்டுள்ள தகவலே நூலின் நோக்கத்தைப் பறை சாற்றி விடுகின்றது . "பேராசிரியர் மு .வ .வை இன்றைய இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும் . மு .வ.வின் நூல்களை இலக்கிய ஆர்வலர்கள் மறு வாசிப்பும் செய்யத் தூண்ட வேண்டும் என்ற இரண்டும் ஒருங்கே நிகழ வேண்டுமானால் ,என்ன செய்வது ,எப்படி நடைமுறைப் படுத்துவது என்ற சிந்தனையின் விளைவே இந்த நூல் ." "அனைத்து கருத்துக்களும் அற்புதம் என்றாலும் ,நூல் விமர்சனத்தில் அனைத்தையும் எழுதி விட முடியாது. பதச் சோறாக சில உங்கள் பார்வைக்கு. சனவரி 22. ஒவ்வொரு தமிழரும் டாக்டர் மு .வ .வைப் போல வாழ்ந்தால் ,வளம் பெறும் தமிழ் ,வளம் பெறும் தமிழகம் ,வளம் பெறுவார்கள் தமிழர்கள்." தமிழ்வாணன் ( கல்கண்டு ) 31.10.94ஆவணப்படுத்துவதில் நூல் ஆசிரியர் இரா . மோகன்அவர்களுக்கு நிகர் அவர்தான் .கல்கண்டு இதழில் 31.10.94 அன்று வந்த தகவலை இன்றுநூலில் பதிவுசெய்துள்ளார். நம் இல்லத்தில் குழந்தைகள் கேள்வி கேட்டால் கோபப்படாமல் பதில் சொன்னால் அந்தக் குழந்தை அறிவாளி ஆகும் என்பதற்கு எடுத்துக்காட்டு நூலில் உள்ளது . சனவரி 26 சைனாவில் சென்னை பசார் உண்டா ? இளமையில் பள்ளிக் கூடத்தில் படித்த பொது நான் ஆசிரியரிடம் கேட்ட ஒரு கேள்வி நினைவிற்கு வருகின்றது .சென்னையில் சைனா பசார் இருக்கின்றதே சைனாவில் சென்னை பசார் உண்டா ? என்று கேட்டேன் .நீங்கள் எல்லாம் பேரியவர்களாகிச் சைனாவிக்குப் போய் வியாபாரம் செய்தால் அப்படி ஏற்படும் .என்றார் ஆசிரியர் . யான் கண்ட இலங்கை பக் 44-45 மு .வ .அவர்களின் கருத்துக்கள் இன்றும் பொருந்தும் விதமாக உள்ளது . பிப்ரவரி 18 வாழ்க்கையில் கணவனும் மனைவியும் முழுவதும் ஒத்துப் போவது அருமைதான் .நூற்றுக்கு நூறு கருத்து ஒற்றுமை உடையவர்கள் உலகத்தில் யாரும் இருக்க முடியாது . அல்லி பக் 47 மார்ச் 22 இந்த நூலில் உள்ள மு. வ .அவர்களின் கருத்தைப் படித்து , வாழ்வில் கடைபிடித்து நடந்தால் குடும்பத்தில் சண்டை இருக்காது .அன்பு பிறக்கும் . இந்தக் கருத்தைப் புரிந்து நடந்தால் கணவன் மனைவிக்குள் சண்டையே வராது . மார்ச் 22. அறம் வெல்லும் பணம் தோற்கும் ! அறம் வெல்லும் பணம் தோற்கும் !இந்த வெற்றியும் தோல்வியும் வந்தே தீரும் .

ஊழல் செய்த அரசியல்வாதிகளும்,கிரானைட் அதிபர்களும் சிறையில் இருப்பது.மு .வ .வின் கருத்தை மெய்ப்பிப்பதாக உள்ளது . மார்ச் 24. உரிமைபறி போவதுபெருங்குற்றம்! பிறர் உரிமை பார்ப்பது எவ்வாறு குற்றமோ அவ்வாறே நம் உரிமை பறிபோவதைப் பார்த்துக் கொண்டு வாளா இருப்பதும் பெருங்குற்றம் ! இந்தக் கருத்தை படித்ததும் காவிரியில் உள்ள நமக்கான உரிமையை கர்னாடகம் பறிப்பதுக் கண்டு வாளா இருப்பதும் பெருங்குற்றம் என்பதை உணர்ந்தேன். வாழ்வியல் கருத்துக்கள் ,தத்துவங்கள் ,நெறி முறைகள் ,தனி மனித ஒழுக்கத்தின் சிறப்பு இப்படி நூல் முழுவதும் பொக்கிசமாக உள்ளது . பறவைகள், விலங்குகள் ஒரே இடத்தில நீண்ட நேரம் அமர்ந்து இருப்பதில்லை ,அதனால்தான் அவைகளுக்கு நோய்கள் இல்லை ஆனால் மனிதன் ஒரே இடத்தில நீண்ட நேரம் அமர்ந்து இருப்பதால்தான் நோய் வருகின்றது .என்ற மருத்துவ உண்மையும் நூலில் உள்ளது .

செப்டம்பர் 2 நல்லவர்களாக ஒரு சிலர் கிடைத்தால் போதும் . நல்லவர்களாக ஒரு சிலர் இந்த உலகத்தில் கிடைத்தால் போதும் பலருடைய பழக்கமும் அறிமுகமும் வேண்டியதில்லை .அப்படிப்பட்ட சிலருக்கு இடையில் வாழ்ந்து மகிழ்ச்சியோடு செத்துப் போகலாம் . அல்லி பக் 231 எனக்கு கிடைத்த நல்லவர் சிலரில் ஒருவர் நூல் ஆசிரியர் பேராசிரியர் இரா .மோகன் .மற்றொருவர் முனைவர் வெ.இறையன்பு . படித்துவிட்டு வைக்கும் சராசரி நூல் அல்ல இது .படித்து விட்டு பாதுகாப்பாக வைத்து மனதில் கவலை, துன்பம் வரும் நேரம் எடுத்து மறு வாசிப்பு செய்தால் புத்துணர்வு வர வைக்கும் அற்புதம் இந்த நூல் .

## ஆர்த்தெழுவோம் மூடுதற்கே

வருங்காலத்
தூண்களெல்லாம்
வரிசையாக வந்துநிற்க
வருமானம் மதுக்கடையில்
வாருதுநம் அரசாங்கம் !
தெருமுனையில்
பெயர்பலகை தெருவிலிரு
மதுக்கடைகள்
வருகவருக வென்றழைத்தே
வழங்குதுதீ நஞ்சுதன்னை !

கூச்சமின்றி மதுவிற்றுக்
குடும்பத்தை நடுத்தெருவில்
பேச்சின்றித் தவிக்கவைத்துப்
பேரழிவைச் செய்கிறது !
நாசம்தான் வருமென்று
நன்றாகத் தெரிந்திருந்தும்
மோசம்தான் போகின்றார்
மௌனமாக சமூதாயம் !

எரிக்கின்ற நெருப்பென்றே
எல்லோரும் அறிந்திருந்தும்
புரிகின்றார் அதையெடுத்துப்
புசிக்கின்றார்
நாள்தோறும் !
பறித்துவிடும்
உயிரென்று
பட்டையாக
எழுதிவைத்தும்
குறிப்புரையாய்
அதைப்படித்துக்
குடிக்கின்றார் மனமுவந்தே !

மதிகெடுக்கும் அரக்கிதனை
மாரதியாய்க் காதலித்தே
சதியென்று அறியாமல்
சாகின்றார் பேதலித்தே !
சுதிசேர்க்கும் தாளமென்று
சுர்ரென்றே ஏறவைத்து
விதிமுடிவைத் தானழைத்து
விரைந்தாவி விடுகின்றார் !

மதுக்கோப்பை தனையேந்தி
மாப்புகழைத் தருகின்ற
புதுக்கோப்பை வெற்றிகளைப்
புறந்தள்ளி மிதக்கின்றார் !
வதுவைசெய்து மகிழ்வித்த
வனிதையரை விதவையாக்கி
எதுவொன்றைச்
சாம்பலாக்கும் எரிகுழம்பில்
மாய்கின்றார் !

சாராய விற்பனையில்
சாதனையாம் எனவுரைத்தல்
சோரம்போன நாடதனின்
சொல்லொன்னா அவமானம்!
ஊராளும் அரசாங்கம்
உயர்பறிக்கும் எமனானால்
யாராளும் ஏற்கியலா
ஆர்த்தெழுவோம்
மூடுதற்கே!



**பாவலர்**
**கருமலைத்தமிழாழன்**

## ஒரு கல் கண்ணாடி

" கனவுகள் சுமந்த
வாழ்க்கை எதிர்பார்ப்பு
அதிகம் கொண்ட
வாழ்க்கை ..."

ஒருவரை ஒருவர்
புரிந்து கொண்ட
பிறகு துடிப்போடு
பயணிக்கும் வாழ்க்கை ..."

காதல் அது கண்களை
மறைக்கும் கண்கட்டி வித்தை
அவசர வாழ்க்கை .... "

உரிமை என்பதும்
அதிக இடைவெளி
இல்லாததும் அன்பு
அதிகமாகப் இருப்பதும்
....."

சாதி மத இனம் தாண்டி
மனம் இரண்டும்
சங்கமிப்பதும் காதல் எனும்
வாழ்வில் தான் ....."

ஏங்கி ஏங்கி விட்டுக்
கொடுத்ததும் தாங்கி தாங்கி
நின்றதும் காதல்
கனிய வழிந்ததும்...."

நெருக்கம் கூடி நின்றதும்
வாழ்வில் விரிசல் காட்டி
விட்டுக் கொடுக்கமறுத்து ...."

ஒவ்வொரு நாளும்
ரணமாய் வெறியாய்
திருமணம் ஆன பிறகு
வாழ்க்கை ....."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி







வார்த்தைகள் இல்லாத
புத்தகம் மௌனம்.

வாசிக்க, வாசிக்க
வாக்கியங்கள் மௌனம்.

மௌன வெளிச்சத்தில்
நம்மை நாமே காணலாம்.

மௌன இருட்டில் நம்
துன்பங்களைப் புதைக்கலாம்.

மௌன சாவி தயாரித்து
விட்டால் உணர்ச்சிகளைப்
பூட்டி வைக்கலாம்.

மௌனம் போதி மரம்.

இதுவரை உலகம்
சொல்லாத உண்மைகளை
இது போதிக்கும்.

மனம் என்பது தவம்.
இதில் ஆழ்ந்தால் அமைதி
நிச்சயம்.

“மௌனம் என்பது வரம்”
நம்மிடம் நாமே பெறுவது.
இன்பம், துன்பம் இரண்டையும்
மௌனம் கொண்டு
சந்தித்தால் எப்போதும் இதயம்
இயல்பாக இருக்கும்.

**முத்து ஆனந்த்**
வேலூர்

## காதல் சின்னம்

எண்ணத்தின் விருப்பத்தை
காதலோடு கவிதை
மாலை தொடுக்கும்
மனம் ஓர் காதல் சின்னம்.

காலத்தால் அழியாது
கண்கவர் காட்சிக்கு
விருந்தான நதி யமுனாதீரம்
ஓர் காதல் சின்னம்.

காதல் கண்கள்
பேசும் மௌன
கீதங்கள் இசைக்கும்
இதயம் ஓர் காதல் சின்னம்.

கார் கூந்தலில் சூடிய ரோஜா
வாடி உதிர்ந்து
ஏட்டில் ஓர் காதல் சின்னம்.

இதயம் தொடும்
இத்தனையும் மறந்து
காதலின் சின்னம்
என்றதும் ........

"தாஜ்மஹால்"

அது முதல் காதலும் அல்ல
முற்று பெற்ற காதலும் அல்ல
மூன்றாம் மனைவிக்காக



மனதில்
தோன்றிய
ஒன்று !!

சிந்தனை
மாற்றி
சிந்திப்போமே

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## இதயக் கதவு திறக்கட்டும்

இதயக் கதவைத் திறந்து
விடு! நல்லெண்ணக்
காற்றை நுழைய விடு!
இருண்டு கிடக்கும் மன
வீட்டில் அன்பு ஒளியைப்
பரவ விடு! இளமையில்
கற்கப் பழகி விடு!
இனிமையாய்ப் பேசப்
பயிற்சி எடு! உழைத்தே
நீயும் உயர்ந்து விடு!
உண்மையை உள்ளத்தில்
பதியவிடு உயிர்களிடம்
அன்பு செலுத்திவிடு –
பிறர் உணர்ச்சிகளுக்கு
என்றும் மதிப்புக் கொடு!
மூடநம்பிக்கையை அறவே
விட்டு விடு! முன்னேற்றும்
வழிகளையே தேர்ந்து எடு!
நல்லவர் துயரைத் துடைத்து
விடு நலிந்தவர்க்கு உதவி
புரிந்து விடு! நா நயத்தால்
நல்ல பெயரையெடு! ஐயம்
என்பதையே ஒழித்து விட்டு
ஐம்புலன்களையும் அடக்கப்



பழகிவிடு!
ஓய்வில்லாமல்
நல்ல
பயிற்சியெடு!
ஒலிம்பிக்
பரிசுக்குக்
கழுத்தைக்
கொடு!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை



## ஆயுதம் !

முருகனின் கையில் வேல் !
சிவபெருமான் கையில்
திரிசூலம் ! திருமால் கையில்
சுதர்சன சக்கரம்.. அம்மன்
கையில் சூலம்.... என...
தெய்வங்கள் கையில் ஆயுதம்
ஏந்தியிருப்பது....
தன்னை காத்துக்கொள்ளும்
வரலாறு அல்ல..
’ தீயவர்களுக்கு ’
’ என் கவுண்டரில் தான்
முடிவு என்பதை அப்போதே



அறிவுறித்தி
யிருக்கிறான்...
கடவுள் !

**எம்.பி. தினேஷ்.**
கோவை

## முதுமையில் ஒரு தேடல்.

முதிர்ந்துதிரும் காலத்தில்
தேடித் தேடி

வலைத் தளமே கதியென்று
வாழுகின்றோம்

சுகம் என்றும், அவையே
சுவர்கம் என்றும்

நொடிப்போதும் இமை
மூடாதி ருக்கின்றோம்

மண்ணுலகை மறந்து நாம்
வலை தளத்தில்

எதையோ எதையோ தேடி
அலைகின்றோமே

முக நூல், வாட்ஸ் ஆஃப்
இவைகள் எல்லாம்

முந்தி தரும் செய்திகள்
என்ன?என்ன.

வெட்டி பொழுதாய் தட்டி
நாம் அனுப்பும்

பெட்டிச்
செய்திகளும்,பொய்யுரையும்

கட்டுக்கடங்காத
கற்பனையும்,முதுமையில்

காலத்தைக் கழித்திருக்க கை
கொடுக்கும்

செய்திகள் யாவும் இங்கு சில
நிமிடங்கள்

சிரிக்கவும் ,சிந்திக்க
வைப்பதோடு

நெடு நாட்கள் நட்பின் இடை
புகுந்து

நீயா? நானா? என நிலைகள்
மாற்றும்.

பரிமாற்றம் பல பலவே
ஆயினவும்

பக்குவமாய் படித்து,
பிரித்தெடுத்து

தக்கதையே நமக்கென்று
ஆக்குமாகில்



சங்கடங்கள்
பல இங்கு
தவிர்க்கலாமே.

**சுந்தர மணிவண்ணன்.**

1. அக்டோபர் முதல்
டிசம்பர் வரை என்னோடு
இருப்பது நீலகிரி தைலமும்
பாராசிட்டமால் மாத்திரையும்
தான்

2. வாந்தி என்பது வாய்
வழியாக சென்று வாய்
வழியாக வருவது வதந்தி
என்பது ஒரு காதின் வழியே
சென்று பலர் வாய் வழியாக
வருவது

3. பசிக்கு உணவை
தேடும் வரை
ஆரோக்கியமாகத்தான்
இருந்தோம்
ஆடம்பரத்தை தேடும்
போதுதான் சீரழிந்தோம்

4. பைத்தியக்காரனை
நிச்சயம் திருத்தி விடலாம்
தற்பெருமை பேசுபவனை
திருத்த முடியாது

5. வாழ்க்கையில்
கொஞ்ச காலம் தான்
விளையாடுவோம் மீதி
காலம் முழுவதும் வாழ்க்கை
நம்மோடு விளையாடும்

6. நாம் வாழும் வரை நம்மை
யாரும் வெறுக்க
கடாது வாழ்ந்து
முடித்த பின்னர் யாரும்
நம்மை மறக்கக்கூடாது
இதுதான் வாழ்க்கை



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## குழந்தைப் பாடல்!

கைப்பேசி வேண்டாம்
குழந்தாய்! காலையில்
எழுந்தவுடன் கைப்பேசி..நீ
கையிலே எடுக்காதே
தம்பி! பாலையே
குடித்தவுடன் படிப்பை..நீ
பண்புடன் படித்திடுவாய்
தம்பி!

மூளையைப் பாதிக்கும்
கைப்பேசி..அதை
மூலையில் வைத்திடடா
தம்பி! நாளுமே வேண்டாமே
கைப்பேசி..அது நரம்பையே
பாதிக்கும் தம்பி!

மனநலக் கோளாறு
ஏற்படும்..தம்பி மாண்பில்லாக்
கைப்பேசியாலே!
கனிவுடன் சொல்கிறேன்
கேட்பாய்..தம்பி
கட்டாயம் கைப்பேசி
வேண்டாம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

தொட்டிச் செடியில்
இன்னும் மொட்டு
விடவில்லை. தினம்
கையசைக்கிற
எதிர் வீட்டுக் குழந்தை
இன்னும் கதவு
திறக்கவில்லை..
கைபேசி ஒளிராமல்
அமுக்கமாய்..
வித்தியாசமாய் இன்று



வானம்
சொல்லிப்
போனது
என்
விடியலின்
ஸ்வாசத்தை !

**ரிஷபன்**

என் செல்லக்குட்டி பேபிம்மா
நீ தான் என் உயிரம்மா
என் பட்டுக்குட்டி செல்லம்மா
நீ தான் உலகம்மம்மா
தங்கக்கட்டி அம்மும்மா
நீ எந்தன் அம்மம்மா
உன் கண் பார்த்தே
காதல் படித்தேனடி
நீயில்லாத வாழ்வில்
சாதல் தானடி
உன் மடி ஏறாத உடல்
அந்த மண் சேரட்டும்
தமிழ் உச்சரிக்காத நாவும்
உன் இதழ் படாத நானும்
வாழ்ந்து என்ன பயன்?
செல்லம்மா என் கண்ணம்மா
தங்கம்மா என் உயிருக்கு
மேலான பிரம்ம உயிரம்மா நீ!

**லி.நௌஷாத் கான்**

## பூங்காற்றே...

உன்னுடன் பேசாத
நாட்களில்...நினைவு
பிறழ்ந்து விடுகிறது...
என் மொழிக்கு...

சிறைப்பட்டு தனிமைக்
கொட்டிலில்...வாடிப்போய்
கிடக்கின்றன....
சொற்கள்...

கண்களின் வழியே
ஏக்கமாய் வழிகிறது....
நேசம்...

வெறித்துப் பார்த்து....
வெறுமையை
ருசிக்கிறது.... காதற்
கண்கள்...



உடல் ..
உள்ளம்...
பெருஞ்சுமையாய்
கணக்கிறது...

காதல்
பூங்காற்றே...
உன்னை சுவாசிக்காமல்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## மழையின் மனசு.

மழை பெய்கிறது
நனைகிறது எல்லாமும்
அரளிச்செடி ரோஜா செடி
என எல்லாவற்றின் மீதும்
பெய்கிறது...

நல்லவர் கெட்டவர் என
பாகுபாடு காட்டாது.

அன்பும் கருணையும் கூட
அப்படித்தான்
அவைகளுக்கு
பாகுபாடு தெரியாது.
எல்லோரையும்
நனைய வைக்கும்.


நி(ரு)னைக்கவும்



மாந்தரில்
பாகுபாடு
என்கிற
களையை
எடுக்கவும்–நீர்
அடிக்கடி
வரவும்
மழையே!...

**எறும்பூர் கை. செல்வகுமார்,** செய்யாறு.

## "தேர்வை வெல்வோம்" வழிகாட்டி வினா–விடை தொகுப்பு



குன்னம் தொகுதி குறிச்சிக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில், 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உதவும் "தேர்வை வெல்வோம்" வழிகாட்டி வினா-விடை தொகுப்பினை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

## வெற்றி திலகம்

விழுந்தால் எழுவதே
நல்ல முயற்சி இதை விதி
என அயர்ச்சி இல்லாமல்
தொடர்ந்து செய்து விட்டால்
வெற்றி நம்மைச் சுற்றிக்
கொள்ளும்.

தோல்வி வந்தாலும்
தளராமல் வேள்வி செய்து
முயற்சித்தால் வெற்றி
நம்மைச் சுற்றிக் கொள்ளும் .

அயராது பாடுபட்டால் துயரம்
கூட ஓடிவிடும்.....
சென்ற அனைத்தும்
திரும்பி வர உழைப்போம்....
உழைப்போம்....



உழைப்போம்....
உழைப்பின்
வெற்றியை
திலகமாக
நெற்றியில்
அணிவோம்.

**உஷா**
**முத்துராமன்**

## உள்ளத்தில் உண்மை ஒளி!

நேரிசை வெண்பா!

மனத்தில் தெளிவுடன்
மாண்பாம் அறிவும்
கனிவாய் இருந்திட்டால்
காணும்... கனியான
பேச்சில் உருவாகும்
பீடுற்ற நற்சொல்லே
மூச்சுதான் உள்ளவரை முன்!

உள்ளக்கருத்தையே
உன்னதமாகவே
கள்ளங்கபடமின்றிக்
கண்டாலே... துள்ளும்
மனமுமே தூய்மையான
மாண்புடைச்சொல்லும்



வனப்பாகும்
அன்றோ
வளம்!

**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்.**

## மனமிருந்தால்!

நடந்து முடிந்த... ஒன்றை
நினைத்துக்கொண்டே
இருந்தேன்

எல்லாரும் நடந்தது
நடந்ததுதான்
காலம் கடந்தது
கடந்ததுதான் என்றார்கள்!

இழப்பீடுகளை...
ஈடு செய்ய எதுவுமில்லையே
என் பக்கம் என்றேன்!



மனமிருந்தால்
மாற்றமுண்டு
வருந்தாதே
வாழ
பழகிக்கொள்
என்றார்கள்!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்



குவளையில் வைத்த நீரில்
குளிக்க வந்தது நிலவு ...!

கடந்து செல்கையில்
சிரமேமில்லை
பாதையின் குறுக்கே
மரநிழல்...!

இருளை நெருங்கியதும்
ஒளிந்து கொள்கிறது
உடன் வந்த நிழல்.

நதி நீரோடு ஓடியும்
நகரவே இல்லை
கரையோர மரநிழல்..!

இளவேனிற்கால



மரத்திலிருந்து
உதிர்கிறது
இளைப்பாறும்
பறவையின்
இறகு...!

**வீ.வைகை**
**சுரேஷ்**



## உலா வா நிலா

பால்வண்ண உருவம்
கொண்டு பாரிலே
உலா வரும் தேவதை...
உன் நிழல் காண நாளும்
தவம் கிடக்க...
என்னுடன் நடந்து வரும்
வெண்பட்டுக்காரி நீ...
வட்டமிட்டு வருகின்றேன்
உன்னை தொட்டுப் பார்க்க
ஆசையுடன்...
எட்டி நீயும் விலகலாமோ என்
மீது என்ன கோபம் தானோ...
கன்னங்கள் தட்டிச் செல்லும்
தென்றல் கூட உன் தேகம்
தீண்டுதடி... என்னருகே
உன்னை வைத்துப் பார்க்க
ஆசைப்பட்ட என்னை மட்டும்
விட்டுச் செல்லலாமோ...
கார்மேக வண்ணனை
உனக்கு காவலாக
வைத்துவிட்டு..
கன நேரமும்
கண்ணிமைக்காமல்
வட்டமிடுகின்றாய்...
உன் அழகு வண்ணம்



கண்டு என் நிழல் கூட
மறைந்ததடி...கள்ளமில்லா
உன் உருவம் கண்டு எல்லை
இல்லா இன்பம் கண்டேன்...
உன்னழகை நாளும் காண
மாலையே சீக்கிரம் வா
என்றேன்... பால் வண்ணம்
மாறா பிள்ளை கூட..
உன்னைப் பார்த்து
பசியாற்ற...பகலெல்லாம் உன்
வரவிற்க்காக காத்திருக்கும்
என்னை மட்டும் எட்ட நின்று
பார்க்கலாமோ... தேவதை நீ
என்றால்.. என் தேடலில் நீ
தொலைந்து போகலாமோ...
கருவிழிக்கு நடுவில் உன்னை
சிறை எடுக்கின்றேன்..
அன்று ஒரு நாள் மட்டும்
அம்மாவாசை என்று ஒரு
நாளை ஒதுக்கிக்
கொள்வாய்...
நீ என் தேவதை...

**கவிஞர் முனைவர்**
**நா மோகன**
**செல்வி மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்

## விழியில் விழுந்து விட்டாய்

ஏதோ வாசல் தடுக்கி
விழுவதைப் போல
வழி தவறி விழுந்து விட்டாய்
என் விழியில்

அலை அலையாய்
அலையும் என்
விழிகளுக்குள்
கருவிழியாய்
கலந்துவிட்டாய்

காற்றின் காரணத்தை
காதல் வசைப்படியே
என் இமைச் சிறகுகளில்
புகுந்து விட்டாய்

**பாரதி முத்து**

## மனசாட்சி

உண்மையின் மறு உருவம்
எனலாம் எப்போதுமே நல்லது
மட்டுமே சொல்லும் நல்லதை
மட்டுமே செய்யத் தூண்டும்

அறிந்தோ அறியாமலோ
தவறு செய்தால் ஒரு போதும்
மன்னிக்காது நம்மை முதல்
நண்பனும், ஆசானும்,
எதிரியும்,

வெற்றியும் தோல்வியும் நம்
மனசாட்சிதான் இதற்கு
கீழ்ப்படிந்தால் வெற்றி
நிச்சயம் மனசாட்சி
எப்போதுமே உண்மை கூறும்
தெய்வத்திற்கிணையாக
சொல்லப் படுவது

பொய்த்தபின் தன்நெஞ்சே



தன்னைச்சுடும்
என்னும்
வள்ளுவன்
வாக்கும்
பொய்க்குமோ

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

## கலைத்திருவிழா போட்டியில் பங்கேற்ற மாணவர்கள்



மதுரை ஓசிபிஎம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலைத்திருவிழா போட்டியில் பங்கேற்ற மாணவர்கள்.

## புத்தகத் திருவிழாவில் மாறுவேடப் போட்டி



விருதுநகரில் புத்தகத் திருவிழாவில் நேற்று மாறுவேடப் போட்டி நடந்தது.

# வாசகர் கடிதம்

சீர்காழி ஆர்.சீதாராமன் எழுதிய " யோசனை" என்னவோ சரிதான். இன்றைய இளைய

தலைமுறைப் பெண்களில் சிலர் விதிக்கும் முதல் நிபந்தனையே மாமியார் இருக்கக் கூடாது என்பதே. இதில் எங்கே மருமகள் குழந்தை பெற்று மாமியார் சீராட்டுவது?

நன்னிலம் இளங்கோவன் எழுதிய " மாப்பிள்ளை" பெண்ணின் அப்பா , மகளுக்கு "தாடி " இல்லாத வரனாக அமைய வேண்டும் என்றது ஏற்புடையதாக இல்லை. என் தம்பி (சித்தப்பா மகன்) தாடியை எடுக்காமல் தான் திருமணம் செய்தான்.



**-ஸ்ரீகாந்த்**
திருச்சி

தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னோடியாக உள்ளது மோடி பெருமிதம். எல்லை தாண்டி மீன் பிடித்த 35 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். குற்றால அருவிகளில் தண்ணீர் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். சார் மூலம் தமிழகத்தில் பாஜக வெற்றி பெற முயற்சி. ஜவ்வாது மலையில் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள கற்கால கருவிகள் கண்டுபிடிப்பு. நான் கோட்டையில் கொடி ஏற்றுவதை ஒருநாள் விஜய் பார்க்கப் போகிறார். என சீமான் அறிவிப்பு .அரிசி தேங்காய் பால் பாயாசம் அருமை அருமை. களக்காடு தலையணையில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டது. விஜய் கட்சியில் நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டனர். தெரு நாய்கள் விவகாரம் உச்ச நீதிமன்றம் நெறிமுறைகள் வெளியீடு. கென்யா நாட்டில் பலத்த மழை 21 பேர் உயிரிழந்துள்ளனர் . அமெரிக்காவை மட்டும் நம்பி இருக்க முடியாது கனடா அறிவிப்பு. இன்றைய தினம் வெளியான கட்டுரைகள் \ அனைத்தும் மிகவும் யனுள்ளதாகவும் பாசிட்டிவ் ஆகவும் இருந்தது. இக்காலத்தில் இளைஞர்களும் பெருமளவில் பத்திரிகை வாசிப்பு திறனை மேற்கொள்ள வேண்டும். தற்கால இளைஞர்கள் மொபைலும் கையுமாக இருக்கிறார்கள் அந்த வட்டத்திலிருந்து வெளிவந்து கொஞ்சம் பத்திரிகைகளை வாசிப்புத் திறனையும் மேற்கொள்ள வேண்டும். மீண்டும் நாளை சந்திப்போம்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

தொழில்நுட்ப மாற்றத்தின் முன்னோடியாக திகழும் இந்தியா#பிரதமர் மோடி பெருமிதம்
பீகாரில் பேசிய கருத்தை தமிழகத்தில் பேச தைரியம் இருக்கிறதா#முதல்வர் ஸ்டாலின் சவால்
எதிரே வந்த வாகனங்களை மோதித் தள்ளிய லாரி# ஜெய்ப்பூரில் கோர விபத்தில் 10பேர் உயிரிழப்பு+30பேர் படுகாயம்
எஸ் ஐ ஆர் மூலம் தமிழகத்தில் வெற்றி பெற பாஜக முயற்சி#உதயநிதி குற்றச்சாட்டு
கரூர் கூட்ட நெரிசல் பலி#விசாரணைக்கு ஆஜராக நூறு பேருக்கு சம்மன்
நான் கோட்டையில் கொடியேற்றப் போவதை விஜய் ஒரு நாள் பார்க்கப் போகிறார்#சீமான் அதீத நம்பிக்கை=யாரிந்த கோமாளி?
புதுக் கவிதைகளின் அலங்காரம் அமர்க்களம்
நூல் விமர்சனம் சிறப்பு
வாசகர் கடிதங்கள் பிரமிப்பு
மருத்துவக் கனவை நனவாக்க ஜார்ஜியாவைத் தேர்வு செய்யும் இந்திய மாணவர்கள்
வேலூர்: விவசாயி இடம் ரூ.18.71 லட்சம் மோசடி
இலங்கை கடற்படையினர் தொடர் அட்டூழியம்#ராமேஸ்வரம் மீனவர்கள் துப்பாக்கி முனையில் விரட்டியடிப்பு
மெட்ரோ ரயில் உயர் மட்ட கட்டுமானத்தில் போரூர்=பவர் ஹவுஸ் வரை எட்டு கிமீ வரை பாதை அமைக்கும் பணி நிறைவு
தவெக மகளிரணி, மாணவரணி, இளைஞரணி, தொண்டரணி நிர்வாகிகளை நியமித்தார் விஜய்
கோவை விமான நிலையம் அருகே மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை
சென்னையில் தொழில் தொடங்குவதாகக் கூறி பெண்ணிடம் ஒரு கோடி மோசடி செய்த இருவர் கைது
தெரு நாய்கள் விவகாரம்#நவம்பர் ஏழில் கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள்-உச்ச நீதிமன்றம்
விளக்கை அணைக்க சொன்ன நிறுவன மேலாளர் கொலை#பெங்களூருவில் சக தொழிலாளர் கைது
காற்று மாசுவை கட்டுப்படுத்த பிரியங்கா காந்தி கோரிக்கை
இதெல்லாம் பொய்=முதல்வர் வேட்பாளர் குறித்த பிரதமர் குற்றச்சாட்டுக்கு கார்கே பதில்
கென்யாவில் பலத்த மழை#நிலச்சரிவில் சிக்கி 21பேர் பலி+30 பேர் மாயம்
அமெரிக்காவை மட்டுமே நம்பி இருக்க முடியாது#கனடா பிரதமர்
ஒரு லட்சம் பேர் டிஸ்மிஸ்#அமேசான், மைக்ரோசாஃப்ட், இண்டெல் நிறுவன ஊழியர்கள் பீதி
மெக்ஸிகோவில் சூப்பர் மார்க்கெட்டில் நடந்த தீ விபத்தில் 23 பேர் உயிரிழப்பு
வாஷிங்டன் : ஹார்வார்ட் மருத்துவக் கல்லூரியில் குண்டு வெடிப்பு
ஆஃப்கானிஸ்தானில் சக்தி வாய்ந்த நில நடுக்கம்#7 பேர் உயிரிழப்பு + 150 பேர் படுகாயம்



**-பி.சுரேகா**
சென்னை

வணக்கம். 4.11. 25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் தொழில்நுட்ப மாற்றத்தினால் முன்னோடியாக நம் இந்தியா திகழ்கிறது என்ற பிரதமர் மோடி அவர்களின் பெருமிதமான பேச்சு மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்றைய பஞ்சாங்கம் நல்ல அருமையான தகவலை சொன்னது மகிழ்ச்சியாக இருந்தது.

இன்றைய திருக்குறள் மிகவும் அருமை பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். ஐப்பசி மாதத்தில் வளர்பிறை பிரதோஷ வழிபாடு என்ற திருவண்ணாமலை நடைபெற்ற படமும் செய்தி மகிழ்ச்சியாக படிக்க வைத்தது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று ஷஹீத் சிவராம் ராஜகுரு அவர்களின் வரலாறு அவருடைய புகைப்படம் நல்ல வரலாற்றுச் செய்தியாக மகிழ்ச்சியுடன் படிக்க முடிந்தது.

பல்சுவை களஞ்சியம் பகுதி பல தரப்பட்ட செய்திகளை மிகவும் அருமையாகவும் பெருமையாகவும் படிக்க வைக்கிறது. மீம்ஸ் விடுகதை ஜோக்ஸ் அற்புதத்தின் அற்புதம். பாராட்டுக்கள்.


சமையலறை ஸ்பெஷல் என்று நாம் சமைக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்று அழகாக பட்டியலிட்டது பாராட்டுக்குரியது. முந்திரிப் பருப்பு கேக் படிக்கும் போதே நாவில் எச்சில் உறியது.

மக்கள் குறை தீர்க்க கூட்டம் மற்றும் அதிக ரத்ததானம் செய்த ராமநாதபுரம் தமுமுக மருத்துவ சேவை அணி என்று நல்ல நல்ல தகவல்களை படங்களுடன் பார்த்து படித்து ரசித்து மகிழ்ந்தேன்.

சுற்றுலா பக்கத்தில் வந்த அழகிய வெள்ளி கடற்கரை குறித்த முக்கியமான தகவல்கள் மிகவும் அற்புதம். பயனுள்ள தகவல்களாக கொடுப்பதால் சுற்றுலா செல்பவர்களுக்கு நல்ல பயனுள்ள செய்தியாக இருக்கும் என்பது உண்மை.
மெட்ரோ ரயில் உயர்மட்ட கட்டுமானத்தில் போரூர் - பவர் ஹவுஸ் வரை 8 கிலோ மீட்டருக்கு பாதை அமைக்கும் பணி நிறைவு பெற்றது சென்னையில் உள்ள அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியான செய்தி.
தெரு நாய்களின் விவகாரம் என்று நவம்பர் 7ஆம் தேதி கூடுதல் வழிகாட்டி நெறி முறைகளை உச்சநீதிமன்றம் சொல்லப் போவதை ஆவலுடன் படிக்க காத்திருப்போம்.
இளம் வயதில் கோடீஸ்வரர்களான வர்களின் படமும் அவர்களுடைய பெயர்களின் படிக்கும்போது நல்ல அதிர்ஷ்டசாலியான பிள்ளைகள் என்றும் அவர்கள் இதே போல் நீடூடி மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று இறைவனை பிரார்த்தனை செய்தேன்.
எல்லா பக்கத்திலும் நல்ல செய்திகளை மிக அருமையாக செவ்வாய்க்கிழமை விடியலில் செழுமையாக கொடுத்து பெருமையாக படிக்க வைத்த தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த



**-உஷா முத்துராமன்**











FLAT URGENT SALE
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
2BHK FLAT
Best Price Deal
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956




**புதிய வீடு விற்பனைக்கு**

ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி அருகே குருஷ் காலனியில் 2.750 சென்றில் புதிய வீடு விற்பனைக்குள்ளது.

**9843454274**

---

NANGANALLUR FINE ARTS

Cell : 98400 77987 / 98841 23453

அஜய் என்டர்டெய்னர்ஸ் வழங்கும்



**கௌரி கல்யாணம்**

நாடகம்

கதை & வசனம் கார்த்திகேயன்



தயாரிப்பு & இயக்கம் D. மல்லிக்ராஜ்



நாள்: 09-11-2025 மாலை 6:30 மணி

இடம்: ஸ்ரீ சாய்ராம் ஹால் A/c. 14, 24வது தெரு, தில்லை கங்கா நகர், கருமாறியம்மன் கோவில் எதிரில், நங்கநல்லூர்

---

**நிலம் விற்பனை**

சேரன்மஹாதேவி அருகில், திருநெல்வேலி மாவட்டத்தில், 30 ஏக்கர் நிலம் விற்பனைக்கு

Good Water, Clear Title நியாயமான விலை

Rs.13 Lacs per ஏக்கர்

74832 05910

---

**Flat For Sale**

சென்னை, ஒட்டேரி Metro மிக அருகில், Only 2 Min. Walk, Bashyam Street, Flat For Sale. 1051 Sq.ft., 358 Sq.ft. UDS - Clear Title with Lift. 1st Floor, with Regd. Car Parking.

**95 Lakhs Negotiable**

**9841202105**

---

**வீட்டுமனை விற்பனைக்கு**

நாகர்கோவிலின் மைய பகுதியான வெட்டூர்ணிமடம் கிறிஸ்துநகரில் 4¼ சென்ட் இடம் விற்பனைக்கு.

தொடர்பு

**6382258089**

---

AllIndiaJobz

FREE Job Placements

www.allindiajobz.com



FREE JOB PLACEMENT

WHATSAPP US / CALL US

9337501889/7789941009

Urgent Hiring !! Hurry Up

Multiple Job Openings fror Freshers

Refer Your Friends who are searching jobs

---

**மகேந்திரா வேர்ல்ட் சிட்டி அருகில்**

விகாஸ் மந்திரா பள்ளி அடுத்து DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்

1200 - 2400 சதுர அடி

அனுக்ரஹா

தொடர்புக்கு: 90477 34343

---

**ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள கம்பெனிக்கு**

50 Staff தங்குவதற்கு Building வாடகைக்கு தேவை

97899 85835 / 79046 02553

---

**LAND FOR SALE**

COIMBATORE PEELAMEDU GV RESIDENCY 4.25 cents,

RAMANATHAPURAM KRISHNA COLONY 5.50 and 8 and 11Cents

RAMANATHAPURAM NEAR JUNCTION 1.10Acre & 4Acre

Broker Excuse

Contact: R.Sasikumar

81242 63136

---

**RC GODOWN FOR RENT**

சின்னியம்பாளையம் அருகில்

5000 Sqft

EB 150 HP

94420 07246, 98430 28670

---

**இடம் விற்பனைக்கு**

அவினாசி ரோடு (ஃபன் மால்) அருகில் கிழக்கு பார்த்த 10 சென்ட் இடம் நேரடி விற்பனைக்கு

தொடர்புக்கு கொள்ளவும் : 8 am to 5 pm

95008 26982

புரோக்கர்கள் தவிர்க்கவும்

---

**OMR GOLDEN CITY ALERT!**

**THIRUPORUR**

Sold Out in 2019 - Limited Resale Plots Now Open!

Starts : Rs.13 Lacs

90% Bank Loan

Call: 9962 888 888

---

**Commercial Building for Rent**

**THIRUNINDRAVUR**

Main Road 3000Sft, 2nd Floor Suit for Gym Etc.

**REDHILLS - ORR**

Main Road 2500Sft, Ground Floor (Via Redhills to Thiruvallur) Suits for Showroom, Restaurant.

98412 38854

---

**கட்டிடம் விற்பனைக்கு**

பொள்ளாச்சி நகரில் பிரபல இன்ஜினியரிங் கல்லூரி அருகில் 13 அறைகளுடன் (ALL BATH ATTACHED) கூடிய புதிய கட்டிடம் விற்பனைக்கு

மாத வாடகை வருமானம் ரூ.50,000

CONTACT

98420 14702

---

**வீடு விற்பனைக்கு**

தடாகம் ரோடு, திருவள்ளுவர் நகர் மெயின் ரோட்டில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் ரோட்டின் மேல் கிழக்கு பார்த்த 2¾ சென்ட் சிமெண்ட் சீட் வீட்டுடன் இடம் விற்பனைக்கு.

87543 23893

---

**வீடு விற்பனைக்கு**

கோவை, கீரணத்தம், லட்சுமி கார்டன் அருகில் 3BHK வீடு, அனைத்து வசதிகளுடன் விற்பனைக்கு

விலை : ரூ. 60 லட்சம்

93632 01439

---

**RENTAL COMMERCIAL @ ROYAPURAM**

No.247, Suryanarayana Chetty St, Royapuram, Ch-13

1st Floor 2830 Sq.ft, Lift Car Parking


Rent for Office, Bank, Etc.,

Ct: 94440 46328

---

**Industrial / Warehouse FOR RENT**

@ Malumichampatti, CBE



Brand New

18,000 sq.ft Buid up Area ✦ 34 feet center height ✦ Bore well with 10,000 Lts Sump ✦ Car parking ✦ Security, Power & Rest room ✦ Compound

99439 11012

93447 20747

---

**கடை வாடகைக்கு**

கோவை பா.நா.பாளையம் லட்சுமி மில்ஸ் அருகில்

- 60 அடி ரோட்டின் மேல்
- 1800 சதுரஅடி
- தரைத்தளத்தில்
- தண்ணீர் வசதியுடன்

Suitable for: IT Office, Clinic, Laundry, Cloud Kitchen

CONTACT

+ 91 99650 90000

---

VILAMBARAM

**WANTED**

10 SMART FEMALE

**Telecallers**

Job Type: Full-time

Education : Bachelor's degree

Freshers And Experience Both can apply.

SEO & DIGITAL MARKETING COMPANY SINCE 2020

Don't miss this opportunity

INTERESTED CANDIDATES CAN APPLY

+91 9337501889

+91 7789941009



Job @ CHENNAI

www.vilambaram.com

## டிரைவர்கள் தேவை
சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் லைனில் ஓட்டுவதற்கு டிரைவர்கள் தேவை.
ஹெவி லைசென்ஸ் மற்றும் பேட்ஜ் வைத்திருக்க வேண்டும்
தினசரி பேட்டா மற்றும் திறமைக்கேற்ற நல்ல சம்பளம்.
**ACCOUNTANT**
Tally knowledge must
**OFFICE STAFF**
+2 or Degree
SKT கார்டன், S.பெரியபாளையம், ஊத்துக்குளி ரோடு, திருப்பூர்.
93676-77779

## WANTED
Arc-Welder -
Compressor Air Tank - 6
Gas-Welder Compressor
Air Driyer - 5
Service - Engineer -
Compressor - 7
Helper - 3
Compressor Fitter - 2
**Jayam Equipments**
Ganapathy, Coimbatore-06
9944642406

## WANTED
We are Looking For
**BUSINESS PARTNERS**
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing
Call
98945 72840

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகன் துணை
## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

## WANTED
CHENNAI PROJECT
PIPING
- FABRICATORS
- TIG / ARC WELDERS
- SUPERVISORS
- GRINDERS

90920 08000 / 99421 71692
prateeshengineering@yahoo.co.in

## PERMANENT JOB
- Plumbers ( பிளம்பர்கள் )
- Water Purification Service Technicians

MNC COMPANY.
9003101308

## ஆட்கள் தேவை
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெபிள் ஷூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சேஃப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் கான்ட்ராக்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome
jeeva.v@eliteelevators.com
Cell: 8925998689
Elite Elevators

## MACHINE REPAIR TECHNICIAN WANTED
Construction Company in **CALICUT, Kerala** requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.
GOOD SALARY
Accommodation Available
85938 12049

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
connecting emotions... Globally
A Brand of NexGen Logistics Pvt Ltd
## International Courier Service
ஆண் / பெண் வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

## WANTED
**ALAGU SANITARY & HARDWARES**
Ramnagar, Gandhipuram, CBE
- Experienced Staff -
- Sales
- Accounts Asst
- Godown Incharge

3 - 5 years experience. F/M
Freshers are also welcome
Attactive Salary + Inc
89032 19125

## INDUSTRIAL SALES EXECUTIVE WANTED
FOR REPUTED BEARING DISTRIBUTOR
DEGREE/ DIPLOMA IN ENGG WITH EXPERIENCE
JOP IS COIMBATORE BASED AND EXTENSIVE TRAVELLING IN AND AROUND.
Send Resume to
cbe@pibl.co.in

## ADMIN EXECUTIVE
Salary: 18K to 20K
Experienced system knowledge
## BILLING EXECUTIVE
Salary: 18K to 20K
Any / Preferred B.Pharm, D.Pharm
## MARKETING EXECUTIVE
Salary: 30K to 35K
(Monthly. Inc + Allow) Min 3yrs Exp
Shri Kalki Speciality's (P) Ltd., D.No. 4/22, Ramakrishna St, T.Nagar.
Ph: 8925266127 / 8925713334

## WANTED
FOUNDRY SUPERVISOR
SENIOR ACCOUNTANT
ACCOUNTS ASSISTANT
Sathy Road, Kovilpalayam
88700-04951 / 52

## WANTED
**Receptionist**
FOR DENTAL CLINIC
(FEMALE CANDIDATE)
94432 43070
Peelamedu, Coimbatore

## ஆட்கள் தேவை
கோவையில் உள்ள நிறுவனத்திற்கு GI PIPES வெல்டிங் தெரிந்த (3 முதல் 5) வருடம் அனுபவம் உள்ளவர்கள் சைட்டில் வேலை செய்யும் நபர்கள் உடனடி தேவை.
93444 55102
72000 55102

## ஆட்கள் தேவை
கோவை காட்டூரில் உள்ள இரும்பு வணிக நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
கேஸ்கட்டர்கள்
மார்கர்கள்
ஹெல்பர்கள்
அனுபவத்திற்கேற்ற நல்ல சம்பளம் தரப்படும்
0422 2230352
99949 91236

## WANTED
- Marketing / Sales Manager & Executives
- Service Manager & Supervisor
- Telecaller / CRO (F)
- Store incharge(M)

SWASTIK REFRIGERATION TRADERSS
Airconditioner Spare parts Distributors
Kodambakkam & Porur
98410 42122

## WANTED
FEMALE / MALE STAFF
For Office at RS Puram
1. ADMIN / ADMIN ASSISTANT
2. ACCOUNTANT
3. OFFICE BOY
Min 3yrs Experience
email: haasyacom@gmail.com
93622 22222

## WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

## WANTED
30 years old reputed engineering & manufacturing company requires
**Mechanical CADD Draftsman**
(DME - Exp : 2-3 Years only)
**Office Assistant** (Female Candidates only)
with computer knowledge & Tally
(Exp 1-2 years) for office @ valasaravakkam
Apply by mail vintechchennai@yahoo.co.in
*Preferences given to nearby candidates

## REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886


ADVERTISE WITH US
CONTACT US
9438610756

## JOB VACANCY
- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

AMRIT MEDICAL CENTRE
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm

## ஆட்கள் தேவை
திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்டீல் ஸ்ட்ரக்சரல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.
1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்

தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.
Ct: 93800 72095 / 98416 46097


## WANTED
**EXECUTIVES**
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999® BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

## DETECTIVE Intel.
#168, Defence Colony, Ch-32.

46 ஆண்டுகள் துப்பறிவதையே தொழிலாக கொண்ட Dr. V. குலோத்துங்க சோழன்
Best English Write/Speak with Computer skill
HIGH PROFILE LECTURERS -M/F
To Enroll Students to Educate
"DETECTIVE COURSES",
INCOMPARABLE with IAS, IPS, Dr., BE, BL.
Prepared by us i.e. 15 days Internship/ 6 Mths / 1Yr/ Certificates and Degree upto Ph.D level
Lawyers : Gather Evidence for Sr. Lawyers.
Marketing Professionals: Solving Problems of MNC's, Big Business Circles, etc.
TARGET ORIENTED, SALARY UPON TALENTS.
kulo.cholan@gmail.com
Ct: 94440 53979



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்

# ஏற்றம் தரும் கல்வி கண்களைப் போன்றது

மனித வாழ்வென்பது பலர் போற்றும் படி வாழ்தல் என்றென்றும் சிறப்பு. இத்தகைய ஏற்றத்தினைத் தருவது கல்வியே...எவராலும் மறுக்க முடியாது.

உலகப்பொதுமறை திருக்குறளில் வள்ளுவர் கல்வியின் சிறப்பை மிக அழகாகக் கூறுகிறார்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்

கற்றவரின் சிறப்புப் பற்றி கூறும் போது ஒருவனின் முகத்திலுள்ள கண்ணானது கற்றவருக்குரிய அடையாளம் என்று சொல்லப்படுகிற்து. அதே கண் இல்லாதவருக்கு முகத்தில் இரண்டு புண் இருப்பதாக குறிப்பிடப் படுகின்றது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக் கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.



நம் நாட்டின் ஆண்களும் பெண்களும் கல்வியால் ஒரு சேர எல்லாத் துறைகளிலும் சாதித்து வருகின்றனர்.

கல்வி என்பது “அள்ள அள்ளக் குறையாது வளம் தரும் அமுத சுரபி” என்ற அட்சய பாத்திரம் என்பதனை அனைவரும் உணர்ந்ததால் தான் இன்று நம் வாழ்க்கையோடு கல்வி இணைந்து விட்டது.

இன்று கல்வி நிலைகளில்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள்? அத்தனையும் சுவையான, சுகமான மாற்றங்கள். “கல்வியில் மாணவர்களே ஆணிவேர்” என்பதனை உணர்ந்து மாணவர்கள் சுவையாக சுமையின்றி கற்கவும், மனம் ஒன்றி கல்வி செயல்பாடுகளில் ஈடுபடவும், மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு ஓடோடி வரவும், தோழமை உணர்வுடன் ஆசிரியருடன் பழகிக் கற்கவும் உள்ள இன்றைய கல்வி முறை, ஒரு வரப் பிரசாதமாகும்.

கற்றலும் இனிது கற்பித்தலும் இனிது என்ற சூழ்நிலை இளந்தளிர்களிடம் ஒரு சிந்தனைப் புரட்சியை உருவாக்கியுள்ளது.

படிக்கும்போதே தொழிற்கல்வி மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டுகிறது. அவர்களின் சமூகப் பொறுப்புக்கும் அடித்தளமாக அமைகிறது. நாம் யார் ? நமக்குள் இருக்கும் திறன் என்ன ? என்பதை அறிந்து கல்வி கற்போர் வாழ்வில் ஏற்றம் பல கண்டுள்ளனர். மனிதநேயம், வாழ்வியல் சிந்தனைகள், பகுத்தறிவு , பொருளாதார அணுகுமுறை போன்றவற்றை கல்வி நமக்கு வழங்கி வாழ்வில் ஏற்றம் பெறச் செய்கிறது என்பது கண்கூடான உண்மை.

நாம் கல்வியால் உயர்ந்தால் நம் நாட்டை உயர்த்தலாம் இதனையே கவிஞர் வாலி அவர்கள் தமது திரை இசையில்....

அன்னையிடம் நீ அன்பை
வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை
வாங்கலாம்
இரண்டும் இருந்தால்
பேரைவாங்கலாம்
பேரைவாங்கினால் ஊரை
வாங்கலாம்
நல்ல நல்ல பிள்ளைகளை
நம்பி - இந்த
நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு
கைகளை
நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது
தம்பி

அறிவுக்கு இணங்கு
வள்ளுவரைப்போல்
அன்புக்கு வணங்கு
வள்ளலாரைப்போல்
கவிதைகள் வழங்கு
பாரதியைப்போல்
மேடையில் முழங்கு திரு. வி.க. போல்
நல்ல நல்ல பிள்ளைகளை
நம்பி - இந்த
நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது
தம்பி

கல்வி நமக்கு ஏற்றம் தருவது. முகத்தின் இரண்டு கண்களைப் போன்றது. அறிவுக்கு வெளிச்சம் காட்டுவது.

கல்வியால் பயனடைந்து மற்றவர்க்கு வழிகாட்டலாம் ஏழுபிறப்பிலும் உடன்வருவது ஏற்றமிகு கல்வி.



கவிச்சுடர்

**-கா.ந.கல்யாணசுந்தரம்**

# எங்கிட்ட மோதாதே...

70 வயது பெரியவர் ஒருவர் இரயில் பெட்டியில் அமர்ந்திருக்கிறார். கூட்டமே இல்லை. ரயில் புறப்படும் சமயம் 10 இளைஞர்கள் வந்து.... அதே பெட்டியில் ஏறுகிறார்கள். இரயில் புறப்படுகிறது. இளைஞர்கள் என்பதால் வயதுக்கேற்ற குறும்பு கூத்தாடுகிறது. ஒரு இளைஞன் "அபாயச் சங்கலியை இழுக்கலாமா?" என்கிறான் இன்னொருவன் அங்கே உள்ள அறிவிப்பு பலகையை பார் . சங்கிலியை இழுத்தால் 500 ரூபாய் அபராதம் என்று போட்டு இருக்கிறது. பேசாம வாடா என்கிறான் அடுத்து இன்னொருவன் நாம்தான் இத்தனை பேர் இருக்கிறோமே ... எல்லோருமாக ஆளுக்குக் கொஞ்சம் பணத்தைப் போட்டால்.... அபராதத்தை கட்டிவிடலாம் என்கிறான். உடனே வசூல் ஆரம்பமானது. பிறகு எண்ணிப் பார்க்கிறார்கள் . மூன்று 200 ரூபாய் நோட்டுகள் ஆறு 100 ரூபாய் நோட்டுகள் இரண்டு 50 ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ஆயிரத்து முன்னூறு ரூபாய் வசூல் ஆனதாகப் பேசிக் கொள்ளுகிறார்கள் . அந்தப் பணத்தை முதலில் யோசனை சொன்னவனிடம் கொடுக்க அவனும் தனது பாக்கெட்டில் வைத்துக் கொள்ளுகிறான் . அப்பொழுது ஒருவன் சொல்லுகிறான் சங்கிலிய புடிச்சு இழுப்போம். கேட்டாங்கன்னா.... நாங்க இழுக்கல அதோ ... அந்தப் பெருசுதான் இழுத்தாருன்னு... சொல்லிவிடுவோம் . அபராதத்த அவரு கட்டட்டும் . நமக்கு பணமும் மிச்சம் என்கிறான் இதைக் கேட்டு பதறிய பெரியவர்.... ஏப்பா.... என்னை வம்புல மாட்டி விடுறீங்க? என்று பரிதாபமாக கேட்கிறார் . இளமையின் காதில் இதெல்லாம் ஏறுமா ? ஒருவன் சங்கிலியை பிடித்து இழுத்தான் . ஓடி கொண்டிருந்த ரயில் ஓய்ந்து போய் நிற்கிறது . போலீஸ்காரர் சகிதமாக டி.டி.ஆர் அங்கு வருகிறார் . யார் சங்கிலியை பிடித்து இழுத்தது? என்று கேட்டபோது இளைஞர்கள் 10 பேரும் ஒரே குரலில் அதோ அந்த பெரியவர் தான் .... நாங்கள் சொல்லியும் கேட்காமல்.... இழுத்து விட்டார் என்று அபாண்டமாக பழி போடுகிறார்கள். போலீஸ்காரர் அந்த பெரியவரைப் பார்த்து நீங்கஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்க... ஐயா! நான் 200 ரூபாய் நோட்டுகளில் மூன்றும் 100 ரூபாய் நோட்டுகளில் ஆறும் 50 ரூபாய் நோட்டுகளில் இரண்டும் ஆக 1300 ரூபாய் பணம் வைத்திருந்தேன் . அதை இந்த இளைஞர்கள் பறித்துக் கொண்டார்கள் எனவேதான் சங்கிலியை இழுத்தேன்.



அதோ....அந்தப் பையனின் பாக்கெட்டில் தான் அந்தப் பணம் இருக்கிறது என்று பணம் இருந்த பையனை நோக்கி சுட்டிக் காட்டுகிறார். போலீஸ் கான்ஸ்டபிள் பையனை பரிசோதிக்க அவனுடைய பாக்கெட்டில் 1300 ரூபாய் பெரியவர் சொன்னவாறு இருந்தது . ஏன்டா இரயிலிலேயே அடித்து புடுங்கி ரீங்களா என்று அதட்டியவாறு அவர்களிடமிருந்த பணத்தை பெரியவரிடம் ஒப்படைத்து விட்டு அவர்களை இழுத்துச் சென்றார்கள் ஆப்புக்கு நடுவே மாட்டிய குரங்கை போல பெரியவரை பார்த்து முறைத்துக் கொண்டே போனார்கள்.









# விடுகதை

| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |



# ஜோக்ஸ்

நோயாளியை கூட்டிட்டு வரலாமா ?
மருத்துவர் ; கூட்டிட்டு வாங்க ! தூக்கிட்டுப் போங்க !

-------------------------

சாப்பிட முடியாத பன் எது ?
ரிப்பன் .

-------------------------

உங்க அப்பா தினமும் சீனி டப்பாவை ஏன் திறந்து பார்க்கிறார் ?
மருத்துவர் தினமும் சுகர் செக் பண்ண சொல்லி இருந்தார் .

----------------------

கணவன் ; சாமிகிட்ட என்ன வேண்டினாய்?
மனைவி ; அடுத்த பிறவியிலும் நீங்கதான் எனக்கு கணவராக வர வேண்டினேன் .
மனைவி ;சாமிகிட்ட நீங்க என்ன வேண்டினீர்கள் .
கணவன் ; எனக்கு அடுத்த பிறவியே இருக்கக் கூடாது என்று வேண்டினேன் .

-------------------------

சொர்க்கத்தில் கணவனையும் ,மனைவியையும் பிரித்து வைத்து இருப்பார்களாமே .



அதுனாலதான் அதன் பெயர் சொர்க்கம் என்கின்றனர் .

-------------------------

மண்டை உடையாம இருக்க தலைக்கவசம் போடுகின்றனர் .
தலைக்கவசம் உடையாம இருக்க யாரவது மண்டையைப் போடுறாங்களா ?

-------------------------

உங்க ஊரில் யாரவது பெரிய மனிதர்கள் பிறந்து இருக்கிறார்களா ?
எங்க ஊரில் யாருமே பெரிய மனிதராகப் பிறப்பதில்லை .எல்லோரும் குழந்தையாகவே பிறக்கின்றனர் .

---------------------

- கோழிக்கு முந்திரிப் பருப்புப் போட்டு வளர்த்தாலும் அது முட்டைதான் போடும் . 100 மதிப்பெண் போடாது .

-------------------------

என் மனைவி மாதிரி யாரும் தொலைக்காட்சித் தொடர்கள் பார்க்க முடியாது .
தொலைக்காட்சியைக் கட்டிப் பிடித்து அழுது கிட்டே பார்ப்பாள் .

-------------------------

கிளி ஏன் பச்சையா இருக்கு ?
அது பச்சைக்கிளி அதுதான் பச்சையா இருக்கு .

-------------------------







**S.A.Sharu hassan**
IV std
Gneneshwara nursery and
primary school,Trichy





**ASHWATH VARUN**
6th STANDARD "F"
PSBB Senior Secondary
School,K.K.Nagar.Chennai.





**சாதனா ஸ்ரீ**
ஆறாம் வகுப்பு
அரசு மேல்நிலைப்பள்ளி
வாழைப்பந்தல்




**PRAKANYA G**
BVM GLOBAL SCHOOL
CLASS 5



**Kaviya.A**
Thiruvalluvar nagar,
kamarajar street,
perungudi, chennai - 96

**P.கலைவேந்தன்**
இந்து மேல்நிலைப்பள்ளி
மதுராந்தகம்



சித்திரம்
வரையக்
கற்றுக்கொள்
சிந்தையைச்
சிறப்பாய்
வைத்துக்கொள்
வண்ணங்கள்
குழைப்பது
கலையன்றோ
எண்ணங்கள்
மணப்பது
சுவையன்றோ...

நிற்கும் மரங்கள்
அழகன்றோ
பறக்கும் பறவை அழகன்றோ
மிதக்கும் படகு அழகன்றோ
தாவும் தவளை அழகன்றோ...

சித்திரம் வரையக் கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
தூரிகைப் பிடிப்பது திறனன்றோ
தூய்மைக் குணமும் உயர்வன்றோ..

சின்னப் பூக்கள் சித்திரமாய்
சிரிக்கச் சிரிக்க வரையலாம்
குட்டி குட்டிச் செடிகளை
எட்டி எட்டி வரையலாம்..
சித்திரம் வரையக் கற்றுக்கொள்
சிந்தையைச் சிறப்பாய்
வைத்துக்கொள்
எதையும் கற்க இன்பந்தாம்
ஏற்றம் வாழ்வில்
நிச்சயந்தாம்...

# நேர்மை உயர்வு தரும்




மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப் பையை தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பி தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போ அவரது மனைவியார் 'உங்க பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்க, கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க' என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊரு மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இந்தாலும் கவுரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்கு சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னத்தான் பரிசு கொடுக்கப் போறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல நிற்பதை கண்ட ஊரார் சோமனை சும்மா விடக்கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை ராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர்மக்கள் அனைவரும் மரியாதை ராமன் முன்னால் போய் நின்றார்கள். சோமன் தான் பணப்பையையும், அதில் இருந்த வைர மோதிரம் தொலைத்த கதையையும, பூபாலன் தான் பணப்பை கண்டுபிடித்த கதையையும் சொன்னார்கள்.

ஆக இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படி தொலைத்தவர் இதுவரை யாரும் புகார் கொடுக்கவில்லை, அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை நம்ம ஊரு வழக்குப்படி கிடைத்த பணத்தில் 10 பங்கு அம்மன்கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

ஆக பூபாலன் அந்த பணத்தை தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையை கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்.'

மரியாதை ராமன் தீர்ப்பு சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகிவிட்டது.

பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்கு கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்கு கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

## காலணி!



காலணியே காலணியே
காலமெல்லாம்
உழைப்பாயே
கோலமுடன் நீயும்தான்
கூடவேதான் வருவாயே!

வெயிலுக்கும்
மழைக்குந்தான்
வீறுகொண்டு
உழைப்பாயே
நயன்மையோடு
எப்போதும்
நாளெல்லாம்
உழைப்பாயே!

பாதுகாப்பாய்
எங்களையே
பார்த்திடவே நடப்பாயே
ஓதிடுவோம்
உம்மைத்தான்
உள்ளன்பால்
வாழ்த்திடுவோம்!

முனைவர்
**இராம. வேதநாயகம்.**

## வெல்ல கட்டி...

செல்ல சின்ன வெல்ல
கட்டி.....

எல்லோருக்கும் பட்டு
கன்னு குட்டி.....

தூளியில் ஆடும் வெண்(
ணை )
நிலவு....
நீ எல்லோருக்கும்
பிள்ளை உறவு.....
யசோதைக்கு கிடைத்த
வரம்.....

ஒரு நாளேனும்...
நாங்களும்...
உணர்ந்திடணும்....
நந்தன் போலே உன்னை
கொஞ்சி...
நாங்களும் கூட..
மகிழ்ந்திடணும்.....

மாலோலா.. உனை
தாலாட்டி.......


மரகத பச்சை
பட்டுடுத்தி.....

மணி முத்தாரம் மயில்
தோகை
வைத்து....
உன் மின்னும் கண்ணில்



கரு..
மையெழுதி....
சீராட்டி......
பாராட்டிடவே......
சந்தர்ப்பம் தருவாய்....
சாரங்கா....

உன் முன்னாடும் கிளி
போலே.......
என்னையும் பார்ப்பாய்....
ஸ்ரீனிவாசன் என்னும்
......
பிரியரங்கா.........



குட்டி மானே சுட்டி மானே
எங்கப் போறே?

புல்லிருக்கு, குளமிருக்கு
மேயப் போறேன்...

குட்டி ஆமை சுட்டி ஆமை
எங்கப் போறே?

மான் குட்டி அண்ணாவுக்குத்
துணைக்குப் போறேன்...

குட்டி முயலே சுட்டி முயலே
எங்கப் போறே..

மான் குட்டி மாமாவோட
மேயப் போறேன்...

குட்டிக் குரங்கே சுட்டிக்
குரங்கே
எங்க போறே?

புலிவந்தா மான் தம்பிக்குச்
சொல்லப் போறேன்...

காடு ரொம்ப அழகு
காடு ரொம்ப அழகு

கேடு இல்லாம கெட்டத
செய்யாம இருந்தா
எல்லாம்
அழகு...

**ஹரணி**
தஞ்சாவூர்-

# பொதுஅறிவுப் பூங்கா



1----ஒரே ஆண்டில் இரண்டு முறை இமய மலை சிகரத்தை சென்றடைந்து சாதனை படைத்தவர் 'சந்தோஷ் யாதவ்' என்ற இந்தியப் பெண்மணி ஆவார்.

2----இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்ப தற்கான சட்டம் 1947 ஜூலை மாதம் பிரித்தானிய பாராளு மன்றத்தில், நிறைவேற்றப் பட்டது.

3----மத்திய கண் காணிப்பு ஆணையம் 1964ஆம் ஆண்டு துவங்கப் பட்டது.

4----அரிய வகை மான்இனங்களைக் கொண்ட, மிதக்கும் தேசியப் பூங்கா மணிப்பூர் மாநிலத்தில் உள்ளது.

5-----நலிந்தோருக்கான பாது காப்பை உறுதி செய்யும் அரசியல் அமைப்பு சட்டத்தில், 48வது பிரிவில் உள்ளது.

6----துப்பாகிக் குண்டுகள் துளைக்காத கவச உடை தயாரிப்பில் பாளி எத்தலின் மூலப் பொருள் பயன் படுத்தப் படுகிறது.

7----டோக்கி யோவின் பழைய பெயர் 'ஈ டோ 'என்பதாகும்.



குடந்தை
**பரிபூரணன்.**

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## மறு சுழற்ச்சிக்காக பொருட்களை பிரித்து எடுக்கும் பொருள் மீட்பு வசதி மையம் திறப்பு





நாகர்கோவில் மாநகராட்சி வட்டவிளையில் மறு சுழற்ச்சிக்காக பொருட்களை பிரித்து எடுக்கும் பொருள் மீட்பு வசதி மையத்தை மேயர் மகேஷ் திறந்து வைத்தார்.

## எஸ்ஐஆர் படிவம் வழங்கும் பணி



குமரி இரணியல் பகுதியில் எஸ்ஐஆர் படிவம் வழங்கும் பணியை கலெக்டர் அழகு மீனா ஆய்வு செய்தார்.

## அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம்



கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை கண்டித்து அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

## மாதவரம் பகுதியில் மேம்பாட்டு பணி



மாதவரம் பகுதியில் மேம்பாட்டு பணிகளை மேயர் பிரியா, சுதர்சனம் எம்எல்ஏ பார்வையிட்டனர்.

## "தமிழகம் தலை நிமிர, பயணம்



ஈரோட்டில் "தமிழகம் தலை நிமிர, பயணத்தின் போது மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏ தி.மு.க.வில் இணைந்தார்



ஆலங்குளம் தொகுதி எம்எல்ஏ வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் மற்றும் மூத்த வழக்கறிஞர் அப்துல் சலீம் ஆகியோர் நேற்று தி.மு.க.வில் இணைந்தனர். உடன்பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர் நேரு, கனிமொழி எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் ஆகியோர் உள்ளனர்.

## மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அரங்கம்



வேலூர் மாவட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை துணை முதல்வர் உதயநிதி பார்வையிட்டார்.

## நியாய விலை கடையின் திறப்பு விழா



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விராட்டி குப்பம் ஊராட்சியில் உள்ள ஸ்டாலின் நகரில் நேற்று முன்தினம் நவம்பர் 3 புதிய பகுதி நேர நியாய விலை கடையின் திறப்பு விழாவில் அன்னியூர் சிவா எம்எல்ஏ கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்

## வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள்




சிவகங்கை மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் SIR வாக்காளர் பட்டியல் திருத்தம், வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட செயலாளர், அமைச்சர் பெரியகருப்பன் ஆலோசனைகள் வழங்கினார்.

## அன்னாபிஷேகம் சிறப்பு வழிபாடு



அருள்மிகு அண்ணாமலையார் நவம்பர்- 4 திருக்கோயிலில் ஸ்ரீ கல்யாண சுந்தரேஸ்வரர் அலங்காரத்தில் அருள்பாலிக்கும் காட்சி. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ கல்யாண சுந்தரேஸ்வரரை வேண்டி அருள் பெற்றனர். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## புதிய மளிகை கடை திறப்பு



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நியூடவுன் பகுதியில் கே. ஆனந்தன் அவர்களின் மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் புதிய மளிகை கடை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் தலைவர் ஏ.எம். விக்ரம ராஜா திறந்து வைத்தார். உடன் கே.பி.எஸ். மாதேஸ்வரன் திருப்பத்தூர் மாவட்ட வணிகர் சங்க பேரவை செயலாளர் தலைமையில் சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்

## வளர்ச்சிப்பணிகளை அமைச்சர் சேகர்பாபு ஆய்வு செய்தார்



சென்னை கொளத்தூரில் வளர்ச்சிப்பணிகளை அமைச்சர் சேகர்பாபு நேற்று ஆய்வு செய்தார்.

## பூத் கமிட்டி உறுப்பினர்கள் மாநாடு



**சென்னை, நவ.5:**

தமிழ்நாடு பாஜகவின் மாநில அளவிலான பூத் கமிட்டி உறுப்பினர்கள் மாநாடு சென்னை ஓய்எம்சிஏ மைதானத்தில் நேற்று நடந்தது.

தேர்தலில் தமிழ்நாடு பாஜக எப்படி எதிர்கொள்வது, பூத் கமிட்டி உறுப்பினர்கள் எப்படி தயாராவது குறித்து மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

## அன்னாபிஷேகம்



சிறப்பு அலங்காரத்தில் திருமயம் ஸ்ரீசத்தியகிரீஸ்வரர்.

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி



**திருவள்ளூர்,நவ.5:**

திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் மங்கள வாரத்தில் சிகப்பு நிற சேலையில், வண்ணமலர் மாலைகளுடன், மயிலிறகு மாலையுடன் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அருள்பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மூலவர் கோபுர கலசத்திற்கு புனித நீர்



விழுப்புரம் அடுத்த கருங்காலிபட்டு லட்சுமி நாராயண பெருமாள் கோவிலில் நேற்று நவம்பர் 3 காலை 9 மணிக்கு கடம் புறப்பாடாகி 9 .45 மணிக்கு மூலவர் கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு வெகு விமரிசையாக கும்பாபிஷேக விழா நடந்தது .இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர்.

## ஆய்வு கூட்டம்



அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத்துறை சார்ந்த அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் நேற்று ஆய்வு கூட்டம் நடந்தது.

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்



ஒட்டன்சத்திரம் தொகுதி தொப்பம் பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பயனாளிக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்.

## கணக்கீட்டு படிவம் வழங்கும் பணி



செங்கோட்டை, நீராத்திலிங்கம் தெருவில் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பாக கணக்கீட்டு படிவம் வழங்கும் பணியை கலெக்டர் கமல் கிஷோர் ஆய்வு செய்தார்.

## ரசு மணி

இட்லியின் ருசி அதனுடன் இணையும் சட்னியை பொருத்தே அதேபோல்தான் வாழ்க்கை நம்மோடு பயணிக்கும் இணையின் குணத்தை பொருத்தே மகிழ்ச்சி



ராஜகோபாலன்.J சென்னை 18

## 105 கிடா வெட்டி ஆண்களுக்கு விடிய விடிய விருந்து



ஆண்டிபட்டி அருகே அணைக்கரைப் பட்டி சடையாண்டி கோயில் திருவிழாவில் 105 கிடா வெட்டி ஆண்களுக்கு விடிய விடிய விருந்து அளிக்கப்பட்டது.

## பக்தர்கள் கோவிலுக்கு வெளியிலேயே குத்து விளக்கு பூஜை நடத்தி நேர்த்திக் கடன்



திருவெண்ணெய்நல்லூர் மங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் கோவிலில் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பாக நடக்க இருந்த விளக்கு பூஜைக்கு, அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்து கோவிலை முடியதால் பக்தர்கள் கோவிலுக்கு வெளியிலேயே குத்து விளக்கு பூஜை நடத்தி நேர்த்திக் கடனை நிறைவேற்றினர்.

## சேலம் சிறை தியாகிகள் நினைவு ஜோதி பயணம்

**ராணிப்பேட்டை, நவ.5:**

பொதுத்துறை நிறுவனங்கள் பாதுகாக்க, தொழிலாளர் விரோத 4 சட்டத் தொகுப்புகள் ரத்து செய்யக்கோரி இந்திய தொழிற்சங்கமையம் 16 வது மாநில மாநாட்டிற்கு சேலம் மத்திய சிறையில் திங்களன்று (நவ. 4) புறப்பட்ட ஜோதி பயணத்திற்கு செவ்வாயன்று (நவ. 4) மாவட்ட செயலாளர் ஆ தவராஜ் தலைமையில் முத்துக்கடை பேருந்து நிலையம் அருகில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் மாநில செயலாளர் சி. நாகராஜன், வி.ச மாநில செயலாளர் இரா.சரவணன், சிஐடியு கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் என். ஸ்ரீதர், வேலூர் மாவட்ட செயலாளர் எஸ்.பரசுராமன், திருவண்ணாமலை முரளி, விதொச மாவட்ட செயலாளர் பி. ரகுபதி, வி.ச மாவட்ட தலைவர் எஸ். கிட்டு, செயலாளர் எல்.சி. மணி, ஆட்டோ சங்க மாவட்ட தலைவர் கேகேவி. பாபு, செயலாளர் பி. மணி, மின்சாரம் மாவட்ட தலைவர் காமராஜ், சத்துணவு மு. மாநில செயலாளர் எஸ். முரளிதாஸ், போக்குவரத்து மண்டல தலைவர் கே. ரவிச்சந்திரன், கட்டுமானம் மாவட்ட செயலாளர் தருமன்முருகன், பழனியப்பன், சேலம் மாவட்ட பொருளாளர் வி. இளங்கோவன், சேலம் மாவட்ட சாலை போக்குவரத்து மாவட்ட செயலாளர் பி. முருகன் உள்ளிட்டோர் பேசினார்கள். இறுதியாக மாவட்ட பொருளாளர் என். ரமேஷ் நன்றி கூறி முடித்து வைத்தார்.

# சுற்றுலா: செங்கல்தேரி மலை, தேங்காய் உருளி அருவி... சுற்றுலா சொர்க்கம்!

நெல்லை மாவட்டம் களக்காடு மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் செங்கல்தேரி மற்றும் களக்காடு தேங்காய் உருளி போன்ற சிறப்பான நீர்வீழ்ச்சிகள் அடங்கிய பகுதிகள் ஏராளமாக உள்ளன. இந்தப் பகுதிகளைச் சார்ந்த மக்கள் பொங்கல் மறுநாள் இந்த பகுதிகளுக்கு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.



அனைத்துஇடங்களும்வனங்கள் நிரம்பிய காடுகள், பசுமையான புல்வெளிகள், பரந்த மரங்கள் என நிறைந்துள்ளன. இடையிடையே நீர்வீழ்ச்சிகளும் சிற்றாறுகளும் எண்ணற்ற அளவில் உள்ளன. இவை அனைத்தும் சுற்றுலா செல்ல ஏற்ற இடம் ஆகும்.

தற்போது அனைத்து இடங்களுக்கும் செல்ல வனத்துறை அனுமதிபெறவேண்டும். களக்காடு, முண்டந்துறை புலிகள் சரணாலயம் பகுதியில் அமைந்துள்ளது. இயற்கை எழில் மிகுந்த இடமாகும். இங்கு உயிரினங்கள் அதிக அளவில் உள்ளன. அதிலும் சிங்கவால் குரங்குகள் இந்த பகுதிகளில் அதிகமாக காணப்படுகின்றன. இந்த இடத்தில் மீன்கள் காப்பகம், அருங்காட்சியகம் போன்றவை உள்ளன. களக்காடு பஸ் நிலையத்தில் இருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் களக்காடு தலையணை பகுதியை அடையலாம். ஓங்கி உயர்ந்த காடு, பசுமையான மரக்கூட்டங்கள், பசுமையான காடுகள் அவற்றின் நடுவே பாறைகள் மீது தண்ணீர் மோதி வருவது மிகவும் சிறப்பாக இருக்கும். இந்த தண்ணீர் ஏராளமான மூலிகைகளை சுமந்து வருகிறது. இத்தகைய அருவிகளில் மற்றும் நீரில் குளிப்பது உடம்புக்கு புத்துணர்ச்சியும் புதிய தெம்பையும் வழங்குகிறது. இந்த தலையணை பகுதியில் குளித்தால் மீண்டும் மீண்டும் குளிக்கத் தோன்றும்.

பொழுதுபோக்குக்காக சிறுவர் பூங்கா, மீன் காட்சியகம், அருங்காட்சியகம், சிற்றுண்டி ஆகியவை அருகில் உள்ளன. சுற்றுலா பயணிகள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மூலிகை கலந்த நீரில் குளிப்பதற்காகவே உள்ளூர் மக்களும் வெளியூர் மக்களும் இங்கு படை எடுத்து வருகின்றனர். இங்கு ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றுவதற்கு தனி அறைகள் உள்ளன. மேற்கு தொடர்ச்சி மலையில் பல்வேறு உயிரினங்கள் உள்ளன. பூலித்தேவன் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்த பகுதியில் உலா வந்ததாக கூறப்படுகிறது. அவரது ஆளுகையில் கீழ் இந்த பகுதி இருந்ததாக வரலாறு கூறுகிறது. களக்காடு பஸ் நிலையத்தில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் செங்கல் தேரி மலையும் ஏரியும் உள்ளது. இந்த இடத்திலிருந்து எங்கு பார்த்தாலும் பசுமையான காடுகளையும் இயற்கை காட்சிகளையும் கண்டு களிக்கலாம். இதன் அருகில் புகழ்பெற்ற கருமாண்டி அம்மன் கோவில் உள்ளது. இங்குள்ள மக்கள் இந்த கோவிலுக்கு சென்று வழிபடுவது வழக்கம்.

இதன் கீழ் பகுதியில் தேங்காய் உருளி, கோழிக்கால் போன்ற ஏரிகளும் அருவிகளும் ஏராளமாக உள்ளன. அனைத்து இடங்களையும் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதில் நடந்து செல்வது சுகமான அனுபவமாக இருக்கும்.

மான்கள் மற்றும் மிருகங்கள் நீர் அருந்துவதற்காக சிறிய ஏரிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தேங்காய் உருளி அருவியை ஒட்டி உள்ள பாறைகளில் ராமர் லட்சுமணர் சீதை அனுமான் போன்றவர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அருவியில் குளித்து விட்டு வரும் நபர்கள் இந்த பாறையை தொட்டு வணங்கி செல்வது வழக்கம். தலையணை பகுதியில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் செங்கல் தேரி பகுதி அமைந்துள்ளது.

இந்த இடங்களுக்கு செல்ல வனத்துறை இடம் அனுமதி பெற வேண்டும். களக்காடு வனவிலங்கு சரணாலயம் 1962 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உள்ளூர் மக்கள் தவிர வெளியூரிலிருந்தும் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் இந்த இடங்களுக்கு வந்து அருவியில் குளித்துவிட்டு செல்கின்றனர். இத்தகைய பகுதிகளை சரியான முறையில் பாதை வசதி அமைத்துக் கொடுத்து இதை சிறந்த சுற்றுலா தலமாக மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும். தற்போது தலையணைக்கு மட்டும் செல்வதற்கு வசதியாக ரோடு போடப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு கார்னர்

# தமிழ்நாடு விலங்குகள் நல வாரியத்தில் வேலை வேண்டுமா?: உடனே விண்ணப்பிக்கவும்!

தகுதி: கால்நடை அறிவியல் துறையில் இளங்கலை (பி.வி.எஸ்சி) பட்டம் மற்றும் ஏஎச் அல்லது முதுகலை கால்நடைஅறிவியல் (எம்.பி.எஸ்சி) முடித்திருக்க வேண்டும். தமிழ்நாடு கால்நடை கவுன்சிலில் மருத்துவராக பதிவு செய்திருக்க வேண்டும்.

பணி அனுபவம்: விலங்குகள் பராமரிப்பு , விலங்குகள் பிறப்பு கட்டுபாடு அறுவை சிகிச்சை ஆகியவற்றில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும். கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் அரசு நலத்திட்டங்கள் குறித்தும், சட்டம் மற்றும் நெறிமுறைகளை அறிந்தவராக இருக்க வேண்டும். கணினி பயன்படுத்துதல் மற்றும் அறிக்கை தயாரித்தலில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: கால்நடை அறுவை சிகிச்சை நிபுணர்

காலியிடங்கள்: 38 வயது வரம்பு: 1.4.2025 தேதியின்படி 40-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: கால்நடை அறிவியல் துறையில் இளங்கலை (பி.வி.எஸ்சி) பட்டம் மற்றும் ஏஎச் முடித்திருக்க வேண்டும். அறுவை சிகிச்சை, மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத்தில் முதுகலை பட்டம்(எம்.வி.எஸ்சி) முடித்தவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.

பணி அனுபவம்: குறைந்தபட்சம் 2 ஆண்டு விலங்குகள் பிறப்பு கட்டுபாடு சிகிச்சையில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். சம்பளம்: தொகுப்பூதியமாக மாதம் ரூ.56,000 வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: https://tnawb.tn.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதனுடன் அனைத்து சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்து கீழ்வரும் அஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி: தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம், எண்.13/1, 3 ஆவது கடல் நோக்கு சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை - 600 041.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சென்று சேர கடைசி நாள்: 14.11.2025 மேலம் கூடுதல் தகவல்களுக்கு 044-24575701 அல்லது tnawb23@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம்.

# நகை பையை ஒப்படைத்த தம்பதிக்கு பாராட்டு

**சேலம், நவ.5:**

நகை பையை ஒப்படைத்த தம்பதியை நேரில் சந்தித்து தமிழ்நாடு மக்கள் ஒற்றுமை மேடையினர் பாராட்டு தெரிவித்தனர்.

சேலம், லீ பஜார் சாலையில் கிடந்த 11 பவுன் தங்க நகை பையை காவல்துறை மூலம் உரியவரிடம் கொடுத்த சேலம், ரெட்டிபட்டியை சேர்ந்த பாஷா - பர்வீன் ஏழை தம்பதியரின் நேர்மையை பாராட்டி, சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி வாழ்த்து தெரிவித்தார். இந்நிலையில், சனி யன்று தமிழ்நாடு மக்கள் ஒற்றுமை மேடை அமைப்பினர், அவர்கள் வீட்டிற்கு நேரில் சென்று பாராட்டு தெரிவித்தனர். இந்நிகழ்வில், அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.சேதுமாதவன், ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள் ஆர். குழந்தைவேல், என்.பிரவீன்குமார், தமுஎகச மாநகரச் செய லாளர் ஆர்.கே.சங்கர், வாலிபர் சங்க மாநகரச் செயலாளர் டி.மனோகரன், சிபிஎம் கிளைச் செயலாளர் டி.பிரகாசம் உள் ளிட்டோர் பங்கேற்றனர்.

# பதிவுத்துறையில் 30 பேருக்கு உதவி ஐ.ஜி., பதவி




**சென்னை, நவ.5:**

பதிவுத்துறையில், மாவட்ட பதிவாளர்களாக இருந்த, 30 பேர், பதவி உயர்வு அடிப்படையில் உதவி ஐ.ஜி.,க்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

தமிழக பதிவுத்துறை, 64 பதிவு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில், ஒவ்வொரு பதிவு மாவட்டத்திலும், ஒரு நிர்வாக மாவட்ட பதிவாளர், ஒரு தணிக்கை மாவட்ட பதிவாளர் இருப்பர்.

வருவாய் மாவட்ட தலைநகரங்களில் உள்ள நிர்வாக மாவட்ட பதிவாளர் இடங்கள், உதவி ஐ.ஜி., நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டன. ஆனால், இதில் பெரும்பாலான இடங்களில் உதவி ஐ.ஜி.,க்கள் இல்லை. இதால், மாவட்ட பதிவாளர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில், உதவி ஐ.ஜி., யாக பதவி உயர்வு அளிக்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி, 30 மாவட்ட பதி வாளர்களுக்கு, உதவி ஐ.ஜி., யாக பதவி உயர்வு அளித்து அரசு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இவர்களுக்கான புதிய பணியிடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், ஏற்கனவே இருந்த ஆறு உதவி ஐ.ஜி.,க்கள், 11 மாவட்ட பதிவாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, அரசின் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# பொங்கல் வேட்டி, சேலை நவ.15 முதல் விநியோகம்: அமைச்சர்

**காஞ்சிபுரம், நவ.3:**

பொங்கல் பண்டிகையை யொட்டி, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப் படும் இலவச வேட்டி, சேலை நவம்பர் 15 ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று கைத்தறி மற்றும் நெசவாளர் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் எண்ணெய்க்கார தெரு வில் உள்ள முருகன் பட்டுப்புடவை கூட்டுறவு சங்கத்தின் விற்பனை நிலையம் புனரமைக்கப்பட்டு வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதில் குத்து விளக்கு ஏற்றி விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்த அமைச்சர் ஆர்.காந்தி, ரிப்பன் வெட்டி முதல் வியாபாரத்தைத் துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்குப் பின் செய்தியா ளர்களைச் சந்தித்த அமைச்சர் காந்தி, "திமுக ஆட்சியில் கைத்தறி நெசவாளர் களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பொங்கலுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி, சேலைகள் மிகவும் தர மாக இருப்பதால் அனைவரும் கட்டி மகிழ் கின்றனர்.

இந்த ஆண்டுக்கான பொங்கல் வேட்டி, சேலைகள் நவம்பர் 15 ஆம் தேதி முதல் விநியோகிக்கப் பட வுள்ளன" என்று தெரிவித்தார்.

"இந்திய அளவில் காஞ்சிபுரம் பட்டுக்கு அதிக வரவேற்பு இருந்து வரு கிறது. இங்கு 30-க்கும் மேற்பட்ட பட்டுப் புடவை உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு சங்கங் களில் விற்பனை செய்யப்படும் பட்டு கள்தான் உண்மையான பட்டு. அதனை உத்திரவாதத்துடன் விற்பனை செய் கிறோம்" என்றார். "தங்கம் மற்றும் வெள்ளி விலை உயர்வதால் பட்டுச் சேலைகளின் விலை யும் உயர்ந்துள்ளது. எனவே, புடவை களில் சேர்க்கப்படும் ஜரிகையில் தங்கம் மற்றும் வெள்ளியைக் குறைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மழைக் காரணமாக இதுவரை நெச வாளர்களுக்குப் பெரிய அளவில் பாதிப்பு இல்லை" என்று அமைச்சர் காந்தி குறிப் பிட்டார்.

"அதிமுக ஆட்சியில் பத்தாண்டு களில் 9 ஆண்டுகள் கோ-ஆப் டெக்ஸ் நிறு வனம் நட்டத்தில் இயங்கியது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டி லேயே ரூ. 9 கோடி லாபம் ஈட்டியது.

58 சொசைட்டிகள் நவீனமயமாக்கப் பட்டு உள்ளதால் வியாபாரம் அதிகரித்து கூட்டுறவு சங்கங்கள் லாபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன" என்றார்.

# விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமை தொகை எப்போது?: உதயநிதி ஸ்டாலின்



**ராணிப்பேட்டை, நவ.5:**

ராணிப்பேட்டையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் பேசிய உதயநிதி ஸ்டாலின், விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்குவது குறித்த முக்கிய தகவலையும் கூறினார். அதன் விபரம்;

"திமுக அரசு, பெண்கள் முன்னேற்றத்திற்கான அரசாக உள்ளது. தேர்தல் வாக்குறுதியில் கூறிய கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை கடும் நிதி நெருக்கடியிலும் திராவிட மாடல் அரசு வழங்கியது. இதுவரையில் தமிழகத்தில் கடந்த 26 மாதங்களில் 1.20 லட்சம் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. ராணிப்பேட்டை மாவட்டத்தில் 1 லட்சத்து 70 ஆயிரம் மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கப்படு கிறது. இந்த ஆண்டு டிசம்பர் முதல் விடுபட்ட பெண்களுக்கும் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட உள்ளது." என்றார்.

துணை முதல்-அமைச்சர் கூறிய இந்த தகவல், புதிதாக மகளிர் உரிமை தொகைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாக அமைந்துள்ளது.

# ககன்யான் திட்டத்தில் முன்னேற்றம் மார்ச்சில் ஆளில்லாத விண்கலம் பாயும்: 'இஸ்ரோ' தலைவர் தகவல்



**சென்னை, நவ.5:**

'எல்.வி.எம்., 3 - எம் 5' ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. எல்.வி.எம்., திட்டத்தில் இது எங்களது எட்டாவது வெற்றி. இதற்காக பணியாற்றிய விஞ்ஞானி களுக்கு பாராட்டுகள்.

மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும், 'ககன்யான்' திட்ட பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. அதற்கு முன், மூன்று ஆளில்லா விண்கலங்களை அனுப்பும் திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.

அதில், முதல் திட்டத்தை, 2026 மார்ச் 31ம் தேதிக்கு முன் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதற்கான உபகரணங்கள் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு வந்துள்ளன. தற்போது அவற்றை ஒருங்கிணைக்கும் பணி நடக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடி, அடுத்த ஐந்து ஆண்டுகளில், 50 விண்வெளி திட்டங்களை செயல்படுத்த இலக்கு நிர்ணயித்துள்ளார். இது, எளிதானது கிடையாது. அதற்காக நாங்கள் தீவிரமாக பணியாற்றி வருகிறோம்.

அடுத்ததாக இந்த நிதியாண்டுக்குள், ஏழு திட்டங்களை செயல்படுத்த உள்ளோம். உடனடியாக வணிக நோக்கத்தில், கண்காணிப்பு செயற்கைக் கோள் ஒன்று, 'எல்.வி.எம்., 3 - எம் 6' ராக்கெட் வாயிலாக விண்ணில் ஏவப்பட உள்ளது. அதன்பின், மூன்று பி.எஸ்.எல்.வி., திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. ஸ்ரீஹரிகோட்டா மூன்றாவது ஏவுதளம் அமைக்கும் பணிகளும் நடக்கின்றன.

தமிழகத்தில் குலசேகரப்பட்டினம் பகுதியில் ஏவு தளம் அமைக்கும் பணிகள் முடிவடைந்த பின், மூன்று வாரங்களுக்கு ஒருமுறை, சிறிய ரக ராக்கெட்டுகளை விண்ணில் ஏவ திட்டமிட்டுள்ளோம்.

# ராணிப்பேட்டையில் ரூ.296.46 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் - உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

**ராணிப்பேட்டை, நவ.5:**

*ராணிப்பேட்டையில்ரூ.296.46 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் - உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்*

ராணிப்பேட்டையில் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.



தமிழ்நாடு துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று ராணிப்பேட்டை மாவட்டத்தில் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 72,880 பயனாளிகளுக்கு 296.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"தமிழ்நாடு துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்றைய தினம் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ஆற்காடு, திமிரி, வாலாஜா, அரக்கோணம், காவேரிப்பாக்கம், நெமிலி, சோளிங்கர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் அங்கன்வாடி மையம், ஊராட்சி மன்ற அலுவலகம், தானிய சேமிப்பு கிடங்கு, பால் கொள்முதல் நிலையம், பொது நூலகம், இருப்பிட கட்டிடம், பள்ளி வகுப்பறை கட்டடம், உடற்பயிற்சி கூடம், பேருந்து நிழற்கூடம் என மொத்தம் 22.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92 முடிவுற்ற திட்டப் பணிகளையும்,

பொதுப்பணித்துறை சார்பில் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் புலிவலம், காவேரிப்பாக்கம், நெமிலி ஊராட்சி ஒன்றியம் மேல்களத்தூர், அம்மூர் மற்றும் கலவை ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 9.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 39 வகுப்பறை கட்டடங்களையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ஆற்காடு, ராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை, மேல்விஷாரம், அரக்கோணம் ஆகிய நகராட்சிகளில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குழாய் மற்றும் பம்பு அமைக்கும் பணிகள், சமுதாய கழிப்பிடம், பசுமை பூங்கா, பள்ளி வகுப்பறை, பல்நோக்கு கட்டடம், அங்கன்வாடி மையம், பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் புனரமைப்பு பணிகள் என 11.19 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 திட்டப் பணிகள் என மொத்தம் 43.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 115 திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் செக்கடிகுப்பம், வாலாஜா ஊராட்சி ஒன்றியம் திருமலைச்சேரி, திமிரி ஊராட்சி ஒன்றியம் அகரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள நீர்வரத்துக் கால்வாய்களின் குறுக்கே கட்டப்பட உள்ள 3 உயர்மட்ட மேம்பாலங்கள் மற்றும் திமிரி ஊராட்சி ஒன்றியம் குப்பிடிச்சாத்தம் ஊராட்சியில் துணை சுகாதாரம் நிலையம் கட்டும் பணி என 17.71 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 4 திட்டப் பணிகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நெமிலி வட்டம், மேலபுலம் ஊராட்சி தர்மநீதி கிராமம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகத்தில் 6.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 கூடுதல் கிடங்குகள் மற்றும் வளாக சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டப் பணிகளுக்கும் என மொத்தம் 24.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து துணை முதல்-அமைச்சர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 12,075 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் இயற்கை மரண உதவித் தொகை என 135.29 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### இசை உருவாக்கும் புதிய ஏஐ கருவி - ஓபன் ஏஐ திட்டம்!

Text-to-image மற்றும் Sora வீடியோ கருவிகளை அறிமுகப்படுத்திய பிறகு, தற்போது இசை உருவாக்கத்திலும் இறங்க ஓபன் ஏஐ நிறுவனம் திட்டமிட்டுள்ளது. ஓபன் ஏஐ நிறுவனம், உரை (lyrics) அல்லது ஒலி (audio) ப்ராம்ட்கள் மூலம் இசையை உருவாக்கக்கூடிய புதிய ஏஐ கருவியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்கென ஓபன் ஏஐ நிறுவனம் நியூயார்க் நகரில் உள்ள ஜூலியார்ட் பள்ளி மாணவர்களுடன் இணைந்து, இசை ஸ்கோர்களை குறிச்சொற்களால் அடையாளப்படுத்தி (annotate) தனது ஏஐ மாடலை இசைக்கான பயிற்சி வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த ஏஐ கருவி, பாடல் வரிகளின் அடிப்படையில் மெலடிகளையும், பதிவு செய்யப்பட்ட ஒலியிலிருந்து இசையையும் உருவாக்கும். குரல் வடிவில் பாடல்களுக்கு, இசைக் கருவிகளின் ஒலிகளை பின்னணியில் சேர்க்கும் திறன்களைக் கொண்டிருக்கும். இதில், வீடியோ கிளிப்புகளுடன் பின்னணி இசையை தானாக ஒத்திசைக்கவும் (sync) முடியும் என்று கூறப்படுகிறது.

### ரோபோக்களுக்கு மனித வடிவ கைகள் ரெடி!



வித்தியாசமான ரோபோ கரம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது சீனாவின் வூஜி டெக். 'ஹ்யூமனாய்டு' எனப்படும் மனித வடிவ ரோபோக்களுக்கு பொருத்தக் கூடிய இயந்திரகண், காது, கை, கால், மூட்டுகள் போன்ற தனித்தனி பாகங்களை தயாரிக்க, இன்று சீன நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. வூஜி டெக்கின் ஐந்து விரல் ரோபோ கரம், மனித உருவ ரோபோக்கள் மற்றும் தொழிற்சாலை ரோபோக்களுக்கு பொருத்தக்கூடிய வகையில் உருவாக்கபட்டுள்ளது.

இந்த ரோபோ கையின் எடை, 600 கிராமுக்கும் குறைவு. இதன் விரல்களும் மணிக்கட்டும் 20 டிகிரி கோணம் வரை அசையும் திறன் கொண்டது. இதன் விரல்நுனி விசை கிட்டத்தட்ட 15 நியூட்டன் அளவுக்கு இருக்கும். இந்த உலோகக் கையால் ஏறத்தாழ 10 கிலோ எடையுள்ள பொருட்களை பிடித்துத் தூக்க முடியும்.

இந்த 'வூஜி கை'யின் விலை தோராயமாக 4.84 லட்சம் ரூபாய் ஆகும். இது, ஆய்வுக்காகத் தனியாக வடிவமைக்கப்படும் விலையுயர்ந்த ரோபோ கைகளின் விலையைவிடக் குறைவுதான். தவிர, இது மற்ற நிறுவன ரோபோக்களை இயக்கும் மென்பொருளை எழுதும் டெவலப்பர்களுக்கான மென்பொருளுடன் வருகிறது. இதனால், பிற ரோபோக்களுக்கு, உடனடியாகப் பூட்டிப் பயன்படுத்த முடியும். அதோடு, இந்தக் கைகளுக்கு புதிய வித்தைகளையும் கற்றுத்தர முடியும்.

# ஜவ்வாது மலையில் தங்கக்காசு புதையல் கண்டெடுப்பு

**திருவண்ணாமலை, நவ.5:**

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை கோவிலூர் சிவன் கோவில் உள்ளது. 3-ம் ராஜராஜ சோழன் ஆட்சியில் கட்டப்பட்ட இந்த கோவிலில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில், கோவிலின் சிதிலமடைந்த கருவறையை கட்டுவதற்காக இன்று பள்ளம் தோண்டப்பட்டது.



சில அடி தூரம் பள்ளம் தோண்டப்பட்டபோது, அதில் புதையல் ஒன்று இருந்ததை தொழிலாளர்கள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, அந்த புதையலை மீட்டு பார்த்தபோது 100-க்கும் மேற்பட்ட தங்கக்காசுகள் அதில் இருந்ததுள்ளது. இதையடுத்து கோவில் கருவறையில் கண்டெடுக்கப்பட்ட தங்கக்காசு அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. தங்கக்காசுகளை ஆராய்ந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புயல் எச்சரிக்கை தடை முடிந்து கடலுக்கு சென்ற மீனவருக்கு அடித்த அதிர்ஷ்டம்

**காரைக்கால், நவ.5:**

புயல் எச்சரிக்கை காரணமாக கடலுக்கு செல்லாத நிலையில், 8 நாட்களுக்கு பிறகு காரைக்கால் மீனவர்கள் கடந்த 29-ந்தேதி கடலுக்கு சென்றனர். 4 நாட்கள் கடலில் தங்கி மீன் பிடித்த மீனவர்கள், இன்று கரைக்கு திரும்பினர். பல வகையான மீன்கள் கிடைத்திருந்தாலும், காரைக்காலை சேர்ந்த மீனவர் ஒருவருக்கு ஜாக்பாட் அடித்துள்ளது.

அதாவது, அவரது வலையில் 50க்கும் அதிகமான பெரிய கூரை கத்தாழை மீன்கள் சிக்கியது.



இவ்வகை மீன்கள் மீனவர்களின் வலையில் சிக்குவது அரிது. ஒன்றிரண்டு மீன்கள்தான் அவ்வப்போது சிக்கும். இந்த மீன்கள் மருத்துவத்துக்கு அதிகம் பயன்படுவதால், இதன் விலை அதிகமாகும். அதேபோல இந்த மீன்களின் தேவையும் அதிகம். கிலோ ரூ.1,000க்கும் மேல் விற்கப்படும்.

இன்று துறைமுகத்தில் இந்த மீன்கள் வைக்கப்பட்டபோது, அதனை வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் எடுத்தனர்.

வங்கக்கடலில் 200க்கும் மேற்பட்ட விசைப்படகில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது வேறு யாருக்கும் சிக்காமல் காரைக்கால் மீனவருக்கு அதிர்ஷ்டம் அடித்தது போல் 50க்கும் மேற்பட்ட பெரிய மீன்கள் சிக்கியது. இந்த மீன்களை பொதுமக்களும், வியாபாரிகளும் வியந்து பார்த்து சென்றனர்.

# உரங்களுடன் இணை பொருட்களை சேர்த்து விற்பனை செய்தால் உரிமம் ரத்து: சிவகங்கை ஆட்சியர்

**சிவகங்கை, நவ.5:**

யூரியா உரத்துடன் இணை பொருட்களை சேர்த்து விற்பனை செய்தால் உரிமம் ரத்து செய்யப்படும் -என சிவகங்கை கலெக்டர் கா.பொற்கொடி எச்சரித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் தற்போது பெய்த பருவ மழையின் காரணமாக அனைத்து வட்டாரங்களிலும் விவசாய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பயிர்கள் உரமிடும் நிலையை எட்டியுள்ளது. விவசாய பணிகளுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தின் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளிலும் இருப்பு வைத்து, விநியோகம் செய்திட உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் தேவையான உரங்களை வாங்கி பயன்பெறும் வகையில் யூரியா 1754 மெட்ரிக் டன்களும், டிஏபி 1443 மெட்ரிக் டன்களும், பொட்டாஸ் 578 மெட்ரிக் டன்களும், காம்ளக்ஸ் 2329 மெட்ரிக் டன்களும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கூடுதல் விலைக்கு விற்க கூடாது

மேலும், உரங்கள் விநியோகம் செய்யும் உர உற்பத்தி நிறுவனங்கள் இணை பொருட்களை வாங்கினால் மட்டுமே விற்பனையாளர்களுக்கு யூரியா உரம் வழங்குவதாகவும், இவ்வாறாக பெறப்பட்ட யூரியா உரத்தினை சில்லரை உர விற்பனையாளர்கள், விவசாயிகளிடம் இணை பொருட்களை வாங்கினால் மட்டுமே யூரியா உரம் வழங்கப்படும் என கட்டாய படுத்துவது மட்டுமன்றி கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்வதாகவும் புகார்கள் வரப்பெறுகின்றன. இப்புகார்களானது, இது அத்தியாவசிய பொருள் சட்டத்தினை மீறிய செயலாகும். என கலெக்டர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## க்ரைம் கார்னர்

### சப்-இன்ஸ்பெக்டர் குடும்பத்திற்கு மிரட்டல் விடுத்த பெண் போலீஸ்

**கோவில்பட்டி, நவ.5:**

தூத்துக்குடியை சேர்ந்த 35 வயது நபர் போக்குவரத்து சப்-இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில், அந்தரங்க வீடியோவை வெளியிட்டு விடுவோம் என கூறி அவருடைய குடும்பத்திற்கு, பெண் போலீஸ் ஒருவர் மிரட்டல் விடுத்த அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது. இதுபற்றி சப்-இன்ஸ்பெக்டரின் மனைவி போலீசில் புகார் அளித்துள்ளார்.

அதில், எனது கணவர் பணிபுரியும் போக்குவரத்து போலீஸ் பிரிவில் பெண் போலீஸ்காரர் ஒருவர் கடந்த பிப்ரவரி மாதம் கயத்தாறில் இருந்து மாற்றுப்பணியாக சேர்ந்தார். அவருக்கு ஏற்கனவே திருமணமாகி கணவர், குழந்தைகள் உள்ளனர். அந்த பெண் போலீசும், ஒரு நிருபரும் சேர்ந்து எனது கணவரை மிரட்டி பணம் பறிக்க திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி என் கணவருடன், பெண் போலீஸ் நெருங்கி பழகியுள்ளார். அவருடன் அந்தரங்கமாக பேசிய வாட்ஸ்-அப் வீடியோ, ஆடியோ, அழைப்புகளை செல்போனில் சேமித்து வைத்து பணம் கேட்டு மிரட்டினார். இந்த விவகாரத்தில், எனது கணவரும், பெண் போலீசும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

கடந்த செப்டம்பர் 6-ந்தேதி பெண் போலீஸ், எனது கணவர் சம்பந்தப்பட்ட சில ஆடியோக்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டார். செப்டம்பர் 17-ந்தேதி சமாதான பேச்சுவார்த்தைக்கு வருமாறு என்னையும், உறவினர்களையும் வரவழைத்தார். தன்னிடம் 40-க்கும் மேற்பட்ட ஆடியோ, 20-க்கும் மேற்பட்ட வீடியோ இருப்பதாகவும், அவற்றை சமூக வலைதளங்களில் வெளியிடாமல் இருக்க ரூ.10 லட்சம் பணம் தரவேண்டும் எனவும் மிரட்டினார்.

எனவே பெண் போலீஸ், நிருபர் உள்ளிட்ட 12 பேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த புகாரில் கூறப்பட்டிருந்தது. இதுகுறித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான் உத்தரவின்பேரில் பெண் போலீஸ் மற்றும் நிருபர் உள்பட 5 பேர் மீது கோவில்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### காபி தூள் பாக்கெட்டில் கடத்தப்பட்ட ரூ.47 கோடி மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல்




**மும்பை, நவ.5:**

கொழும்புவில் இருந்து மும்பை வரும் விமானத்தில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில், மும்பை சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய அதிகாரிகள் கொழும்புவில் இருந்து வந்திறங்கிய பயணிகளிடம் தீவிர சோதனை நடத்தினர்.

இந்த சோதனையின்போது ஒரு பெண் பயணியின் உடைமைகளில் இருந்து 4.7 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. அந்த போதைப்பொருள் காபி தூள் பாக்கெட்டில் மறைத்து வைக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளது. அதன் சந்தை மதிப்பு சுமார் ரூ.4.7 கோடி என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து போதைப்பொருளை கடத்தி வந்த பெண், அவரிடம் இருந்து போதைப்பொருளை வாங்க விமான நிலையத்திற்கு வந்த நபர் மற்றும், இவர்களுக்கு உதவி செய்த 3 பேர் என மொத்தம் 5 பேரை வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பத்திரப்பதிவு எழுத்தர் வீட்டில் 100 சவரன் நகை கொள்ளை - வீட்டிலேயே அமர்ந்து மது அருந்திய கொள்ளையர்கள்

**திருவள்ளூர், நவ.5:**

கொள்ளையர்கள் பணம், நகையை கொள்ளையடித்த பிறகு, வீட்டிலேயே அமர்ந்து மது அருந்திவிட்டுச் சென்றது தெரியவந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு அருகே கர்லப்பாக்கம் கிராமத்தில் வசித்து வரும் பழனி என்பவர் பத்திரப்பதிவு எழுத்தராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், பழனி தனது குடும்பத்தினருடன் வெளியூர் சென்றிருந்தார். அவர் திரும்பி வந்து பார்த்தபோது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

வீட்டில் இருந்த 100 சவரன் நகைகள், 2 கிலோ வெள்ளிப் பொருட்கள், பட்டுப்புடவைகள், 1 லட்சம் ரூபாய் பணம் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டு இருந்தன. இது குறித்து தகவலறிந்து போலீசார் பழனியின் வீட்டிற்கு வந்து சோதனை நடத்தினர். அப்போது வீட்டில் மதுபாட்டில்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கொள்ளையர்கள் பணம், நகையை கொள்ளையடித்த பிறகு, வீட்டிலேயே அமர்ந்து மது அருந்திவிட்டுச் சென்றது தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், கொள்ளையர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# பணமோசடி வழக்கு; அனில் அம்பானியின் ரூ.3 ஆயிரம் கோடி சொத்துக்கள் முடக்கம்

புதுடெல்லி, நவ.5:

அனில் அம்பானியின் உதவியாளர் அசோக் குமாரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர்.




இந்தியாவில் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான முகேஷ் அம்பானியின் சகோதரர் அனில் அம்பானி. இவருக்கு சொந்தமான, 'ராகாஸ்' நிறுவனங்களுக்கு, 'யெஸ்' வங்கி 3,000 கோடி ரூபாய் கடன் வழங்கியது. ஒரு நிறுவனத்தின் பெயரில் பெற்ற கடன், சட்டவிரோதமாக மற்ற நிறுவனங்களுக்கு மாற்றம் செய்துள்ளதாக அனில் அம்பானி மீது குற்றச்சாட்டு எழுந்தது. விசாரணையில், அனில் அம்பானி ரூ.17 ஆயிரம் கோடி பண மோசடி செய்து விட்டதாக இரண்டு வழக்குகளை சி.பி.ஐ., பதிவு செய்தது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற தடுப்பு சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையும் வழக்குப் பதிவு செய்துள்ளது. இவரது வீடு, அலுவலகம் உட்பட 35க்கும் மேற்பட்ட இடங்களில், அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. அவருக்கு அமலாக்கத்துறை நேரில் ஆஜர் ஆகுமாறு சம்மன் அனுப்பி இருந்தது. அவர் அமலாக்கத்துறை அலுவலகத்தில் நேரில் ஆஜர் ஆகி விளக்கம் அளித்தார். அதேவேளை, அனில் அம்பானியின் உதவியாளரும், ரிலையன்ஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குநருமான அசோக் குமாரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கடந்த சில நாட்களுக்குமுன் கைது செய்தனர்.

இந்நிலையில், பணமோசடி வழக்கில் அனில் அம்பானியின் 3 ஆயிர்ம கோடி சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது. முடக்கப்பட்ட சொத்துக்களில் மும்பையில் உள்ள 66 ஆண்டுகல் பழமையான அம்பானியின் வீடு , அவரது குழும நிறுவனங்களுக்கு சொந்தமான பிற குடியிருப்பு கட்டிடங்கள், வணிக வளாகங்களும் அடக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பள்ளி மாடியில் இருந்து குதித்து 6ம் வகுப்பு மாணவி தற்கொலை - அதிர்ச்சி சம்பவம்



ஜெய்ப்பூர், நவ.5:

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பிரபல தனியார் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் அமிரா (வயது 9) என்ற சிறுமி 6ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்நிலையில், மாணவி அமிரா கடந்த வெள்ளிக்கிழமை மாலை பள்ளி மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், பள்ளிக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆசிரியர்கள் தொடர்ந்து துன்புறுத்தியதால் சிறுமி தற்கொலை செய்துகொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. சிறுமி பள்ளியின் 4வது மாடிக்கு சென்று அங்கிருந்து கீழே குதித்த வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. அதேவேளை, சிறுமி தற்கொலை செய்துகொண்டது குறித்த தகவலை பள்ளி நிர்வாகம் மறைத்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பிறந்த குழந்தைகளுக்கு உடனடியாக ஆதார் அட்டை

ஜாம்ஷெட்பூர், நவ.5:

இந்திய குடிமக்களின் அடையாள ஆவணமாக ஆதார் அட்டை இருந்து வருகிறது. எனவே புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு உடனடியாக ஆதார் அட்டை வழங்குவதை பல அரசு ஆஸ்பத்திரிகள் செயல்படுத்தி வருகின்றன. இதை பல ரெயில்வே ஆஸ்பத்திரிகளும் செய்து வருகின்றன. அந்தவகையில் தென்கிழக்கு ரெயில்வே மண்டலத்தில் முதல் முறையாக ஜார்கண்ட் சக்ரதார்பூர் ரெயில்வே ஆஸ்பத்திரியில் பிறந்த குழந்தைகளுக்கு ஆதார் வழங்கும் நடைமுறை தொடங்கப்பட்டு உள்ளது.

மேற்கு சிங்பும் மாவட்டத்தில் உள்ள இந்த ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் பிறந்த 4 குழந்தைகளுக்கு உடனடியாக ஆதார் அட்டையும், பிறப்பு சான்றிதழும் வழங்கப்பட்டது. சக்ரதார்பூர் மண்டல ரெயில்வே மேலாளர் மற்றும் ஊழியர் நிர்வாக அமைப்பு, மாவட்ட நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சியால் இந்த நடைமுறை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு உள்ளதாக தென்கிழக்கு ரெயில்வே மண்டலம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## விண்வெளித்துறை நம்மை பெருமைப்படுத்துகிறது - பிரதமர்

புதுடெல்லி, நவ.5:

இஸ்ரோவால் 4,410 கிலோ எடையிலான சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் இன்று மாலை விண்ணில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பாராட்டு குவிகிறது.



சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள்வெற்றிகரமாக புவி சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்ட பிறகு இஸ்ரோ தலைவர் நாராயணன் பேசும்போது, எல்விஎம் -3 ராக்கெட் மூலம் சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள்வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. சிஎம்எஸ்-03 அதிக எடையுடையசெயற்கைக்கோள். இதன் பயன்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இன்று அனைத்தும் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடைபெற்றது என்றார்.

இந்த நிலையில், இது குறித்து, பிரதமர் மோடி தமது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

அதிகபட்ச எடையுள்ள சிஎம்எஸ்-03செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது. நமது வின்வெளித் துறை நம்மை தொடர்ந்து பெருமிதம் கொள்ளச்செய்கிறது.

இந்தியாவின் அதிக எடை(4,410 கிலோ) கொண்ட தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் 'சிஎம்எஸ்-03' வெற்றிகரமாக நிலைநிறுத்தியமைக்காக இஸ்ரோவுக்கு பாராட்டுகள்.

நமது விண்வெளித்துறை சிறப்புக்கும் புதுமைக்கும் அடையாளமாக மாறியுள்ளது பாராட்டுக்குரியது.

இஸ்ரோவின் வெற்றிகள் தேசம் மட்டுமன்றி மக்களின் முன்னேற்றத்தையும் மேம்படுத்தி உள்ளன என அதில் பதிவிட்டுள்ளார்.

## ஆபரேஷன் சிந்தூருக்கு மீண்டும் தயார்; ராணுவ தளபதி உபேந்திர திவேதி எச்சரிக்கை

புதுடெல்லி, நவ.5:

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த மே மாதம் பாகிஸ்தான் மீது ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மிரில் உள்ள பயங்கரவாத முகாம்களை பாதுகாப்புப்படையினர் அழித்தனர். இந்த நிலையில் ஆபரேஷன் சிந்தூர் 2.0 நடவடிக்கைக்கு தயார் என்று ராணுவ தளபதி உபேந்திர திவேதி பாகிஸ்தானை எச்சரித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் பேசியதாவது:-

பாகிஸ்தான் ஏதேனும் கோழைத்தனமான செயலுக்கு முயன்றால் வலுவான பதிலடியை எதிர்கொள்ள நேரிடும். ஆயுதப்படைகள் சிந்தூர் 2.0 நடவடிக்கைக்கு முழுமையாக தயாராக இருக்கிறது. பயங்கரவாதிகள் வாழ்ந்த இடங்களை மட்டுமே குறிவைத்தோம். பொதுமக்கள் பகுதிகள் அல்லது ராணுவ நிலைகளை தாக்கவில்லை. நாங்கள் விரும்பியதை அடைந்தோம், நாங்கள் அவர்களைப் போன்றவர்கள் அல்லஎன்பதை பாகிஸ்தானுக்குப் புரிய வைத்தோம். நாங்கள் தர்மயுத்தத்தை பின்பற்றுபவர்கள்.

இவ்வாறு ராணுவ தளபதி உபேந்திர நிவேதி கூறினார்.

## யு.பி.ஐ. பரிவர்த்தனையில் புதிய சாதனை: ஒரே மாதத்தில் ரூ.27.28 லட்சம் கோடி பண பரிமாற்றம்

புதுடெல்லி, நவ.5:

யு.பி.ஐ. பயன்பாடு மக்களிடயே அதிகரித்து வருகிறது. சிறிய பெட்டிக்கடை முதல் ஷாப்பிங் மால் என அனைத்து இடங்களிலும் யுபிஐ மூலமாக தற்போது பணபரிமாற்றம் நடைபெறுகிறது. ஒரு 'கிளிக்' மூலமாகவே பணம் அனுப்பவும் பெறவும் உதவுவதால், இது இந்தியாவில் மிகவும் பிரபலமான பண பரிவர்த்தனை சேவையாக வளர்ந்துள்ளது.




இந்தநிலையில் கடந்த அக்டோபர் மாதத்தில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யு.பி.ஐ. பரிவர்த்தனைகள் குறித்து தேசிய பணப்பரிவர்த்தனை கழகம் தகவல் தெரிவித்துள்ளது. அதன்படி கடந்த மாதத்தில் யு.பி.ஐ. மூலமாக மொத்தம் 2 ஆயிரத்து 70 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய செப்டம்பர் கணக்கை காட்டிலும் 3.6 சதவீதம் அதிகமாகும்.

இந்த பரிவர்த்தனைகள் மூலமாக ரூ.27.28 லட்சம் கோடி பண பரிமாற்றம் நடந்தது. இது இதுவரை இல்லாத சாதனை ஆகும். இது அதற்கு முந்தைய மாதத்தை காட்டிலும் 9.5 சதவீதம் அதிகமாகும்.

தினமும் சராசரியாக 66.8 கோடி பரிவர்த்தனைகள் யு.பி.ஐ. மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜி.எஸ்.டி. வரியில் சீர்திருத்தம் மற்றும் பண்டிகை கால எதிரொலி காரணமாக இந்த நிலை ஏற்பட்டதாக விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### மகளிர் உலகக்கோப்பை: மத்தியப் பிரதேச வீராங்கனைக்கு ரூ.1 கோடி பரிசு அறிவிப்பு

போபால், நவ.5:

13-வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம், மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.எஸ். பட்டீல் ஸ்டேடியத்தில் நேற்று நடந்தது. இதில் தங்களது முதல் மகுடத்துக்காக இந்தியா- தென் ஆப்பிரிக்கா அணிகள் மல்லுக்கட்டின.

மழை காரணமாக ஆட்டத்தை தொடங்க 2 மணி நேரம் தாமதம் ஆனது. ஆனாலும் ஓவர் ஏதும் குறைக்கப்படவில்லை. இரு அணியிலும் அரையிறுதியில் ஆடிய வீராங்கனைகள் மாற்றமின்றி அப்படியே இடம் பெற்றனர். இதில் டாஸ் ஜெயித்த தென் ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வார்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 298 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷபாலி வர்மா 87 ரன்களும், தீப்தி ஷர்மா 58 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் அயாபோங்கா காகா 3 விக்கெட் கைப்பற்றினார்.

பின்னர் இறுதிப்போட்டியில் இதுவரை யாரும் விரட்டிப்பிடிக்காத ஒரு இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 45.3 ஓவர்களில் 246 ரன்களில் சுருட்டினர். இதன் மூலம் இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல்முறையாக உலகக் கோப்பையை தட்டித்தூக்கியது.

தென் ஆப்பிரிக்கா தரப்பில் வோல்வார்ட் 101 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் சுழற்பந்து வீச்சாளர்கள் தீப்தி ஷர்மா 5 விக்கெட்டுகளும், ஷபாலி வர்மா 2 விக்கெட்டுகளும் அள்ளினர்.

வெற்றியை நாடு முழுவதும் ரசிகர்கள் பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். ஒட்டுமொத்த தேசத்தையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்திய இந்திய பெண்கள் அணிக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள், கிரிக்கெட் பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

இந்நிலையில் இந்த உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த மத்திய பிரதேச வீராங்கனையான கிராந்தி கவுடுக்கு 1 கோடி ரூபாய் வெகுமதி பரிசாக வழங்கப்படும் என அம்மாநில முதல் மந்திரி மோகன் யாதவ் அறிவித்துள்ளார். அத்துடன் இந்திய அணிக்கும் அவர் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

22 வயதான கிராந்தி கவுடு இந்த மகளிர் உலகக்கோப்பையில் 8 போட்டிகளில் 5.73 என்ற எகானமி ரேட்டில் பந்துவீசி 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

### இந்திய கிரிக்கெட்: தோனி, கபில் தேவ் வரிசையில் இணைந்த ஹர்மன்பிரீத் கவுர்



13-வது ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை தொடரில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது.

13-வது மகளிர் ஒருநாள் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம், மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.எஸ். பட்டீல் ஸ்டேடியத்தில் நேற்று நடந்தது. இதில் ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி தென் ஆப்பிரிக்காவை எதிர்கொண்டது.

மழை காரணமாக ஆட்டத்தை தொடங்க 2 மணி நேரம் தாமதம் ஆனது. ஆனாலும் ஓவர் ஏதும் குறைக்கப்படவில்லை. இரு அணியிலும் அரையிறுதியில் ஆடிய வீராங்கனைகள் மாற்றமின்றி அப்படியே இடம் பெற்றனர். இதில் டாஸ் ஜெயித்த தென் ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வார்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 298 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷபாலி வர்மா 87 ரன்களும், தீப்தி ஷர்மா 58 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் அயாபோங்கா காகா 3 விக்கெட் கைப்பற்றினார்.

பின்னர் இறுதிப்போட்டியில் இதுவரை யாரும் விரட்டிப்பிடிக்காத ஒரு இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 45.3 ஓவர்களில் 246 ரன்களில் சுருட்டினர். இதன் மூலம் இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல்முறையாக உலகக் கோப்பையை தட்டித்தூக்கியது.

தென் ஆப்பிரிக்கா தரப்பில் வோல்வார்ட் 101 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் சுழற்பந்து வீச்சாளர்கள் தீப்தி ஷர்மா 5 விக்கெட்டுகளும், ஷபாலி வர்மா 2 விக்கெட்டுகளும் அள்ளினர்.

இதன் மூலம் இந்திய கிரிக்கெட் வரலாற்றில் ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கோப்பையை (ஆண்கள் மற்றும் மகளிர் இரண்டையும் சேர்த்து) வென்ற 3-வது கேப்டன் என்ற பெருமையை ஹர்மன்பிரீத் கவுர் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் இந்திய ஆண்கள் அணியின் முன்னாள் கேப்டன்களான கபில் தேவ் மற்றும் மகேந்திரசிங் தோனி ஆகியோர் ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கோப்பையை வென்றுள்ளனர். தற்போது அந்த வரிசையில் ஹர்மன்பிரீத் கவுர் இணைந்துள்ளார்.

# சீனா, தைவான் மீது தாக்குதல் நடத்தாது; அதிபர் ஜின்பிங்கிற்கு டிரம்ப் சான்றிதழ்



வாஷிங்டன், நவ.5:

தைவான் மீது சீனா தாக்குதல் நடத்தாது. தாக்கினாலோ, ஆக்கிரமித்தாலோ சீனாவுக்கு விளைவுகள் தெரியும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டமைப்பின் இரண்டு நாள் உச்சி மாநாடு, கிழக்காசிய நாடான தென் கொரியாவில் உள்ள கியோங்ஜு நகரில் நடந்தது. இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக தென் கொரியா சென்ற அமெரிக்க அதிபர் டிரம்ப், சீன அதிபர் ஷீ ஜின்பிங்கை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேசியிருந்தார்.

அமெரிக்காவுக்கு அரிய வகை கனிமங்கள் ஏற்றுமதிக்கான தடைக்கு ஓராண்டு விலக்கு, அமெரிக்க வேளாண் பொருட்கள் கொள்முதல் உள்ளிட்டவை குறித்து சீனா சம்மதம் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு பிரதிபலனாக சீன பொருட்கள் மீது அமெரிக்கா விதித்த ஒட்டுமொத்த வரியில், 10 சதவீதத்தை குறைத்தார் டிரம்ப்.

இந்நிலையில், தைவானை சீனா தாக்கினால், அமெரிக்க படைகள் தைவானை பாதுகாக்க உத்தரவிடுவீர்களா என்ற கேள்விக்கு அதிபர் டிரம்பிடம் எழுப்பப்பட்டது. இதற்கு அதிபர் டிரம்ப் அளித்த பதில்: நான் குடியரசுக் கட்சி தலைவர் பதவியில் இருக்கும் வரை, தைவானை இணைக்கும் அதன் நீண்ட கால இலக்கை நோக்கி சீனா எந்த நடவடிக்கையும் எடுக்காது.

தென்கொரியாவில் சீன அதிபர் ஜி ஜின்பிங் உடனான பேச்சுவார்த்தையில் நீண்டகாலமாக சர்ச்சைக்குரிய தைவான் பிரச்னை குறித்து விவாதிக்கப்படவில்லை. இந்த பேச்சு பெரும்பாலும் அமெரிக்க- சீன வர்த்தக பதட்டங்களை மையமாக கொண்டது.

தைவான் மீது சீனா நடவடிக்கை எடுக்காது. தைவானை தாக்கினாலோ, ஆக்கிரமித்தாலோ சீனாவுக்கு விளைவுகள் தெரியும். சீன அதிபர் ஜி ஜின்பிங் நிலைமையை நன்றாக புரிந்து கொள்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

சீனா, கிழக்கு ஆசிய நாடான தைவானை தன் நாட்டின் ஒரு பகுதியாக சொந்தம் கொண்டாடி வருகிறது. தைவானை ஒட்டிய கடல் பகுதியில் சீனா தொடர்ந்து ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதில் இருந்து பாதுகாத்துக்கொள்ள அமெரிக்காவின் உதவியை தைவான் நாடி இருந்தது.

இதன் தொடர்ச்சியாக, அமெரிக்காவிடம் இருந்து அந்நாட்டு ராணுவத்துக்கு தேவையான ஆயுத உதவிகளை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது. அதேநேரத்தில் அதிபர் டிரம்ப் பதவியேற்ற பிறகு ஆயுத உதவிகளை அமெரிக்கா குறைத்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலஸ்தீனர்கள் 45 பேரின் உடல்களை ஒப்படைத்தது இஸ்ரேல்!



ஜெருசலேம், நவ.5:

ஹமாஸ் பயங்கரவாதிகள், தங்களிடம் இருந்த 3 பிணைக்கைதிகளின் உடலை ஒப்படைத்தனர். பதிலுக்கு பாலஸ்தீனர்கள் 45 பேரின் உடல்களை இஸ்ரேல் ராணுவம் ஒப்படைத்தது.

மேற்காசிய நாடான இஸ்ரேல் - பாலஸ்தீனத்தின் காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக போர் நடந்து வந்தது. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தலையீட்டின்படி போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, சண்டை தற்காலிகமாக ஓய்ந்துள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி, ஹமாஸ் வசம் இருந்த பிணைக்கைதிகள் இஸ்ரேலிடம் ஒப்படைக்கப்பட்டனர். பதிலுக்கு இஸ்ரேலும் தங்கள் பிடியில் உள்ள பாலஸ்தீனர்களை விடுவித்து வருகிறது. கொல்லப்பட்ட 28 பிணைக்கைதிகளில், 17 பேரின் உடல்களை ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேலிடம் ஒப்படைத்தனர். இன்னும், 8 உடல்கள் ஒப்படைக்கப்படவில்லை.

தற்போது, 3 இஸ்ரேல் ராணுவ வீரர்களின் உடல்களை ஹமாஸ் ஒப்படைத்தது. இதனைத் தொடர்ந்து 45 பாலஸ்தீனர்களின் உடல்களை இஸ்ரேல் ஒப்படைத்துள்ளது. இந்த உடல்கள் நாசர் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

சில நாட்களுக்கு ஒருமுறை, ஒன்று அல்லது இரண்டு உடல்களை ஹமாஸ் அனுப்பி வைக்கிறது. ஆனால், விரைந்து உடல்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று இஸ்ரேல் வலியுறுத்துகிறது. தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட உடல்களை டி.என்.ஏ., சோதனை செய்து பார்த்த பிறகு, ‘அவை பிணைக்கைதிகள் உடல்கள் இல்லை’ என்றும் இஸ்ரேல் குற்றம் சாட்டியிருந்தது.

காசா முழுவதும் பேரழிவு ஏற்பட்டுள்ளதால், உடல்களை கண்டுபிடித்து ஒப்படைக்கும் பணி சிக்கலாக உள்ளது என ஹமாஸ் அமைப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பாக்., சீனா போன்று நாங்களும் அணு ஆயுத சோதனை நடத்தப் போகிறோம்; டிரம்ப் தடாலடி



வாஷிங்டன, நவ.5:

பாகிஸ்தானும், சீனாவும் அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. நாங்களும் அதை நடத்த போகிறோம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள பிரபல செய்தி தொலைக்காட்சி ஒன்றுக்கு டிரம்ப் பேட்டி அளித்தார். 33 ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்க அணு ஆயுத சோதனையை துவங்குகிறது. அதற்கு என்ன காரணம் என்பதையும் பேட்டியின் போது அவர் வெளியிட்டு உள்ளார்.

பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது;

பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, வடகொரியா ஆகிய நாடுகள் அணு ஆயுத சோதனையை நடத்துகின்றன. ஆனால் அவர்கள் இதை பேச மாட்டார்கள். நாங்கள் வேறுபட்டவர்கள் என்பதால் இதை (அணு ஆயுத சோதனையை குறிப்பிடுகிறார்) பேசுகிறோம்.

மக்களுக்கு என்ன நிகழ்கிறது என்பது தெரியாதவாறு, அவர்கள் பூமிக்கடியில் அணு ஆயுத சோதனையை மேற்கொள்கின்றனர். நீங்கள் சிறிதளவு மட்டுமே அதிர்வுகளை உணர்கிறீர்கள். உலகளாவிய கண்காணிப்புகள் இருந்தாலும், இத்தகைய அணு ஆயுத சோதனைகளை மறைமுகமாக நடத்த முடியும். நாங்களும் இந்த சோதனையை (அணு ஆயுதம்) நடத்த இருக்கிறோம். ஏன் என்றால் அவர்கள் (பாக். சீனா, வடகொரியா, ரஷ்ய நாடுகளை குறிப்பிடுகிறார்) நடத்துகின்றனர்.

அவர்கள் சோதனை செய்வதாலும், மற்றவர்கள் சோதனை செய்வதாலும் நாங்களும் சோதனை செய்ய இருக்கிறோம். நிச்சயமாக சொல்கிறேன், வடகொரியாவும் சோதனை செய்து வருகிறது, பாகிஸ்தானும் சோதனை செய்து வருகிறது.

இந்த நாடுகள் எங்கு சோதனை நடத்துகின்றன என்பது அமெரிக்காவுக்கு தெரியாது. ஆனால் சோதனையை அவர்கள் நடத்துகிறார்கள்.

சோதனை செய்யாத ஒரேநாடு அமெரிக்கா தான். சோதனை செய்யாத ஒரே நாடாக நாங்கள் இருக்க விரும்பவில்லை.

மற்ற நாடுகளின் சோதனை காரணமாக, நாங்களும் சோதனை நடத்த வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைக்கு நான் அறிவுறுத்தி உள்ளேன். அந்த செயல்முறை உடனடியாக தொடங்கும்.

இவ்வாறு தமது பேட்டியில் டிரம்ப் கூறி இருந்தார்.

# பாகிஸ்தானின் பஞ்சாபில் 18 பயங்கரவாதிகள் கைது

லாகூர், நவ.5:

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில், தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தெஹ்ரிக் - -இ- -தலிபானை சேர்ந்தவர்கள் உட்பட, 18 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாதிகள் தங்கள் நாட்டில் சதி செயல்களில் ஈடுபடுவதாக, நம் அண்டை நாடான பாகிஸ்தான் குற்றம் சாட்டி வருகிறது. பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை என்று கூறி, ஆப்கன் மீது வான்வழி தாக்குதலும் நடத்தியது. இதை மறுத்து ஆப்கானிஸ்தான் பதில் தாக்குதல் நடத்தியது. இதனால் இருநாடுகள் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்தநிலையில் பஞ்சாப் மாகாணத்தில், பல்வேறு மாவட்டங்களில் பயங்கரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக உளவுத்துறை எச்சரித்தது. அதன்பேரில், பஞ்சாப் போலீசின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு அதிரடி நடவடிக்கையில் இறங்கியது. அதில், 18 பயங்கரவாதிகள் சிக்கினர். அதில் பெரும்பாலானோர், தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான தெஹ்ரிக்- இ- தலிபான் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பஞ்சாபில் முக்கிய கட்டடங்கள் மற்றும் நிறுவனங்களை குறிவைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

பிடிபட்ட பயங்கரவாதிகளிடம் இருந்து 3 கிலோ வெடி பொருள், ‘டெட்டனேட்டர்’கள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பிரசுரங்களும், ‘மொபைல் போன்’கள், பணம் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன.

# ஆயுதங்களை குறைக்க வேண்டும்; லெபனானை எச்சரிக்கும் இஸ்ரேல்

ஜெருசலேம்: இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஒரு வருடங்களுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் கோபம் அடைந்த இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் நடத்தியது. கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் இருநாடுகளுக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இருப்பினும், லெபனானின் தெற்கில் 5 இடங்களில் இஸ்ரேல் தனது படைகளை நிறுத்தியுள்ளது. அங்கிருந்து ஹிஸ்புல்லா அமைப்பினரின் நிலைகளை குறிவைத்து தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. அண்மையில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டதாக லெபனானின் சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த நிலையில், இஸ்ரேல் படைகள் குவிக்கப்பட்டிருக்கும் லெபனானின் தெற்கு பகுதியில் இருந்து ஆயுதங்களை ஹிஸ்புல்லா அமைப்பினர் குறைக்க வேண்டும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் கூறியதாவது; ஹிஸ்புல்லா அமைப்பினர் நெருப்புடன் விளையாடுகின்றனர். லெபனானின் தெற்கில் ஆயுதங்களை குறைக்க வேண்டும். இதனை மீறினால் அதிகபட்ச நடவடிக்கை எடுக்கப்படும். வடக்கில் வாழும் மக்களுக்கான அச்சுறுத்தலை நாங்கள் அனுமதிக்க மாட்டோம், என்று லெபனானை எச்சரித்துள்ளார்.

# அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்: ரஷ்யாவின் அடுத்த அறிமுகம்



மாஸ்கோ, நவ.5:

ரஷ்யா, ‘கபரோவ்ஸ்க்’ என்றபெயரில்புதியஅணுசக்தி நீர்மூழ்கி கப்பலை நேற்று அறிமுகம் செய்தது. இது, ‘பொஸைடான்’ எனப்படும் அணு ஆயுத ட்ரோன்- ஏந்திச் செல்லும் திறன் கொண்டது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுடன் போரில் ஈடுபட்டுள்ள ரஷ்யா கடந்த சில நாட்களாக, தன்னிடம் உள்ள சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களை சோதனை செய்து வருகிறது.

கடந்த, அக்., 21ல், ‘புரோவெஸ்ட்னிக்’ எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஆயுத ஏவுகணையை சோதனை செய்தது. இது அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும், அணு சக்தியில் இயங்கக் கூடியது.

இதையடுத்து, கடலில் செல்லும், ‘பொஸைடான்’ எனப்படும் அணு ஆயுத ட்ரோனை அக்., 29ல் சோதித்தது.

இது, கடல் அலைகளை மிக உயரமான அளவுக்கு துாண்டி எதிரி நாட்டின் கடலோரப் பகுதிகளை அழிக்கும் திறன் வாய்ந்தது. இவற்றின் தொடர்ச்சியாக, புதிய அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை ரஷ்யா அறிமுகம் செய்தது.

இதற்கு ‘கபரோவ்ஸ்க்’ என்று பெயரிட்டுள்ளனர். இது ஒரு ரஷ்ய நகரின் பெயர்.

இந்த நீர்மூழ்கி கப்பல் குறித்து ரஷ்ய ராணுவ அமைச்சர் ஆண்ட்ரேய் பெலோசோவ் கூறுகையில், “கபரோவ்ஸ்க் நீர்மூழ்கி கப்பல் பொஸைடான் போன்ற அணுசக்தி முறையில் இயங்கும் ஆயுதங்களை ஏந்தி செல்லும் திறன் பெற்றது.

“ரஷ்யாவின் கடல் எல்லைகளை பாதுகாப்பது, சர்வதேச கடல் எல்லைகளில் ரஷ்யாவின் நலன்களை உறுதிபடுத்துவது ஆகிய நோக்கங்களுக்காக, ‘கபரோவ்ஸ்க்’ நீர்மூழ்கி கப்பல் அறிமுகப்படுத்தப்படுகிறது,” என்றார்.

இந்த புதிய நீர்மூழ்கி கப்பல் ரஷ்யாவின், ‘சீவ்மாஷ்’ கப்பல் கட்டும் தொழிற்சாலையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு தான் இந்தியாவின் ஐ.என்.எஸ்., விக்ரமாதித்யா விமானம் தாங்கி போர் கப்பல் மறுசீரமைக்கப்பட்டது.

# பாகிஸ்தான் ஜவுளி ஏற்றுமதி உச்சம் ரூ.14,200 கோடிக்கு வர்த்தகம்



கராச்சி, நவ.5:

பாகிஸ்தான் ஜவுளி ஏற்றுமதி, மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு, 14,200 ரூபாயை எட்டி உச்சம் தொட்டுள்ளது.

நம் அண்டை நாடான பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஜவுளித்துறை, 8.5 சதவீதம் பங்களிக்கிறது. ஜவுளித் துறை என்பது அந்நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியமானது.

அமெரிக்கா, ஜெர்மனி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கு பாகிஸ்தானில் இருந்து அதிகளவு ஜவுளிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தநிலையில், கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பாகிஸ்தான் ஜவுளி ஏற்றுமதியில், 14,200 ரூபாயை எட்டி உச்சம் தொட்டுள்ளது.

அதிலும் பின்னலாடை ஏற்றுமதி மட்டும் இதுவரை இல்லாத அளவுக்கு, 4,300 கோடி ரூபாயை எட்டியதாக பாகிஸ்தான் ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது. கடந்த மாதத்தில், நாட்டின் மொத்த பொருட்கள் ஏற்றுமதியில் ஜவுளித் துறை மட்டும் 60 சதவீதத்தைக் கொண்டிருந்ததாகவும் அந்த வங்கி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அண்டை நாடுகள் மீதான அமெரிக்காவின் வரிவிதிப்பு எதிரொலி, மதிப்பு கூட்டப்பட்ட வகைகளுக்கான வலுவான தேவை, வலுவான வர்த்தக தொடர்பு போன்ற காரணங்களால் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக பாக்., ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

# 2026ல் சீனாவில் நடக்கிறது ‘ஏபெக்’ உச்சி மாநாடு

பீஜிங்: நடப்பாண்டுக்கான, 32வது ‘ஏபெக்’ எனப்படும், ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டமைப்பின் தலைமை பொறுப்பை கிழக்காசிய நாடான தென்கொரியா ஏற்று ஆண்டு உச்சி மாநாட்டை நடத்தியது. இதைத் தொடர்ந்து வரும், 2026ம் ஆண்டுக்கான தலைமை பொறுப்பை சீனா ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்தாண்டு நடைபெற உள்ள உச்சி மாநாடு சீனாவின் தென்பகுதியில் உள்ள ஷென்சென் நகரில் நடத் தப்படும் என அந்நாட்டு அதிபர் ஷீ ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டமைப்பு மாநாட்டை சீனா நடத்துவது இது மூன்றாவது முறை. ஏற்கனவே, கடந்த 2001ல் ஷாங்காயிலும், 2014ல் பீஜிங்கிலும் இம்மாநாட்டை சீனா நடத்தியுள்ளது. ‘ஏபெக்’ மாநாட்டை நடத்தும் வாய்ப்பை பயன்படுத்தி, ஆசியா - பசிபிக் பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு அதிக உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளிக்க சீனா விரும்புவதாக ஷீ ஜின்பிங் தெரிவித்தார்.